# இலவச கம்பியூட்டர்



GB:90p Euro:1.50

# நம்நாடு

பிரதம ஆசிரியர்: தீ.வே.ரா

மலர்: 01 02 - 08 மார்ச் 2002 இதழ்: 019



## Vee Kay Autos

- MOT Servicing
- Brakes Overhauls
- Car Electricals
- All Types of Repairs

48 Belfast Road
London N16 6UH
**Tel: 020 8806 1965**
Fax: 020 8806 0161




# பிரபா கையெழுத்து



# ரணில் திகைப்பு!

## சந்திரிக்காவின் சண்டித்தனம்

## நடிகை தற்கொலை

## உடன்படிக்கையின் தமிழாக்கம்


TILKO ESTATES

கடந்த பத்து வருடங்களாக வீடுகளை வாடகைக்கு வழங்குவதில்
East London, Essex பகுதிகளில்
நம்பிக்கை, நாணயம் மிக்க சேவை வழங்குவதில் முன்னணியில் திகழ்பவர்கள்

* ESTATE AGENTS
* LETTING MANAGEMENT
* PROPERTY MAINTENANCE

**New Branch**
**Bethnal Green**
193 Roman Road
London E2 0QY

**East Ham Branch**
213 High Street North
East Ham, London E6 1 JD
Tel: 020 8472 0029

**Docklands Branch**
607 Comercial Road
London E14 1JD
Tel: 020 7791 1234

**Walthamstow Branch**
252 Hoe Street, Walthams-tow
London E17 3AX

**Web: telko.co.uk Email: info@tilko.co.uk**

www.padippakam.com




# நம்நாடு

வயலில் விளைச்சல் வாராது எனினும்
புயம்செய் வியர்வை பூக்களாய் விரியும்
காலம் கனியாது என்றில்லை கனியும்
நாளை சுமப்போம் சுதந்திரப் பூக்கள் -புதியபாரதி

**நிர்வாக ஆசிரியர்:**
**S. செல்வா**

**பிரதம ஆசிரியர்:**
**T. V. இராசலிங்கம்**

**ஆசிரியர்:**
**ஐ. தி சம்பந்தன்**

**Director of publication:**
S. Selva

**Editor In Chief:**
T.V.Rajalingam

**Editor:**
I.T Sampanthan

1a Sibley grove
Eastham
London E12 6SD
Tel: (020) 8472 2900

**பிரான்ஸ் தொடர்புகளுக்கு:**
**எஸ். சரவணமுத்து**
Tel: 0613 010199



**நம்நாடு பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் அரசியல், கலை விமர்சனங்கள் யாவும் படைப் பாளிகளின் சொந்தக் கருத்தேயன்றி நம்நாடு பத்திரிகையின் கருத்துக்கள் ஆகமாட்டாது. இவ்விதழில் வெளியாகும் விளம்பரங்களில் உள்ள விபரங்களுக்குச் சம்பந்தப்பட்ட விளம்பரதாரர்களே பொறுப்பு. மேற்கூறிய விடயங்கள் எவற்றிற்கும் நம்நாடு பத்திரிகை எவ்வித பொறுப்பும் ஏற்கமாட்டாது. நம்நாடு பத் திரிகையில் வெளியாகும் விடயங்களை முழுமையாகவோ அன்றி பகுதியாகவோ முன் அனுமதிபெற்று மறுபிரசுரம் செய்துகொள்ள முடியும்.**

The **Namnaadhu** is published weekly in UK, Toronto, Ontario Canada, Paris. The views expressed are those of the contributors and do not necessarily reflect the opinion of **Namnaadhu**. The advertisers are responsible for their respective advertisements. **Namnaadhu** will not bear any responsibility.


# நினைந்து நினைந்து நெஞ்சம்...

பண்டா கொடுத்த நோய்க்கு
பண்டா குடும்பத்தில் இருந்து
மருத்துவம் இல்லை என்பது
தெளிவாகியது.

சமாதானப் பெண் புறா
நிதானம் இல்லாமல்
நிலை குலைந்துவிட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை
சரித்துக் கொட்டுவேன் பார் என்று
சன்னத மாடினார் சந்திரிகா.

சட்டவிரோதமென்றார் -
சரிவராததென்றார் -
ஒட்ட நறுக்குவேன் என்றார் -
ஒரு கடிதம் போதுமென்றார் -
தளபதிக்கு கடிதம் போட்டால்
எல்லாம் தானாக உடையும் என்றார் -
காரணம்.....
நான் ஒரு சனாதிபதி என்றார்.
நேற்று முன்தினம்
உரையாற்றியதின் மூலம்
உலகத்தை சி(ரி)க்க வைத்தார்
சந்திரிகா.

எந்த நாடுகள் புலிகளுக்குத் தடை
என்றனவோ அந்தந்த நாடுகள் -
அமெரிக்கா, கனடா, பிரித்தானியா,
இந்தியா, யப்பான், அவுஸ்திரேலியா...
என நீண்டு கொண்டே போகும்
வரவேற்புக்கு மத்தியில்
புத்தி பேதலித்தவராக சந்திரிகா....

புலிகள் இராணுவ பலம்கொண்ட ஒரு
படை.

அது ஒரு குழுவல்ல.

மக்கள் மனங்களை வென்றார்
பிரபாகரன் என பல்லாயிரக்கணக்கான
மக்கள் முன் ஓங்கி ஒலித்தார்
ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்
மஹ்ரூப்.

கடந்தவாரம் -
தீவுப்பகுதியில் சின்னமடு
தேவாலயத்தில் ஆரம்பித்த
பாதயாத்திரை...
தெல்லிப்பழைத் துர்க்கா ஆலயத்தில்
நிறைவு பெற்றிருக்கிறது.

மன்னார், மட்டுநகர், திருமலை, யாழ்,
வன்னி என ஒரு மக்கள் நிலத்தை
உருவாக்கிய விடுதலைப் புலிகளின்
தலைமைத்துவத்தை அங்கீகரித்து
புரட்சி யுகத்தை தமிழினம்
கொண்டாடுகிறது.

அமெரிக்க தூதரகத்திலிருந்து
ஸ்தானிகர் வில்ஸ் நேற்று முன்தினம்
யாழ்ப்பாணத்தில் நின்றார்.

வைத்தியசாலைக்கு ஒரு இலட்சம்
அமெரிக்க டொலருக்கு
மருந்து வகைகளை அன்பளித்தார்.

உலகம் சமாதானத்தையும்,
சரிநிகர் இருப்பையும் நோக்கி
இலங்கைத் தீவைப் பார்க்கையில்
இன்னமும் பண்டா என்ற
பயங்கரவாதக் குண்டானுக்குள்
கையத் துளவினால் இனி
வரப்போவது ஒன்றுமில்லை.

சுதந்திரக் கட்சிக்கு
வாரிசு நானே என்று அநுரா
அடுத்த கோட்பாட்டை
விசுக்கிக் சொண்டார்.

கட்சிக்குள் ஜனாதிபதிக்கு வாரிசாக
உருவாகும் ஒன்றிரண்டு
தலைவர்களின் செல்வாக்கில்
கட்டிழந்து போனார் அநுரா.

ஜே.வி.பி. தான் ஒரு
புத்திஜீவி இயக்கம் என்பதற்கு
அறவே உறவில்லாமல் நகர்கிறது.

பண்டா உருவாக்கிய தீவிரவாதக்
குண்டானுக்குள் பதவி நண்டுக்கு
வலைவிரிக்கிறது.

ரணில் என்ற இந்த நாட்டை
நேசிக்கின்ற-அலங்காரக்
காலிமுகத்திடலுக்கு போடப்பட்ட
வேலியை உடைத்ததின் மூலம்
சிங்கள மக்களின் விருப்புக்கு
விருந்து வைத்த-
போரால் நாராய்க் கிழியும்
அழகுப் பூமிக்கு ஆபத்தில்லாமல்
ஆக்கிக் கொண்ட -
ரணில் என்ற பிரதம மந்திரி
இது வரைக்கும் இல்லாத
ஒரு சிங்களத்தின் தலைவன்
என்பது இலங்கையின்,
உலகப் பந்தின்,
விடுதலைப் புலிகளின் அத்தியாயத்தில்
பதியப்பட்டிருக்கிறது.

இன்னமும் எழுதப்படாமல் இருக்கும்
சமாதானத்தின் சந்நிதானத்தில்,
இனிமேல் நடக்கப் போவதை
இந்த உலகம் அவதானிக்கிறது.

வடகிழக்கின் தாயகத்தில்
வாழும் உரிமைக்குத் தமிழ்ச்சமூகம்
வரைவிலக்கணம் கொடுத்திருக்கிறது.

இராணுவங்களை நவீனப்படுத்துவதும்
விமானங்களில் சமாதானங்களைப்
புதைப்பதும்,
தீ நாக்குகளை அகல விரித்து
தமிழ் நிலத்தை எரிப்பதும்,
பகிடியும் வேதனை தருகின்ற
வாய்ச் சவடால்களை
பாராளுமன்றத்தில் உதிர்ப்பதும்
திமிராலும் தீவிரவாதத்தாலும்
பழக்கப்பட்ட கொழும்புத்
தலைநகர் அரசியலை முறியடித்து,
மரபு ரீதிப் படையென்ற
முத்திரை கொண்ட விடுதலைப்
புலிகளின் சமாதான நகர்வை
இந்த நாடு வரவேற்க வேண்டியது
அவசியம்.

அரசியல் பதவிக் காய்ச்சலுக்கு
இனித் தமிழனை அழிப்பதென்பது
இல்லாத அத்தியாயம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை
எதிர்க்கும் பட்டியலில்,
சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய
முன்னணி, ஜே.வி.பி என்ற
மக்கள் விடுதலை இயக்கத்தோடு
மாதம் ஏழு மில்லயன்
ரூபாக்களை இந்தப் போரின் மூலம்
சம்பளமாகக் கொண்ட
ஈ.பி.டி.பியும் ஒன்று சேர்ந்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தம்,
வடகிழக்கு மாகாணங்களில்
எந்த ஒரு இயக்கத்திற்கும்
ஆயுதம் வழங்கத் தடைசெய்கிறது.

புலிகள் நிலை கொண்டுள்ள
இடங்களில் புலிகளும், இராணுவம்
நிலை கொண்டுள்ள இடங்களில்
படையினரும் மட்டுமே
ஆயுதங்களை வைத்திருக்க
ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

தீவுப்பகுதியை அடக்கு முறைக்குள்
மடக்கி வைத்திருந்த
இராணுவ-தமிழ் குழுக்கள்
நிலைப்பாடு முடிந்து
இயல்பு நிலைக்குத் திரும்ப
வழி பிறக்கிறது.

ஒப்பந்தத்தின் மூலம்
உலகம் மட்டுமல்ல -
ஏகோபித்த தமிழ் மக்களும்
விடுதலைப் புலிகளின்
தலைமைத்துவத்தை
ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சமாதான அத்தியாயத்தை
சிங்களம் ஒதுக்கினால் அடுத்த
அத்தியாயம் சுதந்திர தமிழீழமே.

-தீ.வே.ரா

## சொல்லத்தான் வேண்டும்-நம்நாடன் குறிப்புகள்

தமிழர் தகவல்விழா.

விருது கொடுக்கப்பட்டவர்கள்
எல்லாம் வெற்று மனிதர்கள் அல்ல.

சாதனையின் மறு பக்கங்கள்.

இன்னமும் தோளிலேயே
நித்திரை கொள்ளும் திருவரன்
அலெக்சில் இருந்து..........

எங்கள் முன்னேயிருந்து
கவிபடைக்கும் கந்தவனம்
அவர்களுக்கு அமெரிக்க,
உலகப் பல்கலைக்கழகம் வழங்கிய
கலாநிதிப் பட்டம் வரை
பலர் கௌரவிக்கப்பட்டார்கள்.

நாம் வாழும் கனடிய நாட்டை
உலகக் கிரிக்கெட் போட்டிகளுக்குத்
தகுதி படைக்கச் செய்த
சஞ்சய் கௌரவிக்கப்பட்டார்.

பார்பரா ஹேறால் திரும்பி
சஞ்சயைப் பார்த்த வண்ணம் இந்த
தமிழ் வீரனை வியப்பால் சுமந்தார்.

ஐம்பது வருடப் பத்திரிகைச்
சேவையில் இலண்டனில் இருந்து
வந்த பொன் பாலசுந்தரம் பெற்றார்.

இந்த விருதுகளின் அடையாளத்தைச்
சுமந்தவர்களின் வரிசையில்
இன்னுமொரு குறிப்பேடு நம்நாட்டில்
வெளியாகும்.

ஐந்து மொழிகள் தெரிந்த-
படப்பிடிப்பாளர் நவாவின் மைந்தன்
பதினேழு வயதில் ஒரு பிரமிப்பு.

இங்கே பிறந்து, இங்கே தமிழ் அறிந்து
இங்கே ஒரு பெரும் பாடகி
அனுசுயா சிவலிங்கம்.

இவர்கள் அனைவரையும் நாம்
பாராட்டுகிறோம்.

தமிழன் சாதனையின்
அடையாளம்.

வேதனையின் முடை நாற்றங்களால்
நாங்கள் சிங்களப் பெரும்பூமியால்
விசிறடிக்கப்பட்டோம்.

ஆனால் எங்கள் விழுமியங்களும்,
எங்கள் இருப்பும்
எங்கள் நிலத்தில் மட்டுமல்ல
நாம் எங்கெல்லாம் வாழுகிறோமோ
அங்கெல்லாம் இந்த வெள்ளை மனித
நாடுகளை கொள்ளை கொண்டு
வருகிறோம் என்பதற்கு பார்பரா
ஹேறாலின் பேச்சு பதிலாகியது.

அதிலென்ன விசேடம் என்றால் -
இந்த நாட்டை நாம்
எமது பங்களிப்பால் உருவாக்குகிறோம்

ஆம். இந்த நாட்டுக்கு நாம் நன்றி
உடையவர்கள். இந்த நாட்டில்
நமது பெயரைப் பொறிப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



# சந்திரிகா பின் வாங்கினார்:

## ஒப்பந்தத்தைக் குழப்புவேன் என வந்த செய்தி தவறானது என அறிக்கை

சந்திரிகா மறுபடியும் பின் வாங்கி விட்டார்.

புதன் கிழமை ஜனாதிபதி செயலகம் பத்திரிகையாளர்களுக்கும் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கும் ஓர் அறிக்கையை அனுப்பியது. அதில், இராணுவத் தளபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்புவதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் யுத்த நிறுத்தத்தை தன்னால் ரத்துச் செய்ய முடியும் என்று ஜா.-எல கூட்டத்தில் ஜனாதிபதி

எச்சரிக்கை செய்தார்.

அது சந்திரிகாவுக்கு தன்னுடைய உண்மை நிலையைத் தெளிவுபடுத்தியது.

தென்னிலங்கைக் கட்சிகளுக்கும் அந்த வேண்டுகோளை அவை அனுப்பியுள்ளன.

இதே நேரத்தில் சனிக்கிழமை

அகற்றுகிறார்கள்.

• வன்னிக்கு பொருட்கள் அனுப்பப்படுகின்றன

புலிகள் மேற்கொள்ளும் முயற்சிகள்,

• யுத்த நிறுத்தத்தை கடைப் பிடிக்கும் அறிவுறுத்தல்கள் போராளிகளுக்கு வழங்கப்படுவதுடன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தயாரிப்பு வேலைகள் நடக்கின்றன.

**இன்று அதிகாலை கிடைத்த**
**பிந்திய செய்திப் பக்கம்**

# சனாதிபதி அப்படி ஒரு கடிதத்தை அனுப்பினால்

## அதற்கு கட்டுப்பட முடியாத நிலை ஏற்படும்: தளபதி பலுகல்ல

கூறியதாக வெளியான செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

### அந்த அறிக்கை இது:

யுத்த நிறுத்த உடன்படிக்கையிலுள்ள அம்சங்களில் தமக்கு இணக்கப்பாடில்லையெனக் கண்டால் உடன்படிக்கையை ரத்துச் செய்துவிடப் போவதாக ஜனாதிபதி கூறியதாக செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவ்வாறு கூறவில்லை. தனது கட்சிக் கூட்டத்தில் அவர் உரையாற்றிய போது உடன்படிக்கை தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்றை அமைத்திருப்பதாகவும் அக்குழு அறிக்கை சமர்ப்பித்த பின் அது தொடர்பான அறிக்கையொன்றை வெளியிடவிருப்பதாகவுமே ஜனாதிபதி கூறினார்.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அணுகுமுறைகளில் ஜனாதிபதிக்கு இணக்கப்பாடில்லையாயினும் அதற்கு அவர் எதிரானவர் அல்ல.

அந்த அறிக்கையை சந்திரிகா வெளியிட்டதற்கு ஒரு பின்னணிஉண்டு.

படைத் தளபதிக்கு கடிதம் அனுப்பி ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும் தன் அதிகாரம்பற்றி சந்திரிகா பேசியசெய்தியைக் கேள்விப்பட்டதும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல சந்திரிகாவைச் சந்தித்தார். பலுகல்ல சந்திரிகாவுக்கு விசுவாசமானவர் அவரால் பதவி நீடிப்பு வழங்கப்பட்டவர்.

படையிலுள்ள பெரும்பாலானோர் சமாதானத்தை விரும்புவதாகவும் சமாதான முயற்சியைக் குழப்புவதற்கு ஆதரவளிக்க மறுப்பர் என்றும் பலுகல்ல சந்திரிகாவுக்கு எடுத்துக் கூறினார்.

படையினரும் அவர்களின் குடும்பத்தினரும் சமாதானத்தை வரவேற்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்தின திங்கட்கிழமை பத்திரிகைகளுக்கு கூறினார்.

''தயவு செய்து இராணுவத்தை குழப்பி விடாதீர்கள் சமாதான ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு நீங்கள் இராணுவத்துக்கு கடிதம் எழுதப் போவதாக கூறினீர்கள். அது படையினரைக் குழப்பிவிடும்.'' என்று பலுகல்ல சொன்னார்.

அத்துடன் நிற்கவில்லை.

அத்தகைய கடிதத்தை ஜனாதிபதி தனக்கு அனுப்பினால் தான் அதற்கு கட்டுப்பட்டு நடக்க முடியாத நிலைமை தோன்றும் என்றும்

**சந்திரிகாவின் கடிதக் கதை:**
**இராணுவத் தளபதி எதிர்ப்பு**
**சுதந்திரக் கட்சிக்குள் குழப்பம்**
**எதிர்க்கட்சித் தலைவர்**
**சந்திரிகாவுக்குப் போன் செய்தார்:**
**உங்களுக்கும் நல்லதல்ல**

புதன்கிழமை காலையில் பலுகல்ல பிரதமர் ரணில் விக்கிரமவைச் சந்தித்தார். அப்போது முதல் நாள் மாலை சந்திரிகாவைச் தான் சந்தித்த விடயத்தையும் கடிதம் ஒன்றின் மூலம் யுத்த நிறுத்தத்தை ரத்துச் செய்யப் போவதாக அவர் கூறியதைப் பற்றிப் பேசியதாகவும் சொன்னார்.

அடுத்து தானும் இராணுவமும் பிரதம மந்திரிக்கும் அவரின் அரசாங்கத்துக்கும் விசுவாசமாக நடந்து கொள்ளும் என்று அவர் உத்தரவாதமளித்தார்.

''அதைத்தான் நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். நாடும் அதையே எதிர்பார்கிறது'' என்று ரணில் பதிலளித்தார்.

பலுகல்லவின் எதிர்ப்பை சந்திரிகா எதிர்பார்க்கவில்லை. அதைப் போன்றே தன் கட்சியினரே குழம்புவார்கள் என்றும் எதிர்பார்க்கவில்லை.

எதிர்கட்சித் தலைவராக பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷவும் சந்திரிகாவுக்கு டெலிபோன் செய்து அவரின் கூற்றைக் கண்டித்தார்.

''மக்கள் சமாதானப் பக்கம் நிற்கிறார்கள். நீங்கள் சமாதானத்தைக் குழப்ப முயலுகிறீர்கள் என்ற எண்ணம் மக்களிடையே உருவாகி வருகிறது. அது உங்களுக்கு நல்லதல்ல. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் நல்லதல்ல'' என்று எச்சரித்தார்.

தன் சொந்த கோபதாபங்களுக்காக கனிந்து வரும் சமாதானத்தை சந்திரிகா குழப்பமுயலுகிறார். என்ற கருத்து மக்களிடையே வலுத்துவருகிறது. ஐம்பது சமூக சமய மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாக சமாதான முயற்சிக்கு ஆதரவு கோரி புதன்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டன. ஜே.வி.பி. உட்பட எல்லா

• யுத்த நிறுத்தத்தை கடைப் பிடிக்கும் அறிவுறுத்தல்கள் போராளிகளுக்கு வழங்கப்படுவதுடன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தயாரிப்பு வேலைகள் நடக்கின்றன.

• போராளிகள் படையினருடன் நல்ல உறவை உருவாக்கி வருகிறார்கள

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்த நிரந்தர யுத்த நிறுத்தத்தை அமுல்செய்யயும் நடவடிக்கைகளை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் எடுத்து வருகின்றனர்.

அரசாங்கம் நான்கு முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.:

• ஆயுதங்களைஒப்படைக்மாறு கிழக்கிலங்கையில் உள்ள தமிழ்க் குழுக்களுக்கு படையினர் செவ்வாய்க்கிழமை அறிவித்தனர்.

• வட-கிழக்கிலுள்ள கோயில்கள். பாடசாலைகள் ஆகியவற்றில் படைகளை வாபஸ் செய்யும் நடவடிக்கையைப் படையினர் ஆரம்பித்தனர்.

• கண்டி வீதியைக் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரையும் திறப்பதற்கு உதவும் வகையில் எழுதுமட்டுவாள் பகுதியிலுள்ள றோட்டிலிருந்து நிலக்கண்ணிகளை

• போராளிகள் படையினருடன் நல்ல உறவை உருவாக்கி வருகிறார்கள்.

• கிராம மட்டங்களில் அரசியல் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதே வேளை சிங்களத் தீவிரவாதம் ஜே.வி.பி. தலைமையில் அணிதிரள்கிறது.

### யுத்த நிறுத்த அமுலாக்கம் பற்றி லண்டனில் நோர்வே குழு பாலாவை சந்தித்து பேச்சு

சர்வதேச கண்காணிப்புக் குழுத் தலைவரும் பங்கு

நிரந்தர யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பாகவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள விடயங்களை அமுல்படுத்துவது குறித்தும் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்து நோர்வே சமாதானக் குழு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

புதன் கிழமை நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தியின் போது நிரந்தர யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள சர்வதேச கண்காணிப்புக் குழுவின் தலைவரும் நோர்வே முன்னாள் இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் டிரொன்ட் புளுஹோர்ட்டும் கலந்து கொண்டார்.

நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் செல்ஹேய்ம் தலைமையிலான குழுவே பேச்சுவார்த்தையில் பங்கு பற்றியுள்ளது. 3 மணி நேரம்வரை நடபெற்ற பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்த கண்காணிப்புக்கு அரசு தரப்பிலும் புலிகள் தரப்பிலும் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக லண்டன் செய்திகள் தெரிவித்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களை படிப்படியாக எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இச் சந்திப்பையடுத்து யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டிரொன்ட் புளுஹோர்ட் நாளை மறுதினம் சனிக்கிழமை கொழும்பு வருகிறார்.

கொழும்பு வரும் இவர் பிரதமர் உட்பட அரச பிரதிநிதிகளை சந்தித்து விட்டு மீண்டும் அன்ரன் பாலசிங்கத்தை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



# பிரபா கையொப்பமிட்டுவிட்டார்: கிளிநொச்சியில் இருந்து வெஸ்ற்போர்க் தெரிவித்ததும் திகைத்தார் ரணில்:

கரடுமுரடான நிலக் கண்ணிகள் நிறைந்த சமாதானப் பாதையில் பயணம் செய்வதற்கான முதலாவது அடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போன வியாழக்கிழமை. பெப்ரவரி 21ம் திகதி. எடுத்து வைத்தார்.

அன்று நண்பகல் கிளிநொச்சிக்கு இலங்கை விமானப் படையின் ஹெலிக்கொப்டரில் போயிறங்கிய நோர்வே தூதர் ஜொன் வெஸ்ட்போர்க்.முல்லைத்தீவிலுள்ள பிரபாகரனின் அலுவலகத்துக்கு ஜீப்பில் கொண்டு செல்லப்பட்டார். அவரை பிரபாகரன் வரவேற்றார்.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையே நிரந்தர யுத்த நிறுத்தமொன்றுக்கு வழி செய்யும் ஒப்பந்தத்தின் பிரதியை வெஸ்ட்போர்க் பிரகாரனிடம் கொடுத்தார். பிரபாகரனும் அவரின் ஆலோசகரும் அதை படித்தனர்.

''இதிலுள்ள விவரங்களை பாலா அண்ணை அறிவித்துவிட்டார்'' என்று வெஸ்ட்போர்க்குக்கு பிரபாகரன் சொன்னார்.

''நீங்கள் அதை ஏற்றுக் கொள்கிறீர்களா?'' என்று வெஸ்ட்போர்க் வினவினார்.

''ஆம் இதிலுள்ள வாசகத்தை ஏற்றுக் கொள்கிறேன்'' என்று பதிலளித்தார் பிரபா.

வெஸ்ட்போர்க்குக்கு வடையும் கப்பல் வாழைப்பழமும் நல்ல சூடான கோப்பியும் பரிமாறப்படுகின்றன.

வெஸ்ட்போர்க் அவற்றை ருசித்துச் சாப்பிடுகிறார்.

அந்த நேரத்தில் அவருக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்த பிரபாகரன் தனக்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தின் மூன்று பிரதிகளையும் கையொப்பமிடுகிறார். எழுந்து நின்று அவற்றை வெஸ்ட்போர்க்கிடம் கொடுக்கிறார்.

வெஸ்ட்போர்க்கும் எழுந்து நின்று இரண்டு கைகளிலும் அந்தப் பத்திரங்களை வாங்கிக் கொள்கிறார்.

''நீங்கள் கையொப்பமிடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை கையொப்பம் வாங்க நாளைக்கு வரவிருந்தேன்'' என்றார் வெஸ்ட்போர்க்.

வரலாற்றுத் திருப்பம்

இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்பம் ஏற்பட்டு விட்டது.

கிளிநொச்சியிலிருந்தே வெஸ்ட்போர்க் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கு டெலிபோன் செய்கிறார்.

''பிரபாகரன் கையொப்பமிட்டுவிட்டார்''

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆச்சரியம். திகைப்பு.

''கையொப்பமிட்டு விட்டாரா?''

''ஆம் நான் அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. படித்துப் பாருங்கள் என்று தான் சொன்னேன். அவர் படித்துப் பார்த்துவிட்டு கையொப்பம் போட்டுக்கொடுத்து விட்டார்.'' என்று வெஸ்ட்போர்க் கூறினார்.

பிரபாகரன் கையொப்பமிடுவாரா என்ற சந்தேகத்துடன் தான் அதுவரை இருந்ததாக ரணில் பின்பு கூறினார்.

பிரபாகரன் கையொப்பமிட்ட செய்தியைஅறிந்ததும் ரணில் துரிதமாக இயங்க ஆரம்பித்தார்.

அவர் ஜனாதிபதி மாளிகைக்கு டெலிபோன் செய்து ஜனாதிபதியைத் தான் சந்திக்க விரும்புவதாகச் சொன்னார். அரை மணித்தியாலத்தில் அங்கு போய்ச் சந்தித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரதியை அவருக்க கொடுத்தார்.

சந்திரிகா அதை வாசித்து விட்டு அதிலுள்ள சில பிரிவுகளுடன் தான் உடன்படிவில்லை என்று சொன்னார். அதையடுத்து இருவரும் வாக்குவாதப்பட்டனர். தன்னால் கையொப்பமிடமுடியாது என்று சந்திரிகா கூறிவிட்டார்.

''இந்த அரிய சந்தர்ப்பத்தை நான் நழுவ விடப் போவதில்லை'' என்று சொல்லிவிட்டு ரணில் போய்விட்டார்.

அவர் நேரடியாகப் போய் பௌத்த பிக்குகள் சிலரைச் சந்தித்தார். சோபித்த தேரர் அவர்களில் முக்கியமானவர். அவரிடம் பிரபாகரன் கையொப்பமிட்டு விட்டதாகக கூறினார். அவரின் ஆதரவைப் பெற்றுக் கொண்டார்.

அடுத்து பத்திரிகை ஆசிரியர்களை அவசரமாக அழைத்துபிரபாகரன் கையொப்பமிட்டுவிட்ட செய்தியைக் கூறி அவர்களின் ஆதரவைக் கோரினார். அவர்களிடம் ஒப்பந்தத்தின் பிரதியைக் கொடுத்து தான் அதில் வெள்ளிக்கிழமை கையொப்பமிடப் போவதாக கூறினார்.

அடுத்து அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அக் கூட்டத்துக்கான அறிவிப்பு ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் தான் மந்திரிசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று மறுத்துவிட்டார். அதனால் மந்திரிசபைக் கூட்டம் பிரதம மந்திரியின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் நடத்தப்பட்டது.

மந்திரி சபைக் கூட்டத்தில் ஒப்பந்தத்தில் பிரபாகரன் ஏற்கனவே கையொப்பமிட்டு விட்டதாகவும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் ரணில் அறிவித்தார்.

''இச்சந்தர்ப்பத்தை நான் நழுவவிடப்போவதில்லை நழுவவிட்டால் நாடு பிளவு படுவதை எந்தச் சக்தியாலும் தவிர்க்க முடியாது'' என்று ரணில் திடமாக அறிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ரணில் கையொப்பமிட வேண்டுமென்று அமைச்சரவை தீர்மானித்தது.

வெள்ளிக்கிழமை. பெப்ரவரி 22. காலை ரணில் விக்கிரமசிங்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டார்.

## வரலாற்றுத் திருப்பம்



வவுனியாவில்

வெள்ளிக்கிழமை ரணில் வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.வெள்ளிக்கிழமை பிற்பகல் வவுனியா செயலகத்தில் வைத்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட்டார். தான் கைச்சாத்திட்ட பிரதியை நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்கிடம் கையளித்தார்.

## சமாதான முனையில்....... நம்நாடுபீட பிந்திய ஆய்வறிக்கை

''இதிலுள்ள விவரங்களை பாலா அண்ணை அறிவித்துவிட்டார்'' என்று வெஸ்ட்போர்க்குக்கு பிரபாகரன் சொன்னார்.

''நீங்கள் அதை ஏற்றுக் கொள்கிறீர்களா?'' என்று வெஸ்ட்போர்க் வினவினார்.

''ஆம் இதிலுள்ள வாசகத்தை ஏற்றுக் கொள்கிறேன்'' என்று பதிலளித்தார் பிரபா.

வெஸ்ட்போர்க்குக்கு வடையும் கப்பல் வாழைப்பழமும் நல்ல சூடான கோப்பியும் பரிமாறப்படுகின்றன.

வெஸ்ட்போர்க் அவற்றை ருசித்துச் சாப்பிடுகிறார்.

அந்த நேரத்தில் அவருக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்த பிரபாகரன் தனக்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தின் மூன்று பிரதிகளையும் கையொப்பமிடுகிறார். எழுந்து நின்று அவற்றை வெஸ்ட்போர்க்கிடம் கொடுக்கிறார்.

வெஸ்ட்போர்க்கும் எழுந்து நின்று இரண்டு கைகளிலும் அந்தப் பத்திரங்களை வாங்கிக் கொள்கிறார்.

''நீங்கள் கையொப்பமிடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை கையொப்பம் வாங்க நாளைக்கு வரவிருந்தேன்'' என்றார் வெஸ்ட்போர்க்.

பின்னர் வவுனியா விமானப்படைத் தளத்திலுள்ள வன்னிப் பிராந்திய இராணுவத் தலைமையகத்தில் ஆயிரக்கணக்கான முப்படையினர் மற்றும் பொலிஸார் மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நிரந்தர போர் நிறுத்ததுடன் கூடிய புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்தும் இந்த உடன்படிக்கையில் அரசும் புலிகளும் கைச்சாத்திட வேண்டிய தேவை குறித்தும் இங்கு பிரதமர் விளக்கமளித்ததுடன் இந்த நிரந்தர போர் நிறுத்த காலத்தில் படையினர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எவற்றில் ஈடுபடக் கூடாது எனவும் விரிவாகக் கூறினார்.

''உலக நாடுகள் முழுவதும் இந்த சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக அரசின் பக்கமுள்ளன. உலகின் இந்த நிலைக்கு ஆதரவாக படையினரும் நடந்து கொள்ள வேண்டும்.

''சமாதானப் பேச்சுக்கள் தீர்வொன்றைக் கொண்டு வருமென்ற நம்பிக்கை எமக்குள்ளது. உலக நாடுகள் இதனை அவதானித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் அந்த நாடுகளின் பார்வை அரசின் மீது உன்னிப்பாக இருப்பதால் அரச படையினர் அத்தனை பேரும் இதனை ஏற்றுக் கொண்டு தூரதிருஷ்டியுடன் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.'' என்று சொன்னார்.

ரணில் விக்கிரமசிங்க ஓமந்தையில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிவரை போய்ப்பார்த்தார் கம்பிவேலிக்கு வடக்கே குழுமிநின்ற மக்கள் அவரைப் புன்முறுவலுடன் வரவேற்றனர். இலங்கை அரசாங்க கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் என்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் இரண்டாகப்பிளவு பட்டிருப்பதை நேரில் அவர் பார்த்தார். கொழும்பில் கைச்சாத்திடப் பயந்து அவர் வவுனியாவுக்குப் போனதாக எதிர்க்கட்சியினர் கதை கட்டினர்.

'வவுனியாவில் கையொப்பமிட ஒரு வாரத்துக்கு முன்பே நான் ஒழுங்குசெய்தேன்.'' என்று பிரதமர் செய்தியாளருக்குச் சொன்னார்.

நோர்வேயின் பிரகடனம்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி நிரந்தர யுத்த நிறுத்தத்தை நோர்வே ஒஸ்லோவில் வெள்ளிமாலை பிரகடனம் செய்தது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் அப் பிரகடனத்தை வெளியிட்டார்.

அதன் வாசகம்:

இலங்கையில் 60ஆயிரம் உயிர்களை பலி கொண்ட பரந்த அளவிலான மனித அவலங்களுக்கு பேச்சு வாாத்தை மூலமான தீர்வொன்றைக் காணுவதே இரு தரப்பினதும் முக்கிய குறிகோளாகும்.

பேச்சுவார்த்தைகள் குறித்த மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு போர் நிறுத்தம் உதவும்.

இந்தப் போர் நிறுத்தத்தின் மூலம் பகை நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இரு தரப்பினரும் தமது அர்ப்பண உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் சிங்களவர். தமிழர். முஸ்லிம்கள் உட்பட இலங்கையின் சகல குடிமக்களுக்கும் இயல்புநிலையை மீட்டெடுப்பதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்கின்றனர்.

நோர்வே தலைமையில் நேரடியாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கும் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

இப்போர் நிறுத்த முடிவைச் செய்தவதற்கு அவர்கள் மிகவும் தைரியமான நடவடிக்கைகளை எடுத்தனர். அவர்கள் அரசியல்தீர்வுகளை அடைவதற்கான நீண்ட பயணமொன்றை ஆரம்பித்துள்ளனர். இது இலகுவான ஒன்றாக இருக்கப் போவதில்லை.

இதற்கு துணிச்சலும் திடசங்கற்பமும் அவசியப்படும். இடர்வரவுகளும் நிச்சயமின்மைகளும் தோன்றும். கடினமான தெரிவுகளைச் செய்ய வேண்டியேற்படும். ஆயினும் மோதல் மற்றும் இரத்தஞ் சிந்தலைவிட மோசமான கஷ்டங்கள் இல்லை. சமாதானம் மற்றும் சுபிட்சத்தை விட உயர்வான நன்மைகளும் இல்லை.

சமாதானம் மற்றும் சுபிட்சத்தை நோக்கிய பயணத்தில் இலங்கையின் பிரஜைகளுக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் சர்வதேச சமூகத்தின் ஒருமைப்பாடு அவசியம்.

அது சமாதானத்துக்கும் மீளிணக்கத்துக்குமான அரசியல் மற்றும் நிதி ஆதரவைத்திரட்ட வேண்டும். இந்தக் கடினமான செயல்முறையில் இரு தரப்பினரதும் முயற்சிகளில் நோர்வேயும் உடனிருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இப்பொழுது போர் நிறுத்த உடன்படிக்கையின் மேலும் சில விபரங்களை வழங்க விரும்புகிறேன்.

முதலாவதாக உடன்படிக்கை போர் நிறுத்தத்தின் வழிமுறைகளைப் பற்றி கூறுகின்றது. இவை சகல இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளையும் பூரணமாக நிறுத்துதல் படைகளை விலக்கி தனியாக வைத்துக் கொள்ளுதல் மற்றும் இரு தரப்பையும் சேர்ந்த நிராயுத பாணிகளான படைவீரர்கள் நடமாடுவதற்கு அதிகரித்த சுதந்திரம் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இரண்டாவதாக சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் மற்றும் ஏனையோர் உள்ளடங்கலாக இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் இயல்பு நிலையை மீட்டெடுத்தல் சிவிலியன்களுக்கெதிரான பகை நடவடிக்கைகளை நிறுத்துதல் இராணுவ உபயோகத்துக்கு அல்லாத பொருட்கள் தடையின்றிப் பிரவகித்துச் செல்ல அனுமதித்தல் வீதிகள் புகையிரப்பாதைகளைத் திறத்தல் மற்றும் மீன்பிடி மீதான கட்டுப்பாடுகளைப் படிப்படியாக தளர்த்துதல்.

மூன்றாவதாக நோர்வேயின் தலைமையிலான சிறிய சர்வதேசக் கண்காணிப்புக் குழு. இக்குழுஇருதரப்பினரும் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்றுவது குறித்து சர்வதேச நேரடிக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும்.

ஆயினும் இந்த உடன்படிக்கைக்கு மதிப்பளித்து இரு தரப்பிலும் உள்ள உடன்படிக்கைக்கு எதிராகச் செயற்படுவோருக்கு எதிரான தடை நடவடிக்கை எடுக்க வேண்டியது இரு தரப்பையும் பொறுத்தவிடயமென்பதை இவ்விடத்தில் வலியுறுத்துதல் பொருத்தமாகும். பெப்ரவரி 23 நள்ளிரவு முதல் நிரந்தர யுத்த நிறுத்தம்அமுலிலுள்ளது.

அதை நடைமுறைப்படுத்துவதற்காக முயற்சிகளை அரசாங்கம் எடுத்துவருகிறது. தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கை ஆரம்பித்து விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# வாயைத் திறந்து நாறிக் கொள்ளும் சந்திரிகாவும் அநுரா பண்டாரநாயக்காவும்

## SPOTLIGHT

இவ்வார ஸ்பொட்லைற் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது விழுகிறது.

சந்திரிகா தன்னைச் செய்தியாக்கிக் கொண்டு தன்னையெ அழித்து வருகிறார். அவர் மட்டுமல்ல. அவரின் மல்லி(தம்பி)யும் தன்னை அழிக்கிறார்.

சமாதான முயற்சிக்கு அவர் விளைவிக்கும் இடையூறு 'சமாதானப் பாதையில்' 'அரசியல் அம்பலம்' ஆகிய பகுதிகளில் வெளிச்சம் போட்டு காட்டப்பட்டுள்ளது. அதனால் நான் அதை இதில் தவிர்த்து கொள்கிறேன்.

பாவம் சந்திரிகா. ஏழு ஆண்டுகளாகச் சர்வ அதிகாரத்தையும் அனுபவித்தவர் அவர்.

"நான் அங்கீகரித்து விட்டேன். எனவே அமைச்சரவை அங்கீகரித்துவிட்டது" என்று அமைச்சர்களுக்கே கூறி தன்னுடைய ஆட்சியை நடத்தியவர் சந்திரிகா.

இப்போது ஓரம் கட்டப்படுகிறார்.

அவருக்கு அதைப் பொறுத்துக் கொள்வது கொஞ்சம் கஷ்டம்தான்.

நோர்வேகாரரும் அவரைக் கணக்கிலொடுப்பதில்லை. சர்வதேச சமூகமும் கவனிப்பதில்லை. அவரிடம் புரிந்துணர்வு ஒப்பந்த வரைபைக் காட்டுவதைக் கூட நோர்வேகாரர் தவிர்த்துக் கொண்டனர்.

இந்த அறிக்கையை வாசியுங்கள். இதை ஒஸ்லோவில் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் கார்ஸ்டன் லெப்சுவிக் ராய்ட்டர் செய்திச் சேவைக்கு வெளியிட்டார்.

"அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே தோன்றியிருக்கும் வேறுபாடுகளை அவதானித்து வருகிறோம்.

"நாம் பரிசீலனைக்கு எடுத்திருக்கும் அரசியல் நிலைவரங்களில் இப் பிரச்சினை ஒரு பகுதியே ஆனால் இலங்கை அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையே எந்தவித சமரச முயற்சியிலும் நாங்கள் ஈடுபடப் போவதில்லை."

## இடையூறுகள்

சந்திரிகாவும் இலேசுப்பட்டவரல்ல. அவரும் தன்னாலியன்ற இடையூறு களை விளைவித்துவருகிறார். ரணிலின் அமைச்சரவை விரிவாக்க முயற்சியை ஐந்து தடவைகள் அவர் முறியடித்துவிட்டார். கடைசியாக திங்கட்கிழமை தன் கைவரிசையைக் காட்டினார்.

ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி செயலகம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் எடுக்கவுள்ள எட்டு அமைச்சர்களுக்கும் சமுத்தி அமைச்சராக பதவியேற்கவிருந்த எஸ்.பி.திசாநாயக்காவுக்கும் டெலிபோன் செய்து திங்கட்கிழமை பதவிப் பிரமாணம் செய்ய ஜனாதிபதி மாளிகைக்கு வருமாறு அறிவித்தது.

ஆனால் ஒரு நிபந்தனை.

அவர்கள் தனித்தனியாக வரவேண்டும். மனைவி மக்களைக் கூடக் கூட்டிக்கொண்டு வரக்கூடாது.

"நான் பதவிப்பிரமாணம் எடுப்பதை என் மனைவி பார்த்து மகிழக் கூடாதா?" என்று "வாயடிக்கும் அரசியல்வாதி" என்று பெயர் பெற்றுவிட்ட டாக்டர் ராஜித சேனரத்தின கேட்டார்.

"நீங்கள் முன்பு அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சராகப் பதவியேற்றபோது பார்த்து மகிழ்ந்தது போதாதா?" என்று ஜனாதிபதி செயலக அதிகாரி கேட்டார்.

அந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறு அமைச்சர்கள் பிரதமர் ரணிலுக்கு சொல்லிக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி செயலகம் மீண்டும் அமைச்சர்களுக்கு டெலிபோன் செய்தது.

"திங்கட்கிழமை பதவிப் பிரமாணம் செய்ய முடியாது. ஜனாதிபதி கொழும்பில் இருக்க மாட்டார்"

ஞாயிற்றுக் கிழமை அவர் அனுராதபுரத்துக்குப் போனார். வியாழக்கிழமை வரையும் அனுராதபுரத்திலேயே தங்கியிருக்க அவர் திடீரென முடிவு செய்துவிட்டார்.

"வியாழக்கிழமை பதவிப் பிரமாணம் செய்ய வாருங்கள்" என்றும் ஜனாதிபதி செயலகம் தன் டெலிபோன்அழைப்பில் கூறியது.

## மீண்டும் கோல்

திங்கட்கிழமை மீண்டும் அமைச்சர்களுக்கு டெலிபோன் கோல் வந்தது.

"அனுராதபுரத்துக்கு வந்தீர்கள் என்றால் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதாக ஜனாதிபதி சொல்லச் சொன்னார்" என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஆத்திரமடைந்த அமைச்சர்கள் அனுதாரபுத்திற்கு போக மறுத்து விட்ட னர்.

"தன்னைத் தேடி எங்களை வரச் செய்கிறார். நாங்கள் போகக்கூடாது" என்று எஸ்.பி. சொல்லிவிட்டார். ஒருத்த ரும் போகவில்லை.

வியாழக்கிழமை ஜனாதிபதி என்ன கூத்தடிக்கிறாரோ தெரியாது.

ஜனாதிபதிக்கு எஸ்.பி. மீது கடும் கோபம். தன் அரசாங்கத்தைப் பதவியிலிருந்து கவிழ்த்து ரணிலைப் பிரதம மந்திரியாக்கியவர் அவர் தான் என்று சந்திரிகா கருதுகிறார்.

எஸ்.பி நல்ல ஓர்கனைசர். ஐம்பதினாயிரம் பேரைக் கொண்டுவந்து கொழும்புக் கோட்டையை முற்றுகையிடுவேன் என்று சொன்னால் அதைச் செயலில் காட்டுவார். அவர் சமுர்த்தி அமைச்சராகி நாட்டின் வாலிப சமுதாயத்தினருடன் தொடர்பு வைத்திருப்பதை சந்திரிகா விரும்பவில்லை.

அமைச்சர்கள் ராஜித சேனரத்தினவையும், ரவி கருணாநாயக்கவையும் சந்திரிகாவுக்கு பிடிக்காது. ராஜித சந்திரிகாவின் கணவர் விஜய குமாரதுங்கவின் நண்பர். அவர் ஆரம்பித்த ஸ்ரீலங்கா மகாஜன கட்சியின் முக்கியஸ்தர். விஜயவின் மரணத்தையடுத்து சந்திரிகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு திரும்பிய போது ராஜித அனுராபண்டாரநாயக்காவுடன் யுஎன்பிக்கு போனார். அதன் பின்பு சந்திரிகாவைக் கண்டித்துப் பேசுவதை தன் அரசியலாக்கிக் கொண்டார்.

ரவி கருணாநாயக்க அத்துலத்முதலியின் கையாள். அத்துலத்முதலி இறந்த பின்னர் யுஎன்பியுடன் இணைந்தார்.

அவர்களை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக்கினால் அமைச்சரவைக் கூட்டங்களில் அவர்கள் சந்திரிகாவைக் கண்டிப்பர். அதைத் தவிர்க்க சந்திரிகா விரும்புகிறார்.

## அனுராவின் பேச்சு

இந்தப் பிரச்சினைகள் போதாதென்று அவரின் செல்லத் தம்பி அனுரா புதிய பிரச்சினையொன்றை ஏற்படுத்தியுள்ளார்.

அச் சர்ச்சையை உருவாக்கிய பேச்சு இது தான்:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பு குறைந்த பட்சம் இன்னுமொரு தசாப்தத்திற்குப் பண்டாரநாயக்க குடும்பத்தினரிடமே இருக்க வேண்டும். கட்சியின் அடுத்த தலைவர் நானே. எனக்குப் பிறகு யார் வேண்டுமானாலும் தலைவராக வரலாம். எனது தந்தை ஆரம்பித்த கட்சியின் தலைமைத்துவம் பண்டாரநாயக்க குடும்பத்தினரிடமே இருக்கவேண்டும்.

சுதந்திரக் கட்சியை எனது தந்தை எஸ்.டபில்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆரம்பித்தார். கட்சிக்காகவே தனது உயிரையும் தியாகம் செய்தார். அதன் பின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்பை எனது தாயார் ஏற்றுக் கொண்டார். சிறிமாவோ பண்டாரநாயக்க உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற புகழையும் பெற்றுக் கொண்டு மூன்று தடவைகள் நாட்டின் பிரதமராக பதவி வகித்துள்ளார்.

எனது தாயாருக்குப் பின்னர் கட்சித் தலைமைப் பொறுப்பை எனது சகோதரி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக் கொண்டார். அவர் மக்களின் வாக்குப் பலத்தால் இரண்டு தடவைகள் நாட்டின் ஜனாதிபதியாக தேர்தெடுக்கப்பட்டார்.

> இலங்கையின் ஜனாதிபதியாக வரும் ஆசையுள்ள மஹிந்த, சந்திரிகா போகும் அரசியல் பாதை தன் வருங்காலத்துக்கு ஊறுவிளைவிக்கும் என்று கருதுகிறார். அவரும் அவருடைய ஆதரவாளர்களும் சந்திரிகா வின் தலைமைத்துவத்துக் குச் சவாலாக வளர்ந்து வருகிறார்கள்.

அவருக்குப் பின்னர் கட்சியின் தலைமைத்துவம் எனக்கே கிடைக்கவேண்டும். கடந்த பொதுத் தேர்தலில் கூட சுதந்திரக் கட்சியின் சார்பில் மிகப் பெரும்பான்மையான விருப்பு வாக்குளைப் பெற்றவன் நான் மட்டுமே. எனக்கு இரண்டரை லட்சம் விருப்பு வாக்குகள் கிடைத்தன. அவை பண்டாரநாயக்க பெயருக்காக கிடைத்தவை.

எனது சகோதரிக்குப் பின்னர் கட்சித் தலைமைப் பதவிக்கு நான் போட்டியிடுவேன். நிச்சயமாக அதில் வெற்றிபெறுவேன். இந்தியாவில் சோனியா காந்தி எப்படி காங்கிரஸ் கட்சியின் தலைவரானார். அவருக்குள்ள ஒரே தகுதி காந்தியின் பெயருக்காகவே காங்கிரஸ் கட்சி அவரைத் தலைவியாக ஏற்றுக் கொண்டுள்ளது.

## எனக்குப் பின்னால்...

இந்த நாட்டின் தனியே சிங்கள மக்களின் கட்சி என்று உறுதியாக சொல்லக் கூடிய ஒரே கட்சி சுதந்திரக் கட்சி மட்டுமே. அதனைப் பெற்றெடுத்தவர் எனது தகப்பனார். இன்னும் ஒரு தசாப்தத்திற்கு தந்தையின் பெயரை காப்பாற்ற நான் உறுதி பூண்டிருக்கிறேன்.

எனக்குப் பிள்ளைகள் கிடையாது.



Chandrika Kumaratunge

எனது சகோதரி சுனேத்திராவுக்கும் பிள்ளைகள் கிடையாது. சிறிய சகோதரி சந்திரிகாவின் பிள்ளைகளும் அரசியலுக்கு வரப்போவதில்லை. எனக்குப் பிறகு எவருக்கும் கட்சித் தலைவராக வர முடியும். அதற்கு இன்னும் ஒரு தசாப்தம் பொறுத்திருக்குமாறு கட்சி உறுப்பினர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அதுவரையில் தலைமைப் பதவியை நான் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.



Anura Bandaranaike

எங்கிருந்தோ வந்த முகவரியில் லாத சிலரால்தான் இம் முறை எமது கட்சி தோல்வி கண்டது. சந்தர்ப்பவாதிகளுக்கு இடம் கொடுப்பதன் பலனையே இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

2006 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நானே நிச்சயமாக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன் என்பதை உறுதியுடன் தெரிவிக்கிறேன்.

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து நான் மீண்டும் எனது தந்தையின் கட்சிக்கு வந்தது அவரின் பெயரைக் காப்பாற்றுவதற்காகவே. எனது சகோதரிக்குப் பின்னர் கட்சியைக் காப்பாற்ற பண்டாரநாயக்க ஒருவர்தேவை என்பதை உணர்ந்தே மீண்டும் திரும்பி வந்தேன்.

கட்சி தேர்தலில் தோல்வி கண்டால் எனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி தருவதாக சகோதரி ஜனாதிபதி சந்திரிகா என்னிடம் உறுதியளித்திருந்தார். ஆனால் அது நடக்கவில்லை. கவலை தரக் கூடிய விடயம் தான். ஆனாலும் கட்சிக்குள் பிளவு ஏற்படக் கூடாது என்பதற்காக பொறுமை காத்து வருகிறேன்.

எதிர்க்கட்சித் தலைராக வந்தவர் ஒரு மாதம் கூட இருக்கவில்லை. பதவியை இராஜிநாமாச் செய்வதற்கு கூட அவர் வெளியே தலைகாட்டவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்பது கூடத் தெரியவில்லை. அவருக்கென்ன நடந்துவிட்டது என்பது புரியாத புதிராகவே இருக்கிறது என்று அநுர பண்டார நாயக்க கூறியுள்ளார்.

பேச்சின் முடிவில் மஹிந்த ராஜபக்ச தனக்கு உதவியாளராக இரண்டாம் இடத்தில் இருக்கலாம் என்றார்.

மஹிந்த அப்பேச்சைக் கடுமையாக ஆட்சேபித்துள்ளர்.

"அனுராவுன் பேசுகிறேன.." என்று சந்திரிகா நிலைமையைச் சமாளிக்க முயல்கிறார்.

இலங்கையின் ஜனாதிபதியாக வரும் ஆசையுள்ள மஹிந்த, சந்திரிகா போகும் அரசியல் பாதை தன் வருங்காலத்துக்கு ஊறுவிளைவிக்கும் என்று கருதுகிறார். அவரும் அவருடைய ஆதரவாளர்களும்சந்திரிகாவின் தலைமைத்துவத்துக்குச் சவாலாக வளர்ந்து வருகிறார்கள்.

www.padippakam.com



# படகில் வந்து படையினருடன் பேசி சிற்றுண்டி உண்டு மகிழ்ந்த புலிகள் குருநகர் இறுங்குதறையில் சம்பவம்

## வட தமிழீழக் கடிதம்

# வன்னியூடாக இதுவரைக்கும் 2000 சைக்கிள்கள், 200 மோட்டார் சைக்கிள்கள பத்து பார வாகனங்கள் சென்றன

வட தமிழீழக் கடிதம்

இவை செவ்வாய்க்கிழமை நடந்த சம்பவங்கள்.

யாழ்ப்பாணக் குடாக்கடலில் உள்ள கல்லடி என்னும் இடத்தில் இருந்து வள்ளம் ஒன்றில் காலை 11 மணியளவில் குருநகர் இறங்குதுறைக்கு அருகே வந்த விடுதலைப் புலி உறுப்பினர் அங்கு பணியில் இருந்த படையினருடன் சிநேகபூர்வமாக அளவளாவித் திரும்பினர். சந்திரன் என்பவர் தலைமையில் ஆயுதமின்றி வந்த எழுவர் கொண்ட குழுவினர் குருநகர் இறங்குதுறைக்குச் சமீபமாக வள்ளத்தில் இருந்தவாறே படையினருடன் 'வோக்கி டோக்கியில்' சிங்களத்தில் பேசினர். படையினர் அக்குழுவினரைக் கரைக்கு அழைத்து சிற்றுண்டி வழங்கி கௌரவித்தனர்.

இந்தச் சம்பவம் முருங்கனில் நடந்தது. மன்னார் முருங்கன் பகுதியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எண்மர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். முருங்கன் பகுதியில் வான் ஒன்றைத் தாங்கள் மறித்துச் சோதனை செய்ததாகவும் அதில் பயணம் செய்தவர்களிடம் ஆறு குண்டுகளும், சயனைட் வில்லைகளும் இருந்ததாகவும் முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் குறித்து மன்னார் பொலிஸாருக்கும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

நிரந்திர யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து வட தமிழீழத்தில் உருவாகிவரும் புதிய நிலைமையை இச்சம்பவங்கள் சுட்டி நிற்கின்றன.

எரிபொருள் கிடைக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஒரு சுமுகமான சூழ்நிலை தோன்றியுள்ளது. பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளை பூரணமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக நிலவி வந்த எரிபொருள் தட்டுப்பாடு தற்போது படிப்படியாக நீங்கி வருகின்றது. இதை முற்றாக நீக்கி எரிபொருள் குடாநாட்டு மக்களுக்கு தாராளமாகக் கிடைக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துவருகிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களை தினமும் காலை 7மணி முதல் மாலை 6.30 மணிவரை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

விவசாயிகளுக்குப் போதிய அளவு மண்ணெண்ணையை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அமெரிக்க உதவி

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். அமெரிக்க அரசினால் அண்மையில் வழங்கப்பட்ட வைத்திய உபகரணங்களை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

அதன்பின் உரையாற்றிய வில்ஸ்: இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள சுமூகமான சூழ்நிலை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயம் கடந்த காலங்களில் இருந்ததை விடத் தற்பொழுது இந்த நாட்டில் நல்லதோர் அமைதிச் சூழல் ஏற்பட்டுள்ளது. அதையிட்டு அமெரிக்கா பெருமகிழ்ச்சி அடைகிறது.

இந்த வைத்தியசாலைக்கு எமது நாட்டினால் வழங்கப்பட்ட வைத்திய உபகரணங்கள் தற்பொழுது இங்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்திலும் இதேபோன்று பல உதவிகளைச் செய்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். அதற்கு இந்த அமைதிச் சூழ்நிலை மேலும் வழிவகுக்கும் என்று நம்புகிறோம்." ன்று தெரிவித்தார்.

நாடெல்லாம் புலிகளை வரவேற்று மக்கள் கூட்டணி




கேதீஸ்வரத்தில் சிவராத்திரி

திருக்கேதீஸ்வரத்தில் இம்முறை சிவராத்திரி விழாவை சிறப்பாக நடத்துவதற்கான ஆயத்தப் பணிகள்துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மன்னாரிலிருந்து ஆலயத்திற்கான வீதி திருத்த வேலைகள், மின்சார வழங்கல் நடவடிக்கைகள் போன்றன மேற்கொள்ளப்படுவதுடன், மக்களின் நலனோம்பு தேவைகளான உணவு, குடிதண்ணீர் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் பல்வேறு அமைப்புக்கள் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. இவ்விழாவில் யாழ்மக்கள் கலந்துகொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வின் நேரடி அஞ்சல் சேவைகளை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் - இலங்கை வானொலி தமிழ் சேவையும் மேற் கொள்ளும்.

சைக்கிகள்களில் வன்னிக்கு

வன்னிக்கான பொருளாதாரத்தடை தளர்த்தப்பட்டதையடுத்தும் கொழும்பு-கண்டி ஏ-9 வீதி பெப்ரவரி 15ம் திகதி களிநொச்சிவரை திறக்கப்பட்டது. கடந்த 10 நாட்களில் 1800 பைசிக்கிள், 207 மோட்டார் சைக்கிள்கள் பார வாகனங்கள் 10 வன்னிப் பகுதிக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

54.820 லீட்டர் பெற்றோல், 142.375 லீட்டர் டீசல், 332.815 லீட்டர் மண்ணெண்ணெய் 11503 பேக் சீமெந்து, 5.150 கிலோ கிராம் இரும்புக் கம்பிகளும் வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

மருந்து வகைகள் உட்பட அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் தாராளமாக வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. ஓமந்தை ஊடாக திங்கள் முதல் வெள்ளிவரை மக்கள் வன்னிப் பகுதிக்கு சென்றுவர அனுமதிக்கப்படுகின்றனர். எரிபொருட்கள் சீமெந்துப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு வன்னிப் பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தொவித்தார்.

அமைச்சர்கள் வருகை

மூன்று அமைச்சர்கள் இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர். அவர்கள் யாழ். பல்கலைக் கழகத்திலும், யாழ். செயலகத்திலும் நடைபெற்ற கலந்துரையாடல்களில் பங்கேற்றனர்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கல்வி தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சிக்கான அமைச்சர் கபீர் காசிம் கலந்துகொண்டார்.

யாழ். செயலகத்தில் நடந்த கலந்துரையாடலில் இளைஞர் விவகாரங்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ, சூழலியல், இயற்கை வளங்கள் பிரதியமைச்சர் இந்திக பண்டாரநாயக்கா, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், மாத்தளை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க பிறேமதாஸ ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இன்று யாழ்மண் கல்வியில் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அமைச்சர் கபீர் காசிமிற்கு எடுத்துரைத்தார்.

யாழ். குடாநாட்டில் விளையாட்டுத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ கூறினார்.

"குடாநாட்டில் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானம் அமைப்பது தொடர்பாக நாம் ஆலோசித்து வருகின்றோம். அதற்கு முன்னர் துரையப்பா விளையாட்டரங்கை சகல வசதிகளுடனும் அபிவிருத்தி செய்யவுள்ளோம். யாழ்.குடாநாட்டு இளைஞர்கள் பயிற்சிகளை மேற்கொள்ள உள்ளக அரங்கு ஒன்றும் விரைவில் அமைக்கப்படும்." என்று வெர் கூறினார்.

புலிகள் பெயரில் கப்பம்

புலிகளின் பெயரைப் பயன்படுத்திக் கப்பம்கேட்ட மூவர், தமது குட்டு அம்பலமானதைத் தொடர்ந்து தம் முயற்சியைக் கைவிட்டுத் தப்பி ஓடிய சம்பவம் திங்கட்கிழமை சுன்னாகத்தில் நடைபெற்றது.

சுன்னாகத்திலுள்ள விவசாய சம்மேளனமொன்றின் செயலாளருடைய வீட்டுக்குப் போன இருவர் தாம் புலிகள் எனக் கூறி, சம்மேளனத்தில் ஊழல் நடைபெற்றதாகவும், அதுபற்றித் தமக்குப் புகார்கள் வந்துள்ளதாகவும் கூறினர். பின்னர் தமக்குப் பணம் தரவேண்டுமென வற்புறுத்தினர். செயலாளர், பொருளாளரை அழைத்துவந்து இருவருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அவர்களின் விசாரணைக்கு முகம்கொடுக்க முடியாமற்போகவே திருட்டுப் பேர் வழிகள் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பியோடினர். அவர்கள் வெளியில் நின்ற ஒருவருடன் சேர்ந்து தப்பி யோடியதாகத் தெரிகிறது.

www.padippakam.com



# சாந்த என்ற கொலைஞனாக ரணசிங்க

ஜனவரி 5. 2000 அன்று காலை 8.30 மணியளவில் தான் குமார் பொன்னம்பலம் வீட்டுக்குப் போனதாகவும் கதவில் தட்டியதும் அவ்வீட்டு வேலைக்காரக் கிழவன் வந்ததாகவும் தன்னை சாந்தா என்று அறிமுகம் செய்ததாகவும் துப்பறியும் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நுவான் வேதசிங்கவுக்கு சுகத் ரணசிங்க சொல்லுகிறான். தன்னை சாந்த என்றே குமாருக்குத் தெரியும் எனவும்

## குமாரைக் கொல்ல பெலயீனமானவனாக மாற்றிய கொலைகாரர்

அவன் கூறுகின்றான். வேலைக்கார கிழவன் உள்ளே போய் குமாரிடம் கேட்டுவிட்டு வந்து கதவைத் திறந்து ரணசிங்கவைஉள்ளே போக அனுமதிக்கிறான். ''ஒரு நிமிடத்தில் வாறேன்' என்று சொல்லிவிட்டு உள்ளே போன குமார் உடுத்துக் கொண்டு ஐந்து நிமிடங்களுக்குள் வருகிறார். இருவரும் குமாரின் பென்ஸ் காரில் வெள்ளவத்தைக்குப் போகிறார்கள். வழியில் ஒரு இடத்தில் கார் நிற்கிறது. குமாரின் செல்போனை ரணசிங்க வாங்கி அதில் டெலிபோன் செய்கிறான். இராமகிருஷ்ண றோட்டால் கார் போகிறது. எதிரே ஒரு பெண் வருகிறார். அவரைக் கண்டதும் குமார் காரை குறுக்கு றோட்டான இராமகிருஷ்ண மாவத்தைக்குள் திருப்புகிறார். வேதசிங்கவுக்கு தொலைபேசியில் ரணசிங்க சொன்ன கதையை இந்த இடம் வரையும்போன வாரம் தந்தோம். அந்த இடத்தில் இருந்து தொடர்வோம்.

வேதசிங்க: இராமகிருஷ்ண மாவத்தைக்குள்ளே

## பிசாசுகளின் பின்னால் சென்ற குமாரை யார் மன்னிப்பார்கள்?

யல்லவா காரைத் திருப்பினார்.

ரணசிங்க: ஓம் சேர். அவர்கள் வரும்வரை இதற்குள் நிற்போம் என்று சொன்னார். ஓகே. என்றேன். பெண்ணைக் கண்டு விட்டுத் தான் இதற்குள் காரைத் திருப்பினார்.

வேதசிங்க: பெண் வந்திராவிட்டால் நேரே போயிருப்பீர்கள்?

ரணசிங்க: ஓம் சேர். அந்த இடத்துக்குப் போயிருப்போம். அதற்கான உத்தரவை அவர் கொடுத்துவிட்டார். போன் செய்து சொன்னார்.

வேதசிங்க: போனில் என்ன சொன்னார்?

ரணசிங்க: எனக்கு அது தெரியாது சேர். அவர் தமிழில் பேசினார்.

தேவசிங்க: அவர் டெலிபோன் செய்து தான் இராமகிருஷ்ண றோட்டில் நிற்பதாகக் கூறினார்?

ரணசிங்க: ஓம் சேர். பிறகு. ''எப்படி? அந்தப் பொம்பிளை வடிவானவள் என்ன?'' என்று அந்தப் பெண் பற்றிக் கேட்டார். நான் அவர்களை அங்கே வரும்படி சொல்லியிருந்தேன் சேர்.

வேதசிங்க: அவர்கள் உங்களைப் பின் தொடர்ந்து வருகிறாகள் என்பது உனக்குத் தெரியுமல்லவா?

ரணசிங்க: ஓம் சேர். அவர்கள் அங்கு வந்து சேர்ந்ததைக் கண்டேன். அவர்களுடன் நான் பேசும் வரை அங்கு நிற்குமாறு சொன்னேன்.

வேதசிங்க: அவர்(குமார்) அந்தப் பெண்ணைப் பின் பக்கமாகப் பார்த்து கொண்டிருந்தார்.

ரணசிங்க: ஓம் சேர். அவர் காரின் முன்பக்கமாக அப் பெண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தார்.அவர்கள் காரின் பின் பக்கமாக வந்தனர்.

வேதசிங்க: நீ போய் அவர்களுடன் பேசினாயா?

ரணசிங்க: இல்லை சேர். நான் அவரிடம் (குமாரிடம்) கொஞ்சம் பொறுத்திருக்கும்படி சொல்லிவிட்டு எங்கள் ஆட்களை நோக்கிப் போனேன்.

வேதசிங்க: யார் வந்தார்கள். சமன் வந்தார் வேறு யார் வந்தார்கள்.

ரணசிங்க: (மெளனம்)

வேதசிங்க: மற்றவர் யார் ? சுஜித்தா?

ரணசிங்க: ஓம் சேர்.

இருவரும் சுட்டனர்

வேதசிங்க: அவரைச் சுட்டது யார்?

ரணசிங்க: இரண்டு பேரும் சுட்டார்கள்.சேர்.

வேதசிங்க: என்னத்தால்? பிரவுணிங் அல்லது (தெளிவில்லை)

ரணசிங்க: கூறிய பதில் கேட்கவில்லை.

வேதசிங்க: பிஸ்டலாலை சுட்டார்கள் என்று நினைக்கிறேன்.

ரணசிங்க: இல்லை சேர். இரண்டாலையும் சுட்டார்கள். ஒரு பிரவுணிங். மற்றது 38 பிஸ்டல்.

வேதசிங்க: பிரவுணிங்காலையா சுட்டார்கள்?

ரணசிங்க: (தெளிவில்லை) மகாத்தையாவினுடையது.

வேதசிங்க: ஓம். அதைப் பற்றிக் கேட்க நினைத்தேன். அந்த இடத்தைப் பார்க்கலாமா?

ரணசிங்க: சொன்ன பதில் கேட்கவில்லை.

வேதசிங்க: சரிசரி. சுட்டபின்பு நீங்கள் எல்லோரும் நேரே நடந்து போனீர்களா? அல்லது மற்ற வழியால் போனீர்களா?

ரணசிங்க: அவர்கள் ஓடிப் போனார்கள். அவர்கள் பயந்து நடுங்கி விட்டனர்.

வேதசிங்க: மடையர்கள். அவர்கள் வரவே பயந்தார்களா?

ரணசிங்க: ஓம் சேர். பயந்து போனார்கள். போன பிறகு செல்போன் ஞாபகம் வந்தது. அவர்கள் முதலில் ரத்வத்தை மாத்தையாவைச் சந்திக்கப் போனார்கள். அவரிடம் போய்ச் சொன்னார்கள். அப்போதுதான். எனக்கு செல்போன் ஞாபகம் வந்தது. நான் போய்ச் செல்போனை எடுத்துக் கொண்டு வருகிறேன் என்று அவர்களிடம் சொல்லிவிட்டு திரும்பிப் போனேன்.

வேதசிங்க: உடனடியாகவா?

ரணசிங்க: அரை மணித்தியாளத்துக்குப் பிறகு சேர். பம்பலப்பிட்டிக்குப் போனேன் அவர்கள் என்னுடன் வரப் பயந்தார்கள். நான் செல்போனை எடுத்துக் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுத் தனியாகத் தான் திரும்பிப் போனேன்.

**Expose**
**நம்நாடு செய்திப்பீட**
**ஆய்வு**

வேதசிங்க: அதை டக் என்று எடுத்துப் போட்டாய்? அது பொக்கற்றுக்குள் கிடந்ததா?

ரணசிங்க: ஓம் மேல் பொக்கற்றுக்குள் கிடந்தது.

வேதசிங்க: நீ சங்கிலியை அறுத்ததாக அங்கு நின்றவர்கள் நினைத்தார்கள். அவர்கள் என்ன

> **வேதசிங்க: நீ சங்கிலியை அறுத்ததாக அங்கு நின்றவர்கள் நினைத்தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள்.**
> **ரணசிங்க: அவர்கள் என்னுடன் சண்டைக்கு வந்தனர். நான் இப்படியான எழிய வேலை செய்யமாட்டேன் என்று சொன்னேன்.**

சொன்னார்கள்.

ரணசிங்க: அவர்கள் என்னுடன் சண்டைக்கு வந்தனர். நான் இப்படியான எழிய வேலை செய்யமாட்டேன் என்று சொன்னேன்.

வேதசிங்க: ரணசிங்க. அந்த செல்(போன்) நீ எறிந்த இடத்தில் இன்னும் கிடக்குமா? எங்கே எறிந்தாய்?

ரணசிங்க: பாலத்துக்கு கீழே.

வேதசிங்: செக் பொயின்றைத் தாண்டியதும் இடது பக்கம் வரும் பாலம் தானே?

ரணசிங்க: சி.ஆர் மைதானத்தைத் தாண்டி என்னுடைய வீட்டை நோக்கிப் போகும் போது வரும் புதிதாக கட்டப்படும் பாலம் சேர். என்னுடைய வீட்டுக்கு வலது பக்கமாக 10 அடி தூரத்தில் உள்ளது.

வேதசிங்க: சிஆருக்கு வலது பக்கத்தில் உள்ளது. பாலத்தின் நடுப் பகுதியில் போட்டாயா?

ரணசிங்க: ஓம் சேர்.

வேதசிங்க: அது அங்கை தான் கிடக்க வேண்டும். என்ன?

ரணசிங்க: தெரியாது. அங்கே கிடந்தாலும் கிடக்கலாம்.

வேதசிங்க: ஓ. இன்னோரு விடயம். இதைப் பற்றி விசாரிப்பதை நிறுத்தும்படி மாத்தையாவுக்கு ஒரு டெலிபோன் கோல் வந்தது. இராணுவம் தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேணும் என்று யாரோ சொன்னார்கள். அந்தக் கோலைத் தந்தது யாராகவிருக்கும்?

ரணசிங்க: எனக்குத் தெரியாது சேர். ரனபாகுவின் வேலையாக இருக்கும் என்று பேப்பர்களில் வந்திருந்தது.

வேதசிங்க: ஓம். நானும் பார்த்தன். அது யார் என்று உனக்குத் தெரியுமா?

ரணசிங்க: எனக்குத் தெரியாது(கேட்கவில்லை) அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு அல்லது எதிர்க் கட்சிலுள்ளவர்களுக்கு ஏதாவது நடந்தால் உங்களுக்கு ஏன் சேர். நான் பொய் சொல்ல வேணும் பத்திரிகையிலுள்ளவர்கள் எங்களுக்கு ஆளுக்கு 5 லட்சம் கிடைப்பதாக சொல்லுகிறார்கள்(தெளிவில்லை) எங்களைத் திட்டினார்

வேதசிங்க: சொந்தக் கோபத்தைத் தீர்ப்பதற்காக இதைச் செய்திருப்பார்களா?

ரணசிங்க: இல்லை சேர். சொந்தக் கோபம் சம்பந்தப்பட்டதல்ல. எனக்கு அவரை(குமாரை) சரியாகத் தெரியாது. அவர் எங்களைத் திட்டியிருக்கிறார்.

வேதசிங்க: எங்களை என்று யாரைச் சொல்லுகிறாய்? சிங்களவரையா?

ரணசிங்க: ஓம். சேர். சிங்களவரைத் திட்டினார். தமிழருக்காக கோர்ட்டில் தோன்றி வாதாடுகிறார். எங்களால் முடிந்ததை அவருக்குச் செய்யுமாறு எங்களுடைய பெரிய ஆட்கள் சொன்னார்கள். தாங்கள் முன்னுக்கு வர முடியாது என்றும் சொன்னார்கள்.

வேதசிங்க: சரி அரசாங்கத்திலுள்ள பெரிய ஆட்கள் தான். இதைச் செய்தார்கள் என்று எல்லோரும் நினைப்பது தான் பெரிய பிரச்சினையாக உள்ளது. அது மாற வேனும். அதனால் தான் நடந்தது எல்லாத்தையும் நீ சொல்ல வேணும் என்று மாத்தையா நினைக்கிறார். நாங்கள் உன்னை அடிக்க மாட்டோம். ஏன் சொன்னாய் என்று உன்னுடைய ஆட்கள் கேட்டால் நாங்கள் உன்னை அடித்ததாகவும் தாங்க முடியாமல் சொன்னதாகவும் சொல்லு. ஆராவது வந்தால் நொண்டுவதாகவும் நடி. இந்த விடயம் இதோடை முடிந்தது. காசைப் பற்றி நான் சொன்னது உண்மை. மாத்தையாவுடன் பேச விரும்புகிறாயா? காசு விடயத்தையும் அவரிடம் கேட்கலாம்.

ரணசிங்க: (தெளிவில்லை) ஓகே சேர்.

வேதசிங்க: நீ இப்போது இருக்கிற இடத்திலையே இரு. மாத்தையா வீட்டிலை இருந்தால் அவரை உன்னோடு பேசச் சொல்லுறன். நீ அவருக்கு டெலிபோன் கோல் எடுக்கத் தேவையில்லை. அவர் உனக்கு கோல் எடுப்பார்.

ரணசிங்க: இப்போது அவர்கள் இங்கே வந்து விட்டார்கள். இராணுவத்தினரும் வந்து விட்டார்கள். பொலிஸ்காரரும் வந்து விட்டார்கள்.

வேதசிங்க: ஓய்வெடுக்க வந்தார்களா? (கேட்கவில்லை)

ரணசிங்க: ஓம்.

வேதசிங்க: அவர்கள் இராணுவ பொலிசைச் சேர்ந்தவர்களா?

ரணசிங்க: ஓம் இராணுவ பொலிசைச் சேர்ந்தவர்கள்.

வேதசிங்க: அவர்களுடைய வாகனம் எந்தப் பகுதியிலை ஓடித் திரியுது?

ரணசிங்க: கண்டி.

வேதசிங்க: கண்டியிலா? மற்ற பக்கத்திலா?

ரணசிங்க: கண்டியிலும் நுவரேலியாவிலும்.

வேதசிங்க: அந்த வாகனம் இப்போழுது உங்கே நிற்கிறதா? அது வெளியே போகும் போது எனக்கு கோல் தா.

ரணசிங்க: ஓம்.

வேதசிங்க: எல்லாரும் உங்கே நிற்கிறார்களா? ஒருவகையில் அது நல்லது.

ரணசிங்க: சேர்(கேட்கவில்லை) எல்லாரையும் ஒழித்துக்கட்ட வேணும்.

வேதசிங்க: ஓம்.ஓம் எனக்குத் தெரியும். குமார் பொன்னம்பலத்தின் மகனை உனக்குத் தெரியுமா?

ரணசிங்க: இல்லை சேர்.

வேதசிங்க: (குமாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்) வேறு எவரையும் நீ சந்திக்கவில்லையா?

ரணசிங்க: இல்லை சேர்.

வேதசிங்க: நிச்சயமாக?

ரணசிங்க: உண்மையாக சேர்.

வேதசிங்க: அந்த இடத்துக்கு எத்தனை தடவை போனாய்?

ரணசிங்க: நாலு தரம் சேர்.

வேதசிங்க: அது சரி சேர்ட்டின் நிறம் என்ன?

ரணசிங்க: மெல்லிய நீலம்.

வேதசிங்க: சரி மெல்லிய நீலம். நான் நீல நிறம் என்று சொன்னோன். மாத்தையா மெல்லிய நீலம் என்று சொன்னார்.

ரணசிங்க: அந்தச் சேர்ட்டை உடனடியாகவே யாருக்கோ அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டேன் சேர்.

வேதசிங்க: அப்படியா? அந்தக் காற்சட்டை எங்கே?

ரணசிங்க: என்னிடமிருக்கிறது சேர்.

மறுபக்கமும் பாருங்கள்:

படிப்பகம்

www.padippakam.com



# ஒலிப்பதிவின் மொழியாக்கம் இது: வாசியுங்கள்

முன்பக்கத் தொடர்ச்சி

வேதசிங்க: என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி நேற்று நீ யோசித்தாயா?
ரணசிங்க: நீங்கள் என்னுடன் கதைத்ததைப் பற்றி நான் என்னுடைய வீட்டாருக்குக் கூடச் சொல்லவில்லை.
வேதசிங்க: ஓம் ஒருத்தருக்கும் சொல்லாதை. இரகசியமாக வைத்திரு. மாத்தையா உன்னை நூற்றுக்கு நூறு நம்புகிறார். நான் அவருடன் பல வருடங்களாக வேலை செய்கிறேன். ஆரம்பத்திலேயே அவரிடம் சொன்னேன்.(தெளிவில்லை)



தந்தையின் கொலையாளர்களை சட்டத்தின் பிடியில் கொண்டுவரத் துடிக்கும் தனயன் கஜேந்திரகுமார்

அல்லாவிட்டால் அதற்குக் கெட்டபெயர் கிடைக்கும். இரவு பகலாக நாங்கள் விசாரணை நடத்தியுள்ளோம்.
ரணசிங்க: நான் சொல்லுகிறேன் சேர். விடுதலையான பின்பு எல்ரிரிஈ என்னைத் தாக்குமா?
வேதசிங்க: அந்தப் பயம் இருந்தால் நாங்கள் உன்னை

**EXPOSE**
**நம்நாடு செய்திபீட சிறப்பாசிரியர்கள்**

வெளிநாட்டுக்கு அனுப்புவோம்.
ரணசிங்க: என் பாதுகாப்புக்காக ஆயுதம் தருவீர்களா சேர்?

**வெளிநாடு அனுப்புவோம்**

வேதசிங்க: ஒன்றில் உனக்கு ஆயுதம் தருவோம். அல்லது அரசாங்கம் உன்னை வெளிநாட்டுக்கு அனுப்பும். ரணசிங்க நான் அதுபற்றி மாத்தையாவடன் பேசுகிறேன். அப்ப அந்த விடயம் சரி.
ரணசிங்க: சேர்! யுஎன்பி காலத்தில் செய்ததைப் போல எங்களைக் கொன்று போடாதேயுங்கோ.
வேதசிங்க: உனக்கென்ன பைத்தியமா? கொலை

வெளிநாடு அனுப்புவோம்
வேதசிங்க: ஒன்றில் உனக்கு ஆயுதம் தருவோம். அல்லது அரசாங்கம் உன்னை வெளிநாட்டுக்கு அனுப்பும். ரணசிங்க நான் அதுபற்றி மாத்தையாவடன் பேசுகிறேன். அப்ப அந்த விடயம் சரி.
ரணசிங்க: சேர்! யுஎன்பி காலத்தில் செய்ததைப் போல எங்களைக் கொன்று போடாதேயுங்கோ.

ரணசிங்க சொன்ன பதிலும் தெளிவில்லை.
வேதசிங்க: ஓகே நான் அதைப் பற்றிக் கவனிக்கிறேன். உனக்கு என்னை நல்லாத் தெரியும் தானே.
ரணசிங்க: சேர். பந்துல விக்கிரமசிங்க தங்களின் சொந்தக் காரர் என்று நாவல நிஹாலும் பொன்சேகரவும் சொல்லுகிறார்கள்.
வேதசிங்க: முழுப்பொய். இந்தப் பறையன்கள் எப்படித் தன்னுடைய சொந்தக்காரராக இருக்கு முடியும் என்று சொல்லி மாத்தையா கெட்டவார்த்தைகளில் திட்டுகிறார்.
ரணசிங்க: எங்களுக்குத் தெரியும் சேர். நாங்கள் சின்னனாக இருந்தபோது அவர்கள் உணவு வகைகளை விற்கும் கடைகளிலிருந்து திருடி வெளியாலை விற்றுப் பணக்காரராக வந்தவர்கள். மடம் பற்றியா?
வேதசிங்க: அவர்களுக்குப் பைத்தியம். பெரிய ஆட்களின் மதிப்பைப் பொறுவதற்காக அவர்கள் இவற்றைச் சொல்லுகிறார்கள்.
ரணசிங்க: நான் எங்களுக்கு உண்மையைச் சொல்லி விட்டேன். சேர். எனக்குப் பிள்ளைகள் உண்டு.
வேதசிங்க: ரணசிங்க இன்னும் நீ என்னை நம்பவில்லையா? நான் ஒன்றைச் சொல்லிவிட்டு வேறொன்றைச் செய்யிறவனல்ல. என்னை உனக்கு நல்லாத் தெரியும். நான் உன்னை காப்பாத்துகிறேன். எல்லாரையும் காப்பாற்றுவதாக நான் சொல்ல மாட்டேன்.
ரணசிங்க: நான் உங்களை நம்புகிறேன் சேர். நீங்கள் நல்லவர் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள் சேர்.
வேதசிங்க: உனக்குக் கொடுத்த வாக்குப் பற்றி நான் மாத்தையாவிடம் பேசி விட்டேன். செய்யக் கூடியதைத் தான் எங்களால் செய்ய முடியும் அரச சாட்சியாக மாற்றியதும் உனக்கு ஐந்து லட்சம் ரூபாவைக் கொடுக்கலாம் என்று மாத்தையா சொன்னார்.
ரணசிங்க: அது உண்மையா சேர்? எனக்கு ஐந்து லட்சம் ரூபா தரத் தேவையில்லை இரண்டு லட்சம் ரூபா தந்தால் போதும்.
வேதசிங்க: ஐந்து லட்சம் ரூபா தருவதைப் பற்றி ஒரு சந்தேகமும் இல்லை. இக் கொலையுடன் அதிகாரத்திலுள்ள மிகப் பெரியவர்களுக்குத் தொடர்புண்டு என்ற கூடாத வதந்தி சர்வதேச சமூகத்தில் பரவியுள்ளது.
ரணசிங்க: மடம் மற்றியா சேர்? (மிகுதி கேட்கவில்லை)
வேதசிங்க: ஓம்.
ரணசிங்க: அப்ப நான் ஒப்புக் கொள்கிறேன் சேர். எல்ரிரிஈ அப்படிச் செய்தால் நாங்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள் இல்லை. நான் எல்லாத்தையும் சொல்லுகிறேன் சேர்.
வேதசிங்க: நடந்ததை நீ சொன்னால் போதும். நாங்கள் அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டும்.

செய்வதென்றால் நான் இது மாதிரி உன்னோடு பேசிக்கொண்டிருக்க மாட்டேன்.
ரணசிங்க: உங்களை நம்பி எல்லாத்தையும் சொல்லிவிட்டேன்.
வேதசிங்க: எனக்குத் தெரியும். இனிமேலும் என்மீது நம்பிக்கை வைக்கலாம்.
ரணசிங்க: எனக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள். சேர்.
வேதசிங்க: எனக்குத் தெரியும். ஒருத்தருக்கும் இதைச் சொல்லவேண்டாம். ஒருத்தருடனும் இதைப்பற்றிப் பேச வேண்டாம். நீ இப்போதுள்ள இடத்தில் இருந்தால் இரண்டு நிமிடங்களில் உனக்கு மாத்தையா டெலிபோன் செய்வார். அப்போழுது அவரே இதையெல்லாம் சொல்லுவார்.
ரணசிங்க: நீங்கள் சொன்னால் நானே அவருக்கு டெலிபோன் செய்வேன். அவர் டெலிபோன் செய்தால் அவருடன் பேசுவது கஷ்டம் இங்கே நிறைய ஆட்கள் நிற்கிறார்கள்.
வேதசிங்க: மாத்தையாவிடம் கன கேள்வி கேட்க வேண்டாம் என்று சொல்லுகிறேன்.
ரணசிங்க: நான் வெளியே போய் டெலிபோன் செய்வதாகச் சொல்லுங்கள்.
வேதசிங்க: குமார் பொன்னம்பலம் எங்கேயிருந்து பொம்பிள்ளைகளைப் பெற்றார்.
ரணசிங்க: அவர்கள் தமிழ்ப் பெண்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றார்.
வேதசிங்க: எப்படிப் பெற்றார்?
ரணசிங்க: எனக்குத் தெரியாது. நான் அதைக் கண்டு பிடிக்க விரும்பினேன். அதைப் பற்றி எங்கடை பெரியவர்களிடம் சொன்ன போது நீ உன்ரை வேலையைச் செய். உலகத்தைத் திருத்த வெளிக்கிடாதை என்று சொல்லிவிட்டனர்.
(அடுத்த வினாக்களையும் அவற்றுக்கு ரணசிங்க அளித்த பதில்களையும் இங்கு பிரசுரிக்கவில்லை. அவை குமாரின் தனிப்பட்ட வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டவை-ஆசிரியர்.)
அதைத் தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் செல்போனுக்கு விசாரணை திரும்பியது.
வேதசிங்க: சரி ரணசிங்க. நாளைக்கு எனக்கு கோல் கொடு. என்னுடைய பெயர் சேனக்க. நினைவில் வைத்துக்கொள் சேனக்கவுடன் பேசப் போவதாக நீ சொன்னால் என்னைக் கூப்பிட்டு விடுவார்கள்.
ரணசிங்க: சரி சேர். தாங்கியு
பெண் குரல்: ஹெலோ
வேதசிங்க: குட்மோர்னிங் மடம் சேர் இருக்கிறாரா?
குரல்: இருக்கிறார். கொஞ்சம் பொறுங்கள்.
மாத்தையா: ஹலோ.
வேதசிங்க: குட்ஈவினிங் சேர். கதிர்காமத்திலிருந்து ஓ.ஐ.சி டெலிபோன் செய்கிறேன். அந்த ஆளுக்கு இப்பொழுது டெலிபோன் செய்தேன். அவருக்கு நீங்கள் டெலிபோன் செய்யுங்கள்.
மாத்தையா: என்ன நம்பர்
வேதசிங்க: 08-223993.

## இத்தாலி சென்றடைந்த 400 இலங்கையர்கள்

சுமார் 400 இலங்கையர்கள் ஆறுவாரகால கடற்பயணத்தின் பின்னர் இத்தாலியின் தென் பகுதி தீவான சிசிலிலை நேற்று சனிக்கிழமை சென்றடைந்தனர்.

இவர்கள் ஒரு துருப்பிடித்த பழைய கப்பலிலேயே வேதனைமிகு சூழ்நிலையில் தங்கள் பயணத்தை தொடர்ந்து அங்கு சென்றடைந்து இருக்கிறார்கள்.

சிசிலிக் கரைக்கு அண்மையா அந்த கப்பல் பழுதடைந்ததையடுத்து வேறு கப்பல்கள் மூலம் அது கற்றானியா துறைமுகத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டதாக உள்ளூர் கரையோர காவல் படைக்கான பேச்சாளர் தெரிவித்தார்.

கப்பலின் மாலுமிகள் 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கையர்களுக்கு தற்காலிக தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கும் அதே வேளை இவர்கள் தொடர்பில் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றார்கள்.

இந்த இலங்கையர்கள் ஜனவரி 9ம் திகதி இலங்கையை விட்டு புறப்பட்டிருக்க வேண்டும் என்றும் இத்தாலி நோக்கி வருவதற்காக மத்திய தரைக்கடலுள் முன்னதாக இந்து சமுத்திரத்திலிருந்து செங்கடலை கடந்திருப்பதாகவும் பொலிசார் தெரிவித்திருந்தனர்.

கற்றானியா துறைமுகத்திற்கு இலங்கையர்கள் வந்து சேர்ந்தது இவ் வருடம் இது நான்காவது தடவையாகும்.

## சபரிமலைக் காட்டில் பயங்கர தீ விபத்து

சபரிமலை காட்டில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ வேகமாக பரவி 20 கி.மீ. சுற்றளவில் கொளுந்து விட்டு எரிந்த கொண்டிருந்தது. இதில் பலகோடி ரூபாய் மதிப்புள்ள அபூர்வ வகை மரங்கள் மற்றும் வன விலங்குகள் கருகிநாசமாகியுள்ளன.

இந்தியாவில் உள்ள மிக முக்கிய புண்ணிய ஸ்தலங்களில் ஒன்று கேரள மாநிலத்தில் உள்ள சபரிமலையாகும். இங்கு பக்தர்களுக்கு அருள்பாலித்து வரும் அருள்மிகு ஐயப்பனை தரிசிக்க ஆண்டு தோறும் கோடிக்கணக்கான பக்தர்கள் இந்தியாவின் பல்வேறு பாகங்களில் இருந்தும் முடி கட்டி வந்து வழிபட்டு செல்வது வழக்கம்.

இந்த சபரி மலை ஐயப்பன் கோவில் அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் உள்ளது. இந்த காட்டில் யானை சிங்கம் புலி உட்பட அனைத்து வகையான விலங்குகளும் வாழ்கின்றன. மற்றும் தேக்கு. சாம்பிராணி. சந்தனம் மற்றும் பல் வேறு வகையான அபூர்வ வகை மரங்கள் கோடிக்கணக்கில் உள்ளன.

சபரி மலைக்காட்டில் சனியன்று மாலை திடீரென்று தீ பிடித்தது. சபரிமலை அப்பாச்சி மேடு பகுதியில் பிடித்த தீ காற்றின் வேகத்தால் வேகமாகப் பரவியது. ஐயப்பன் கோவில் பகுதியான பூங்காவனம் மற்றும் அழுதை பம்பை ஆகிய பகுதிகளுக்கும் வேகமாக பரவியது. சுமார் 20 கி.மீ சுற்றளவில் தீ கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

நேற்று பிற்பகல் இச் செய்தி எழுதும்வரையில் தீ பரவுவதில் வேகம் அதிகரித்திருந்தது.

இந்த கோர தீ விபத்தில் காட்டில் வாழ்ந்த யானை சிங்கம் புலி மற்றும் பறவைகள் எண்ணற்ற விலங்குகள் தீயில் கருகி இறந்தன. இது தவிர பல கோடி ரூபா மதிப்பிலான உயர்ந்த மரங்களும் எரிந்து சாம்பலாயின.

தீ விபத்து பற்றி தகவலறிந்ததும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைக்க போராடிக் கொண்டிருந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



# சந்திரிகாவின் சண்டித்தனம்! போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கே இந்தக் குதி என்றால்?

மனிதன் முன்மொழிகிறான் ஆனால் கடவுள் அழித்தெழுதுகிறார் *(Man Proposes but God Disposes")* என்பது ஆங்கிலப் பழமொழி. இப்போது ஒரு புதுமொழி உருவாகியிருக்கிறது. ரணில் முன்மொழிகிறார் ஆனால் சந்திரிகா அழித்தெழுதுகிறார்.

'' சமாதானம் அல்லது சண்டை. இதனைப் பிரகடனப்படுத்தும் அரசியல் அதிகாரம் எனக்கு மட்டுமே உண்டு. விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் எழுததப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிறுத்துமாறு நான் இராணுவத் தளபதிக்கு கட்டளை இட்டால் அதை அவர் செய்வார். ஒரு கடிதம் அல்லது அறிக்கை மூலம் அதனை என்னால் செய்ய முடியும்'' என்று கடந்த வெள்ளிக்கிழமை ஜாஎல என்ற பேரூரில் நடந்த மக்கள் முன்னணி தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் சனாதிபதி சந்திரிகா அனல் பறக்கப் பேசியிருக்கிறார்.

சனாதிபதி சந்திரிகாவின் வாய் சரியில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த சங்கதி. மற்றவர்களை தரக்குறைவாக அர்ச்சனை செய்வதில் அவரை மிஞ்சு யாரும் இல்லை.

''அமைச்சர் திசநாயக்காவைக் கொல்லுவதற்கு ஒரு குண்டை வீணாக்குவது பெரிய குற்றமாகும். நான் அந்தக் குள்ளனைக் கொல்ல நினைத்தால் ஒரு சிதறு வெடிகுண்டே போதும்.'' *("If I wanted to kill this dwarf, wasting a bomb is a crime when a shrapnel could do the job")*

இதுவும் அதே தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் சனாதிபதி சந்திரிகா உதிர்த்த முத்துக்கள்தான்.

ஒரு நாட்டின் சனாதிபதி பேசுகிற பேச்சா இது? வேறெந்த நாட்டு சனாதிபதி யாரும் இப்படி மேடைகளில் பகிரங்கமாக கொலைபற்றியும், குண்டுகள் பற்றியும் பேசுகிறார்களா? பேசத்தான் முடியுமா? பேசிவிட்டு பதவியில் நீடிக்க முடியுமா?

ஆனால் சனாதிபதி சந்திரிகாவைத் தெரிந்தவர்களுக்கு அவரது பேச்சு எவ்வித வியப்பையும் உண்டாக்காது. இதே சனாதிபதி சந்திரிகா அமைச்சர் திசநாயக்காவுடன் செய்தியிதழ் ஆசிரியர்களைத் தீர்த்துக் கட்டுவதுபற்றி முன்னர் ஒரு முறை (சதி) ஆலோசனை செய்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கும் - ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை அனைத்துலக சமூகம் வரவேற்றிருக்கிறது. அதனையிட்டு பெரு மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.

அமெரிக்கா
பிரித்தானியா
கனடா
இந்தியா
அவுஸ்திரேலியா
யப்பான்
பாகிஸ்தான்

போன்ற நாடுகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரவேற்றிருக்கின்றன. கனேடிய வெளியுறவு அமைச்சர் பில் கிறகம் *( Foreign affairs Minister Bill Graham)* கனடா இணைப்பாட்சி முறையில் மாநிலத்துக்கும் நடுவண் அரசுக்கும் இடையில் அரசியல் அதிகாரப் பகிர்வு. வரிவிதிக்கும் அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களில் ( ஸ்ரீலங்காவிற்கு) சட்ட நுணுக்கம் சார்ந்த உதவியை நல்க முடியும் *(Canada could assist in the peace process by providing technical expertise in military and political confidence building, or by offering technical assistance on the division of jurisdictions and taxing powers within devolved and federal governmental systems. )* என்று அறிக்கை மூலம் அறிவித்திருக்கிறார்.

அமைச்சர் பில் கிறகம் கனேடிய தமிழர்களுக்கு நெருக்கமானவர். இனச் சிக்கலில் அதிக அக்கறை காட்டி வந்தவர். மாணிக்கவாசகம் சுரேசின் கைது நியாயமற்றது என்று துணிந்து சொன்னவர். தன்னைப் பொறுத்தளவில் விடுதலைப் புலிகளுக்கும் தென் ஆபிரிக்க காங்கிரசுக்கும் இடையில் வேற்றுமை இல்லை, இரண்டும் தேசிய விடுதலை அமைப்புக்களே என்று சொன்னவர். எனவே முன்னைய வெளியுறவு அமைச்சர்கள் போலல்லாது இனச் சிக்கல் தீர்வுக்கு தன்னால் ஆன உதவியைச் செய்யக் கூடியவர்.

1995 ஆம் ஆண்டில் போர் நிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிக்க வி.புலிகள் தேர்ந்தெடுத்த நாடுகளில் கனடாவும் இடம் பெற்றது. ஆனால் இம்முறை அந்த வாய்ப்பு கனடாவிற்குக் கொடுக்கப் படவில்லை. அதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்ததே.

விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்று கனடா முத்திரை குத்தியிருப்பதை கனேடிய அரசு நீக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட ஒரு இனத்தின் விடுதலைக்கும் விடிவிற்கும் ஆயுதம் ஏந்திப் போராடும் வி.புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

அமைச்சர் பில் கிரகம் இனச் சிக்கலில் நியாயமான தீர்வைக் காண்பதற்கு உதவ

## இது நக்கீரன் பக்கம்

விரும்பினால் இந்த பயங்கரவாத முத்திரை முதலில் நீக்கப் படவேண்டும்.

சனாதிபதி சந்திரிகா எப்போதுமே இரட்டை நாக்கால் பேசக் கூடியவர். சணப் பித்தம் சணம் வாதம் என்பார்களே அதேபோல் ஒரு கணம் சமாதானம்பற்றிப் பேசிவிட்டு அடுத்த கணம் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கு மட்டும் உறங்க மாட்டேன் என்று அடித்துச் சொல்வார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடந்த தேர்தலில் சனாதிபதி சந்திரிகா சிங்கள இனவாதத்தை முதலாகப் போட்டு பரப்புரை செய்தார்.

''ரணில் விக்கிரமசிங்காவிற்கும் வி.புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் நாட்டைத் துண்டுபோட ஒரு இரகசிய ஒப்பந்தம் இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை உருவாக்கியவர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா. அவர் வி.புலிகளுடன் பேசிய இரகசிய ஒலிநாடா எங்களிடம் உண்டு. ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் போடும் ஒவ்வொரு வாக்கும் நாட்டைத் துண்டாட நினைக்கும் பிரபாகரனுக்குப் போடுகிற வாக்கு'' என்று சனாதிபதி சந்திரிகா மேடை தோறும் பேசினார்.

நல்லகாலமாக சிங்கள மக்கள் இந்த முறை அவரது பொய்ப் பரப்புரையை நம்பவில்லை. அவரது மக்கள் முன்னணி தேர்தலில் தோற்றது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அவருக்கு இருந்த உறுப்பினர்கள் தொகை 107 இல் இருந்து 77 ஆகக் குறைந்தது.

இப்போது சனாதிபதி சந்திரிகா பல்லுப் பிடுங்கின பாம்பு போல முடக்கப்பட்டுள்ளார். சகல நிறைவேற்று அதிகாரம் படைத்த சனாதிபதி வெறும் பொம்மை சனாதிபதியாக பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ளார். அந்த ஆத்திரத்தில்தான் அவர் கண்டபடி பேசுகிறார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பல ஓட்டைகள் இருப்பதாகவும் அதனைக் கண்டறிய முன்னாள் வெளியுறவு அமைச்சர் லட்சுமன் கதிர்காமர் தலைமையில் ஒரு குழு நியமித்திருப்பதாகவும் அதன் அறிக்கை கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கைபற்றி முடிவு எடுக்கப்படும் என்றும் சனாதிபதி சொல்லி இருக்கிறார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மிகவும் சாதாரணமானது. பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படு முன்னர் இரு சாராரும் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுங்குகளையும் செய்ய வேண்டிய கடமைகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தம் விரிவாகக் குறிப்பிடுகிறது.

1995 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் சனாதிபி சந்திரிகாவிற்கும் இடையில் எழுதிக் கொண்ட ஒப்பந்தத்தில் காணப்பட்ட சரத்துக்கள் இப்போது எழுதப்பட்ட ஒப்பந்தத்திலும் இடம்பெற்றுள்ளன.



ஒரேயொரு முக்கிய வேறுபாடு என்னவென்றால் நோர்வே அரசு மூன்றாம் கட்சியாக, ஏற்பாட்டாளராக முன்னின்று இந்த ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளது. அதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதற்கே சனாதிபதி சந்திரிகா, ஜனதா விமுக்தி பெரமுன, சிகல உறுமய ''ரணில் நாட்டைத் துண்டாட வி.புலித் தலைவர் பிரபாகரனோடு ஒப்பந்தம் எழுதிக் கொண்டார்'' என்று இந்தக் குதி குதித்தால் நாளை அதிகாரப் பரவலாக்கல், மத்தியில் இணைப்பாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டால் இவர்கள் எப்படிக் குதிப்பார்களோ தெரியவில்லை.

சனாதிபதி சந்திரிகா அமைதிப் பேச்சு வார்த்தையை முறியடித்தால் என்னைப் பொறுத்தளவில் அது ஒரு வரப்பிரசாதமாகவே கருதுவேன்.

சிங்களவர்களுடன் தமிழர்கள் ஒரே ஆட்சியின் கீழ் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை என்ற முடிவிற்கு வர அனைத்துலக சமூகம் தள்ளப்படும்.

''அமைதி என்பது போர் இல்லை என்ற நிலையல்ல. அது ஒரு அறம். ஒரு மனநிலை. அன்புடமை, நம்பிக்கை, நீதி *(Peace is not absence of war; it is a virtue, a state of mind, a disposition for benevolence, confidence, justice. ~ Benedict de Spinoza)* எனப் பெனடிக் டி ஸ்பினோசா என்பவர் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது. அல்லது ஜவகர்லால் நேரு கூறியதுபோல அமைதி என்பது இரண்டு போர்களுக்கு இடையில் இடம்பெறும் இடைவேளையும் அல்ல.

கனடா நாட்டில் இரண்டு பெரிய இனங்கள் (பழங்குடி மக்களையும் சேர்த்து மூன்று இனங்கள்) அமைதியாக வாழுகின்றன. அவ்வப்போது எழுகிற சிக்கலை நாகரிகமான முறையில் பேசித் தீர்த்துக் கொள்கிறார்கள். அதனால் யாரும் துப்பாக்கி தூக்க வேண்டிய அவசியம் இல்லை. தனிநாடு கேட்கும் பிரஞ்சு மக்கள் ஒரு நேரடி வாக்கெடுப்பில் தெளிவான பெரும்பான்மையோர் ஒப்புதல் கொடுக்கும் பட்சத்தில் அவர்கள் கனேடிய கூட்டாட்சியில் இருந்து பிரிந்து போக உரிமை உண்டென கனேடிய நாட்டின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கனடாவின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு கூட்டாட்சி காரணம் அல்ல. இங்கு நிலவும் அரசியல் கலாச்சாரமே **(political culture)** அதற்கு முக்கிய காரணியாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா இராணுவம் நவீன மயப்படுத்தப்படும். அதற்கு உதவ நான்கு நாடுகள் முன்வந்துள்ளன என்று திருவாய் மலர்ந்துள்ளார்.

அத்தோடு நில்லாமல் ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தை அரசு கைவிடப் போவதில்லை என்றும் கூறியிருக்கிறார். இது அவரது பழைய ஒப்பாரி என்றாலும் இன்றைய கால கட்டத்தில் மீண்டும் அவர் வலியுறுத்துவது சிந்திக்கத்தக்கது.

எனவே நாம் அமைதிக்கான தேடுதலில் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையோடு அதே நேரம் கெட்டதும் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்போடு நடை போடுவதுதான் புத்திசாலித்தனம்.

நம்நாடு
பிரதி வெள்ளிக்கிழமை தோறும்
ஐரோப்பா எங்கும் வெளிவருகின்றது

படிப்பகம்

www.padippakam.com



# புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தெரிந்து கொள்ளுங்கள்

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள்:-

இராணுவ நடவடிக்கை நிறுத்தம்

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் அறிவிக்கும் தினத்தில் இருந்து யுத்தநிறுத்தம் ஒன்றைக் கைக்கொள்ள இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் கூட்டாக இணங்குகின்றனர்.

இதன்படி, இரு தரப்பினதும் படைகள் இராணுவத் தாக்குதல் நடவடிக்கை எதனையும் செய்யக் கூடாது. நேரடியாகத் தாக்குதல், ஆயுதங்களைக் கைப்பற்றுதல், மறைந்திருந்து தாக்குதல், படுகொலை புரிதல், கடத்துதல், சிவில்- இராணுவச் சொத்துக்களுக்கு நாசம் விளைவித்தல், அழிவு வேலைகள், தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகள், ஊடுருவும் அணிகளின் நடவடிக்கைகள் என்பனவற்றைத் தவிர்த்தல், வான் வழிக் குண்டுவீச்சுகள், கடற்படைத் தாக்குதல் நடவடிக்கைகள், என்பனவும் தவிர்க்கப்படும். என்றாலும், புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல், ஸ்ரீலங்காவின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்

## அமையப்போகும் சோதனைச் சாவடிகள்

டையும் பேணுவதற்கான தமது சட்டரீதியான கடமைகளை ஸ்ரீலங்காவின் ஆயுதப்படைகள் தொடர்ந்து மேற்கொள்ளும்.

படைகளின் நிலைகளை வகுத்தல்

இரு தரப்புப் படைகளினதும் முன்னணிக் காவலரண்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடங்களில் இரு காவலரண்களுக்கும் இடையில் குறைந்தது 600 மீற்றர் இடைவெளி பேணப்படும். என்றாலும் ஒவ்வொரு தரப்பும் தனது எல்லையில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரம் வரை முன்னேறி நடமாட உரிமை உண்டு. அதாவது இருதரப்புக்கும் இடையில் ஆகக் குறைந்தது 400 மீற்றர் இடைவெளி தெளிவாகப் பேணப்படும். திட்டவட்டமான எல்லை வகுக்கப்படாத இடங்களில் அரசும் புலிகளும் 2001 டிசெம்பர் 24ஆம் திகதி நிலைகொண்ட பகுதிகளைத் தொடர்ந்து தக்கவைத்துப் பேணவேண்டும்.

தங்களுடைய பாதுகாப்பு எல்லைகள் பற்றிய விவரங்களை இருதரப்பும், கண்காணிப்புக் குழுவுக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

இரு தரப்பும் தங்களது எல்லைகளை அடுத்த 30 நாள்களுக்குள் வரையறுத்து வகுப்பதற்கு கண்காணிப்புக் குழு உதவவேண்டும்.

ஒரு தரப்பின் பிரதேசத்துக்குள் மற்றைய தரப்பினர் ஆயுதங்கள், வெடிபொருள்கள், இராணுவத் தளபாடங்கள் ஆகியவற்றை நகர்த்தக் கூடாது.

துணைப்படைகள்

அடுத்த முப்பது நாள்களுக்குள் துணைப்படையாக இயங்கும் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களை அரசு களையவேண்டும். எனினும் இந்தக் குழுக்களைச் சேர்ந்த தனி ஆள்களை அரசு வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள, தனது கட்டளைக்குட்பட்ட,- ஒழுங்கமைந்த கட்டமைப்புக்குள் சேர்த்துக்கொள்ளலாம்.

நடமாடுவதற்கான சுதந்திரம்

ஆரம்பத்தில் இரு தரப்பும் தமது பிரதேசத்துக்குள்ளேயே தங்கியிருக்கவேண்டும். அறுபது நாள்களில் யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில் யாழ். -கண்டி (யு9) வீதி வழியாக ஆயுதம் தாங்கிய அரசுத் துருப்புக்கள் சென்றுவர அனுமதிக்கப்படவேண்டும்.

இதற்கான நடைமுறை ஏற்பாடுகளை கண்காணிப்புக் குழுவின் உதவியோடு சம் பந்தப்பட்ட தரப்புகள் செய்துகொள்ளவேண்டும். ஒருதரப்பைச் சேர்ந்த, ஆயுதம் தாங்காத, சாதாரண உடையணிந்த, தனி உறுப்பினர் ஒருவர், மற்றைய தரப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் இருக்கும் தனது குடும்பத்தவர் அல்லது நண்பரைச் சந்திக்கத் தனது பகுதித் தளபதியின் சிபாரிசு மற்றும் அனுமதி பெற்று வந்தால் அவரை அதற்கு அனுமதிப்பது என இரு தரப்பும் இணங்குகின்றன.

ஒன்றுவிட்ட ஒரு மாதத்துக்கு ஆறு நாள்கள் என்ற அடிப்படைக்கு இந்த அனுமதி மட்டுப்படுத்தப்படுகின்றது.

**கண்காணிப்புக் குழு**

**உடன்பாட்டில் காணப்பட்ட இணக்கங்கள் மீறப்படுவது குறித்து விசாரிக்க பிரதேச கண்காணிப்புக் குழுவொன்று நிறுவப்படும். நோர்வே அரசு இந்தக் குழுவின் தலை வரை நியமிக்கும்.**

**இந்த உடன்பாட்டின் வாசகங்களுக்கு விளக்கமளிக்கும் உரிமை இந்தக் குழுவுக்கே உண்டு. நோர்ட்டிக் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தச் சர்வதேசக் குழுவில் இடம்பெறுவர்.**

ஆனால் மிகக் குறுகிய தூரம் வழியாகப் பயணிப்பதற்குரிய கால அளவு இந்த ஆறு நாள்களுக்குள் அடங்காது. யாழ். - கண்டி வீதியை இதற்குப் பயன் படுத்தப் புலிகள் அனுமதிக்கவேண்டும். எனினும் தமது நெருங்கிய உறவினரின் திருமணம், மரண வீடு என்பவற்றுக்கு ஒரு தரப்பின் உறுப்பினர் ஒருவர் செல்வதற்கு இந்த ஒன்றுவிட்ட ஒரு மாதத்துக்கு என்ற

### For the Record

கட்டுப்பாடு பொருந்தாது.

என்றாலும்குறிப்பிடப்படும் முக்கிய இராணுவப் பிரதேசத்துக்குள் மற்றைய தரப்பின் உறுப்பினர் எவரும் செல்வதற்கான அனுமதியை மறுக்கும் உரிமை இருதரப்புக்கும் உண்டு .

முதல் முப்பது நாள்களின் பின், ஆயுதம் தாங்காத புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஐம்பது பேர் அரசுத்தரப்பின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு - கிழக்குக்குள் அரசியல் வேலைகளைச் செய்வதற்காக அனுமதிக்கப்படுவர். இந்த அனுமதி அறுபது நாள்களின் பின்னர் நூறு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். 90நாள்களின் பின்னர் புலிகளின் அனைத்து உறுப்பினர்களும் வடக்கு - கிழக் குக்குள் சுதந்திரமாகச் சென்று வர அனுமதிக்கப்படுவர். ஆனால் புலிகள் உறுப்பினர்கள் தங்களை அடையாளப்படுத்தும் ஆவணங்களை வைத்திருக்கவேண்டும். எனினும் முக்கிய இராணுவப் பிரதேசங்களுக்குள் செல்வதைத் தடுக்கும் உரிமைஅரசுத் தரப்புக்கு உண்டு.

வழமை நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள்

ஸ்ரீலங்காவில் வதியும் அனைவருக்கும் வழமை நிலையை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் பின்வரும் நடவடிக்கைகளை இரு தரப்பும் எடுக்கவேண்டும். இரு தரப்பும் சர்வதேசச் சட்டங்களின்படி பொதுமக்களுக்கு எதிரான சித்திரவதை, அச்சுறுத்தல், கடத்தல், பயமுறுத்தி அபகரித்தல் போன்றவற்றில் ஈடுபடக்கூடாது. சமூக, மத உணர்வுகளைப் பாதிக்கும் நடவடிக்கைகள், பிரசாரங்களில் இரு தரப்பும் ஈடுபடாமல் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இரு தரப்பும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் ஆகியவற்றிலிருந்து அடுத்த முப்பது நாள்களுக்குள் வெளியேறி, அங்கு பொதுமக்கள் சென்றுவர அனுமதிக்கவேண்டும்.

எனினும் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருக்கும் இத்தகைய வணக்கஸ்தலங்களில் இருந்து படைகள் வெளியேறி சிவிலியன் ஊழியர்கள் மூலம் அவற்றை நல்லமுறையில் பேண அனுமதிக்கவேண்டும். பொது மக்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படாவிட்டாலும். ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து அறுபது நாள்களுக்குள் பாடசாலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் எந்தத் தரப்பும் அதை விட்டு வெளியேறி உரிய பாவனைக்கு அதனைக் கையளித்துவிடவேண்டும். பொதுக் கட்டடங்களை உரியவர்களிடம் கையளிப்பதற்கான அட்டவணை முதல் முப்பது நாள்களுக்குள் வரையப்பட்டு பிரசுரிக்கப்பட்டுவிடவேண்டும்.

இரு தரப்பும் பொது மக்களுக்கு ஏற்படும் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்காக சோதனைச்சாவடிகள் - குறிப்பாக மக்கள் நெருக்கமுள்ள நாள்கள் மற்றும் இடங்களில் உள்ள சோதனை நிலையங்கள் மற்றும் இடங்களில் நிலவும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அடுத்த அறுபது நாள்களுக்குள் மீளாய்வு செய்யவேண்டும்.

புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அனுபந்தம் அ வில் குறிப்பிடப்பட்ட பொருள்கள் தவிர்ந்த - இராணுவப் பொருள்கள் அல்லாத - அனைத்துப் பொருள்களும் தங்குதடையின்றிச் செல்வதை இரு தரப்பும் உறுதிப்படுத்தவேண்டும். அனுப்பப்படும் பொருள்களின் அளவு சந்தைத் தேவையைப் பொறுத்து முடிவு செய்யப்படவேண்டும்.

இராணுவப் பொருள்கள் அல்லாதவற்றுக்கான கட்டுப்பாடுகளை முற்றாக நீக்கும் நோக்குடன் அரசுத் தரப்பு இந்த விடயத்தை அடிக்கடி மீளாய்வு செய்து மாற்றங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். பொருள்கள் செல்லும் அளவை உறுதிப்படுத்துவதற்காக அனுபந்தம் ஆவில் குறிப்பிடப்படும் இடங்களில் சோதனைச்சாவடிகளை அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது. அடுத்து பத்து நாள்களுக்குள் திருகோணமலை ஹபரணை வீதியை 24 மணி நேரப் போக்குவரத்துக்கு அனுமதிக்க இரு தரப்பும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மட்டக்களப்பு மார்க்கத்திலான ரயில் சேவை வெலிகந்தை வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க இணங்கப்படுகின்றது.

நோர்வே அரசின் உதவியுடன் அடுத்த முப்பது நாள்களுக்குள் கண்டி - யாழ். (ஏ-9) வீதியை இராணுவப் பொருள்கள் அல்லாத பொருள்களினதும் பயணிகளினதும் போக்குவரத்துக்குத் திறக்க இணக்கம் காணப்படுகின்றது. உடன்பாடு ஏற்பட்ட நாளிலிருந்து மீன்பிடித் தடை படிப்படியாக தளர்த்தப்படுவதோடு 90 நாள்களுக்குள் பின்வரும் கட்டுப்பாடுகள் நீங்கலாக இரவு பகல் முழு நேர மீன்பிடிப்புக்கான அனைத்துத் தடைகளும் நீக்கப்பட வேண்டும். - கரையோர முகாம்களுக்கு கரை வழியாக இரு பக்கத்திலும் தலா ஒரு கடல் மைல் தூரமும், கடலை நோக்கி கரையிலிருந்து இரு கடல் மைல் தூரமும் உள்ள பிரதேசங்களிலும். - துறைமுகங்கள் மற்றும் துறைமுகங்களை அண்டிய பிரதேசங்களிலும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டாது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழான தேடுதல்கள், கைதுகள் இடம்பெறா. சாதாரண தண்டனைச் சட்டக் கோவைகளின் கீழான கைதுகளே இடம்பெறும்.

காவலில் உள்ள கைதிகளை அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் முப்பது நாள்களுக்குள் செய்யப்படும்.

கண்காணிப்புக் குழு

உடன்பாட்டில் காணப்பட்ட இணக்கங்கள் மீறப்படுவது குறித்து விசாரிக்க பிரதேச கண்காணிப்புக் குழுவொன்று நிறுவப்படும். நோர்வே அரசு இந்தக் குழுவின் தலை வரை நியமிக்கும்.

இந்த உடன்பாட்டின் வாசகங்களுக்கு விளக்கமளிக்கும் உரிமை இந்தக் குழுவுக்கே உண்டு.

நோர்ட்டிக் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தச் சர்வதேசக் குழுவில் இடம்பெறுவர்.

இக்குழு தமக்குப் பொருத்தமானது எனக் கருதும் இடத்தில் தலைமையகத்தை அமைக்கும். அத்தோடுஅரசு மற்றும் புலிகளோடு தொடர்புகொள்வதற்காக கொழும்பு மற்றும் வன்னியிலும் அலுவலகங்கள் திறக்கப்படும்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திரு கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளிலும் இக்குழு நிலைகொண்டிருக்கும்.

இந்த ஆறு இடங்களிலும் உள்ளூர் கண் காணிப்புக் குழு அமைக்கப்படும். ஒவ்வொரு உள்ளூர் கண்காணிப்புக் குழுவிலும் ஐந்து உறுப்பினர்கள் இருப்பர். அவர்களில் ஒருவர் இப்பிரதேச கண்காணிப்பாளராக இருப்பார். அவரே உள்ளூர் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் ஆவார்.

ஓய்வுபெற்ற நீதிபதிகள், பொது சேவையாளர்கள், மதத்தலைவர்கள் மற்றும் அதுபோன்ற பிரமுகர்கள் வரிசையில் இருந்து ஒவ்வோர் உள்ளூர் கண்காணிப்புக் குழுவுக்கும் அரசும், புலிகளும் தலா இரு பிரதிநிதிகளை நியமிப்பர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உடன்பாட்டு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் விடயம் குறித்து சர்வதேசக் கண்காணிப்புக் குழுவுக்கு ஆலோசனை மற்றும் கலந்துரையாடல் உதவிகள் வழங்கும் அமைப்பாக அந்தந்த மாவட்ட உள்ளூர் கண்காணிப்புக் குழு அமையும். உடன்பாடு தொடர்பாக ஏற்படும் பிணக்குகளை கீழ் மட்டத்தில் தீர்த்து வைக்கவும் உள்ளூர்க் கண்காணிப்புக் குழு முயலும்.

சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இரு தரப்பினதும் பொறுப்பு. சம்பந்தப்பட்ட இடங்களுக்கு சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினர் தங்குதடையின்றிச் சென்றுவர அனுமதிப்பதற்கு இரு தரப்பும் இணங்குகின்றன. முறைப்பாடுகளை உடனடியாக ஏற்று, விசாரித்து இருதரப்பும்இணக்கமாகத் தீர்த்துக்கொள்ள இக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சர்வதேசக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள், வரையறைகள் குறித்து தனி ஆவணங்கள் உருவாக்கப்படும்.

உடன்படிக்கை ஏற்பாடுகள்

இருதரப்பு இணக்கத்தோடு. தேவைப்படும் பட்சத்தில் உடன்பாட்டு வாசகங்களில் மாற்றம் செய்யமுடியும்.

இந்த உடன்பாட்டில் இருந்து வெளியேறுவது குறித்து ஏதேனும் ஒரு தரப்பு நோர்வே அரசுக்கு அறிவிக்கும்வரை இந்த உடன்பாடு நடைமுறையில் இருக்கும். அவ்வாறு உடன்பாடு செயலிழப்பதற்கு சரியாகப் பதினான்கு நாள் முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.

அனுபந்தம் அ தடைசெய்யப்பட்ட பொருள்களின் பட்டியல்:

இராணுவ ஆயுதங்கள்.:சின்னங்கள்
வெடிபொருள்கள்
ரிமோட் கொண்ட்ரோல் கருவிகள்
முள்ளுக்கம்பிகள்
பைனாக்குலர் தொலைநோக்கி
திசையறிகருவி
பென்டோர்ச் பற்றரி
டீஸல், பெற்றோல், சிமெந்து, இரும்புக் கம்பிகள் பின்வரும் கணக்குகளின் அடிப்படையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அனுமதிக்கப்படும்.

அப்பிரதேசத்தில் உள்ள அரச அதிபர் தனது பகுதியில் உள்ள வாகனங்களின் பட்டியல் ஒன்றைப் பதிவுசெய்து, பேணி கீழ்வரும் அடிப்படையில் எரிபொருளைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் எரிபொருளைத் தருவிக்கலாம்.

டிரக்.:பஸ் - 250லீற்றர்.:வாரத்துக்கு
4 சில்லு டிராக்டர் - 310லீற்றர்.:வாரத்துக்கு
2 சில்லு டிராக்டர் - 40லீற்றர்.:வாரத்துக்கு
பெற்றோல் வாகனம் - 30லீற்றர்.:வாரத்துக்கு
மோட்டார் சைக்கிள் - 7லீற்றர்.:வாரத்துக்கு
மீன்பிடிக்கலம் - 400லீற்றர்.:வாரத்துக்கு

பின்வரும் அடிப்படையில் சிமெந்து விநியோகிக்கப்படும்.

அரச மற்றும் பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்கள் ஆகியவற்றின் கட்டடங்களை மீளமைத்தல், புதுப்பித்தல் மற்றும் அரசு, அரசசார்பற்ற தொண்டர் அமைப்புகள், பொதுமக்கள் சார்பான அமைப்புகள் ஆகியவற்றினால் மேற் கொள்ளப்படும்

அங்கீகரிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் போன்றவற்றுக்கு அரச அதிபர் மூலம் நேரடியாக சிமெந்து கொண்டு வரும் அனுமதி வழங்கப்படும்.

தனியார் கடைகள் மற்றும் வீடுகள் அமைப்பதற்கு ப.நோ.கூ.சங்கம் மூலம் முதல் மாதம் 5ஆயிரம் மூடையும் அதன் பின்னர் மாதாந்தம் 10ஆயிரம் மூடையும் அனுமதிக்கப்படும். ஒரு வீட்டுக்கு 25 மூடை என்ற அடிப்படையில் இது பகிர்ந்தளிக்கப்படும்.

இரும்புக் கம்பிகள் அரச அதிபரின் அனுமதிக்கேற்ப வழங்கப்படும்.

இந்தக் கட்டுப்பாடுகளை முழுமையாக நீக்குவதற்கான வாய்ப்புகள் குறித்து மாதாந்தம் அரசு மீளாய்வு செய்யும்

அனுபந்தம் ஆ

சோதனைச்சாவடிகள் அமையும் இடங்கள்:-மண்டூர், பட்டிருப்பு, களுந்தாவளைப் படகுத்துறை, அம்பலவன்தீவுப் படகுத்துறை, மாமுனைப் படகுத்துறை, வவுணதீவுச சந்திவெளி படகுத்துறை, கறுப்புப்பாலம், சித்தாண்டிப் படகுத்துறை, கிரான் பாலம், கிண்ணியா படகுத்துறை, வாழைச்சேனை, மாங்கேணி, மஹிந்தபுர, மூதூர், உயிலங்குளம்

படிப்பகம்

# மக்கள் மனங்களை வென்றார் பிரபா

## கிழக்குத் தமிழீழக் கடிதம்

கிழக்குத் தமிழீழக் கடிதம்
மட்டுநகர் வழிகாட்ட திருமலை அவ்வழி நடந்தது.

மட்டுநகரில் புதன்கிழமை தமிழுணர்வு பொங்கியது. திருமலையில் சனிக்கிழமை அந்த உணர்வு வழிந்து.

தமிழ் மக்கள் பெருந்தொகையாக

## திருமலை மக்கள் பேரணி: எழுச்சிப் பாடல்களுடன் ஊர்வலம்

வாழும் மீன்பாடும் நிருநகரில் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் மூன்று முனைகளிலிருந்து பேரணியாய்ச் சென்று பெருங்கடல் கரையில் பலமாக மோதினர்.

சிங்கள குடியேற்றங்களால் தொல்லை பல அனுபவிக்கும் கோணேசரின் மக்கள் பத்தாயிரம் பேர் இரண்டு பேரணிகளில் போய் பெருங்கடலில் தம் உணர்வைக் கரைத்தனர்.

கிழக்குத் தமிழீழத்தின் இரண்டு மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களினதும் உணர்வலை ஒன்றுதான்:

ஆயுதம் ஏந்திப்போரிட்டு தமிழீழத் தமிழர்களின் விடுதலைப் போரைச் சுமந்து சென்று விடுதலை வாசலுக்குச் சேர்ந்துவிட்ட

விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவதே அது.

கொழுத்தும் வெயிலில், படையினரின் மிரட்டலையும் மீறி, அணிவகுத்து நடந்த அத்தனை தமிழர்களினதும் ஒரே வேட்கை புலிகளின் கைகளுக்கு உரமூட்டுவதே.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் மூன்று முனைகளில் இருந்து வந்த முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது கைகளை நெஞ்சுக்கு நேரே உயர்த்தி சுயநிர்ணய உரிமை, மரபு வழித்தாயகம் தமிழ் மக்கள் தனியான தேசிய இனம் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி பகல் 11.55க்கு பொங்கு தமிழ் பிரகடனத்தை செய்தபோது உணர்ச்சி மேலீட்டால் பலர் விம்மி விம்மி அழுதனர்.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக வந்த தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி. சந்திரசேகரன். பாராளுமன்ற உறுப்பினர்களான இ.ராதாகிருஷ்ணன் (மலையக மக்கள் முன்னணி) இரவிராஜ். த.தங்கவடிவேல், ஞா.கிருஷ்ணப்பிள்ளை (வெள்ளிமலை). யோசப் பரராஜசிங்கம், அ. சந்திரநேரு. ஆகியோருடன் ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்தின் உள்ளிட்ட அனைவருமே இந்தப் பிரகடனத்தை எடுத்தனர்.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப் பட வேண்டும் என்றும் உரத்து உரைத்தனர்.

திருமலையில் சனிக்கிழமை அதே உணர்ச்சிப் பிளம்பாகத் தான் தமிழ் மக்கள் மாறினார்கள்.

அமைதியையும் சமாதானத்தையும் வலியுறுத்தியும் சமாதானத்திற்கான செயற்பாடுகளை ஊக்குவிக்குமாறும் கோரி திங்கட்கிழமை திருகோணமலை யில் மாபெரும் எழுச்சிப் பேரணி நடத்தப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த எழுச்சிப் பேரணியில் கலந்த கொண்டனர். திருகோணமலை மாவட்டத்தில் நீண்ட காலத்தின் பின்னர் இத்தகைய பிரமாண்டமான எழுச்சிப் பேரணி இடம் பெற்றது.

பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் இந்த மாபெரும் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டனர்.



இந்த எழுச்சிப் பேரணி திருகோணமலை நகரின் நுழைவாயிலான அநுராதபுரம்

சந்திலிருந்தும் மூன்றாம் கட்டைப் பகுதியிருந்தும் புறப்பட்டு காலை 9.45 மணியளவில் திகோணமலை மடத்தடி சந்தியை வந்தடைந்தது.

பேரணியில் சென்றோர்

அகதிகளாக தமிழகம் சென்றோரின் படகுகளை விடுவிக்க ஆவன செய்,

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரி,

விடுதலைப் புலிகள் மீதான சகல தடைகளை அகற்று,

பாதைத் தடையினை விலக்கு, என்ற சுலோக அட்டைகளைத் தாங்கிச் செல்ல முன்னே சென்ற முச் சக்கர ஊர்த்திகளில் எழுச்சிப்பாடல்களும் இசைக்கப்பட்டன.

இப் பேரணிகள் இரண்டும் மடத்தடி சந்தியில் இருந்து மத்திய வீதி, கடற்காட்சி வீதி, ஏகாம்பரம் வீதி, மணிக்கூட்டுக் கோபுரம் வீதி என்பவற்றினூடாக சென்று பெரிய முற்ற வெளி மைதானத்தினைசென்றடைந்தன.

இங்கு உரை நிகழ்த்திய கணேச பீடகுரு சுந்தரலிங்க தேசிகர். தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புக்கள் சாத்தியமாகும். சூழ்நிலை உருவாகியமை மன மகிழ்ச்சியை தருவதாக தெரிவித்தார்.

அருட் தந்தை அன்னதாஸ் அடிகளார்: தமிழ் மக்கள் இத்தனை காலமும் அனுபவித்து வந்த துன்பங்களுக்கு முடிவு காணும் காலம் வந்துள்ளதாகவும் கூறினார்.

இஸ்லாமிய சமூகத்தின் சார்பில் பேசிய சாகுல் ஹமீது ஆசிரியர்: இத்தகைய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதன் மூலம் சகல சமூகங்களும் சுதந்திர உணர்வினை சுவாசிக்கும் காலம் உருவாகியுள்ளதாக தெரிவித்தார்.

திகோணமலை பாராளுமன்ற உறுப்பினரும் த.வி.கூ.வின் செயலாளருமான இரா. சம்பந்தன்: தமிழ் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு தற்போதைய புரிந்துணர்வு உடன்படிக்கை வித்திட்டள்ளது எனக் கூறினார். ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எம். மஹ்ரூப் மற்றும் கூட்டணி பிரமுகர்களும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்.



**மக்கள் மனங்களை வென்றுவிட்டார் பிரபாகரன் என்று பலத்த கைதட்டலுக்கு மத்தியில் உரத்துக் கூவினார் ஐக்கியதேசியக் கட்சி எம்பி மஹ்ரூப்**



## பிரச்சினை சார்ந்த பேட்டி

இது ஒரு நீண்ட பேட்டியின் பகுதி.

தமிழர் பிரச்சினைத் தீர்வுடன் முஸ்லிம்களின் பிரச்சினையும் முறுகியுள்ளது.

முஸ்லிம் பிரச்சினைக்கு முனைப்புக் கொடுத்துள்ளோம்.

பேட்டி கொடுத்தவர் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைத் தலைவர் கரிகாலன்.

கேள்வி: தீர்வு ஏற்படுமிடத்து முஸ்லிம்களின் நிலை என்னவாக இருக்கும்?

பதில: சுயநிர்ணய உரிமையுடன் நிரந்தர தீர்வு ஏற்படுமிடத்து அதில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்படுவார்கள்.

கேள்வி: சமாதானப் பேச்சுவார்த்தையில் ஓரங்கமாக முஸ்லிம்களின் சார்பில் முஸ்லிம் காங்கிரஸும் பங்கு பற்ற வேண்டும் என்று மு.கா. தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கோரி வருகின்றாரே இது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: முஸ்லிம்களின் தனித்துவத்தை அங்கீகரித்து பேச்சை முன்னெடுக்கலாம். இணைத்துக் கொள்வது குறித்து பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே தீர்மானிக்கலாம்.

கேள்வி: உங்கள் அமைப்பின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் முஸ்லிம் காங்கிரசும் அரசு தரப்புத் தான். அவர்கள் தனியாக பேச்சில் பங்குபற்ற வேண்டியதில்லை என்று பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளாரே? அவரது கருத்தும் உங்கள் கருத்தும் முரண்படவில்லையா?

பதில்: பேச்சுவார்த்தை நிறைவு பெற்று சுமுக சூழல் ஏற்படும் பட்சத்தில் முஸ்லிம்களையும் இணைத்துக் கொள்ளலாம்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# ஈ.பி.டி.பிக்கு மாத அரச நிதி ஏழு மில்லியன் ரூபா

## இலங்கைக் கடிதம்

இக் கடிதத்தில் அரசுப்படைகளுடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக் குழுக்களின் நிலைபற்றி எழுத விரும்புகிறேன். குறிப்பாக ஈபி.டி.பியைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்பொழுது மூன்று தமிழ் ஆயுதக் குழுக்கள் வட-கிழக்கில் இயங்குகின்றன. ஈபி.டி.பி., புளொட், ஈபி.ஆர்.எல்.எப் வரதர் அணி ஆகியவே அவை. தன்னிடமிருந்த ஆயுதங்கள் 2000ம் ஆண்டில் நடந்த பாராளுமன்ற தேர்தலின்போது களையப்பட்டுவிட்டதாக ரெலோ கூறுகிறது

இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு அரசு மாதா மாதம் சம்பளம் வழங்கி வருகிறது. இராணுவத்தினருடன் இணைந்து செயல்படுவதால் இந்த சம்பளம்கொடுக்கப்படுகின்றது.

"இராணுவத்தில் சேரும் எண்ணம் புளொட் அமைப்பினருக்குக் கிடையாது. அவ்வாறான தேவையும் இல்லை. ஆனால் எமது உறுப்பினர்கள் இராணுவத்தில் இணைய விரும்பினால் அதற்கு தடை எதுவும் இல்லை. நாங்கள் துணைப்படை அல்ல. ஆயுதக் குழுவாக இருந்த நாம்

புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ்க் குழுக்கள் சம்பந்தமான பிரிவை நடைமுறைப் படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளது. கிழக்கில் செயற்படும் தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடக் கூடாது என்று அவர்களுக்கு

அல்லது மறைமுகமான படுகொலைகள் என விரிவு படுத்தப்பட வேண்டும்.

உடன்படிக்கையின் பிரிவு 1.7 இன் படி ஒரு தரப்பினர் மறுதரப்பினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ஆயுதங்களுடனும் இராணுவ உபகரணங்களுடனும் நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் புலிகள் தமது கட்டுபாட்டுப் பகுதியினுள் ஆயுதங்களுடன் நடமாடுவதற்கும் வெளியிலிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் எந்தவிதத் தடையுமில்லை.

உடன்படிக்கையின் பிரிவு 1.13 இன்படி ஆயுதங்களற்ற நிலையில் புலி உறுப்பினர்கள் வடக்கு கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்று அரசுடன் இணைந்து

### புரிந்துணர்வு ஒப்பந்தம்: தமிழ்க்குழக்கள் ஆயதங்கள் வைத்திருக்க முடியாது

# ஆயதக் களைவு அரசுக்கு முக்கியம்

ஈபி.டிபிக்கு மட்டும் மாதம் 7 மில்லியன் ரூபா வழங்கப்படுகின்றது.

இவர்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென்று நிபந்தனை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் போடப்பட்டிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் ஒப்பந்தத்தில் செய்யப்பட்டுள்ளன. முப்பது நாட்களுக்குள் இதைச்செய்ய வேண்டும்.

இதுவரை காலமும் இராணுவத்துக்கு உதவியதற்கு இது தானா பரிசு என்று தமிழ்க் குழுக்கள் கேட்கின்றன. ஒளிந்து மறைந்து இராணுவத்துக்கு உதவிதேவை இல்லை. இராணுவத்துடன் வீரமுள்ள படை வீரர்களாக சேருங்கள். ஏனைய படை

ஜனநாயக நீரோட்டத்தில் சங்கமித்தோம். ஆயுதங்களில் பயிற்சி பெற்ற எமது உறுப்பினர்களில் அநேகர் தற்போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

"எனவே இராணுவத்தில் இணைந்து பணியாற்ற அவர்கள் விரும்பமாட்டார்கள். தொழிலுக்காக அவர்கள் அதில் சேருவதற்கு புளொட் தடையாக இருக்கமாட்டாது," என்று கூறினார்.

**தீவுப் பகுதி**

தீவுப் பகுதி ஈபி.டிபி யின் கட்டுப்பாட்டின் இருந்து வருகிறது. உடன்பாட்டில் இது பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. அரசாங்க வட்டாரங்களில் விசாரித்த போது அரசு உத்தரவிடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் செயற்படும் ரெலோ, புளொட், ஈபி.டி.பி. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். போன்றவை இப்பகுதியில் தங்களின் ஆயுதந்தரித்த செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. இதைக் கண்டிப்பாகக் கடைபிடிக்குமாறும் தெரிவித்துள்ளது.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ம் ஈழப்போர் வெடித்ததையடுத்து அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸாவின் அறிவுறுத்தலின் பேரில்

கொண்ட ஈபி.டி.பி. போன்ற அமைப்பின் உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் பொதுமக்கள் என்ற போர்வையில் பிஸ்டல் போன்ற கைத்துப்பாக்கிகளுடன் நடமாடும் புலி உறுப்பினர்களின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த உடன்படிக்கையில் எந்தவித ஏற்பாடுகளும் இல்லை.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் செயற்பாடுகள் பற்றி உடன்படிக்கையில் எதுவிதமான ஏற்பாடுகளும் இல்லை.

இலங்கை அரசின்

# சந்திரிகா-ஜே.பி.பி-டக்ளஸ் கூட்டு தீவுப்பகுதி அமைதிக்கு வருமா?

வீரர்களைப் போல உங்களைக் கவனிக்கிறோம் என்றுபதில் சொல்லப்பட்டதாம்.

"படையில் இணைந்ததும் வடக்கு கிழக்குக்கு வெளியே சேவையில் ஈடுபடுத்துவோம். அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன," என்றும் சொல்லப்பட்டதாம்.

**இணையமாட்டோம்**

இராணுவத்துடன் இணைந்து பணியாற்றும் திட்டம் எதுவும் ஈபி. டிபிக்குகிடையாது என அக்கட்சியின் ஆலோசகர் டாக்டர் விக்னேஸ்வரன் கூறினார்.

"ஆயுதங்களை ஒப்படைக்க அரசு கோரினால் அதனை நிறைவேற்ற ஈ.பி.டி.பி. தயாராக உள்ளது. விடுதலைப் புலிகளிடமிருந்து எம்மைப் பாதுகாப்பதற்காகவே ஆயுதங்களை வைத்துள்ளோம். இவை சட்டவிரோதமானவை அல்ல. எமது பாதுகாப்புக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்தால் ஆயுதங்கள் தேவை இல்லை. அத்துடன் தீவுப் பகுதியில் இராணுவமும் கடற்படையும் போதிய பாதுகாப்பை வழங்கும் என நம்புகின்றோம். எமது அலுவலகங்கள் தொடர்ந்தும் இயங்கவுள்ளன," என்று அவர் தெரிவித்தார்.

ஆயுதங்கள் வைத்திருப்பது தொடர்பாக புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்தார்: புலிகளிடமிருந்து எம்மைப் பாதுகாப்பதற்காக வைத்திருக்கும் ஆயுதங்களை மீள ஒப்படைக்குமாறு அரசாங்கம் கோரினால் அவற்றைக் கொடுத்து விடுவோம். ஆனால் எமது பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும் வடக்கு - கிழக்கிலுள்ள எமது அலுவலகங்களை தொடர்ந்து வைத்திருப்போம்.

அதைப்பற்றி விசேஷமாகக் கூறத்தேவையில்லை. ஈபி.டிபியினரின் ஆயுதங்கள் களையப்படும். அவர்கள் வேண்டுமானால் படையுடன் இணையலாம். படையுடன் இணைந்தால் அவர்கள் வடக்கு கிழக்குக்கு வெளியே அனுப்பப்படுவர்.அதை நடைமுறைப் படுத்தியதும் தீவுப் பகுதி மக்கள் ஈபி.டி.பி. ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டுவிடுவர் என்ற பதில் வந்தது.

ஈபிடி.பியின் ஆட்சி அஸ்தமித்ததும் தீவுப் பகுதிக்குள் மற்றக் கட்சியினர் போக முடியும் என்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பினர் கூறினர்.

ரெலோ சிவாஜிலிங்கம் இது பற்றிச் சொன்னார்: ஈபி.டிபியினர் ஜனநாயகம் பற்றிப் உரத்துப் பேசுகிறார்கள். ஜனநாயகம் பற்றிப் பேச அவர்களுக்கு என்ன உரிமையிருக்கிறது. அவர்கள் தானே தீவுப் பகுதி மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை நசித்து வந்தவர்கள். டிசம்பர் 5ம் திகதி பொதுத் தேர்தலின் போது தீவுப் பகுதிக்கு தேர்தல் பிரசாரம் செய்யப் போய் நாரந்தனையில் வழிமறிக்கப்பட்டு வாள் வெட்டுக்கு இலக்கானவர் சிவாஜிலிங்கம்.

அவருக்கு இன்னும் கால் சுகம் வரவில்லை. நொண்டிக் கொண்டு தான் திரிகிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. ரவிராஜ் சொன்னார்: ஈபி.டிபியினர் ஒரு கொலைகாரக் கும்பல். கடந்த தேர்தல் காலத்தில் நாரந்தனையில் இது உறுதியாயிற்று. இந்தக் கும்பல் மத்தியில் அரசியல் நடத்த முடியாது. இந்த மண்ணிலிருந்தே இந்தக் குழு அகற்றப்பட வேண்டும்.

**அரசாங்க நடவடிக்கை**

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன ரெலோ. புளொட். ஈபி.ஆர்.எல்.எப். ஈபி.டி.பி. ஆகிய அமைப்புக்களை இராணுவத்தினரின் உதவிக்காக வடக்கு கிழக்கில் ஆயுதங்களுடன் அமர்த்தினார்.

தற்போது புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதால் இவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இக்குழுக்களின் உறுப்பினர்கள் இராணுவத்துடன் இணைக்கப்பட்டு வடக்கு கிழக்கிற்கு வெளியே கடமையில் அமர்த்தப்படவுள்ளனர்.

ஈபி.ஆர்.எல்.எப். ஐச் சேர்ந்த ஒரு குழுவினர் பல வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தில் இணைந்த போதிலும் ரெலோ மற்றும் புளோட்டை சோந்தவர்கள் அவ்வாறு இணையவில்லை.

**ஈபி.டி.பி அறிக்கை**

ஈபி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய தன் கட்சியின் அவதானிப்புக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சனிக்கிழமை அனுப்பிவைத்திருக்கிறார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:

உடன்படிக்கையில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அவற்றுக்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உடன்படிக்கையின் பிரிவு 12 இன் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் படுகொலைகள் என்பது நேரடியான

கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் இலங்கைப் பொலிஸார் கண்காணிப்பர். ஆனால் இப் பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் குலைக்க முயலும் புலி உறுப்பினர்களை கட்டுப்படுத்த எந்த ஏற்பாடும் உடன்படிக்கையில் காணப்படவில்லை. இதன் காரணமாக இப்பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபடுவதற்கும் ஈபி.டி.பி போன்ற அரசியல் கட்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

**சந்திரிகாவுடன் டக்ளஸ்**

அரசாங்க-எல்ரிரிஈ புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தோற்கடிப்பதற்கு டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் ஜே.வி.பியுடனும் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

இதற்கான கூட்டமொன்றைச் சந்திரிகா திங்கட் கிழமை கூட்டினார். அக் கூட்டத்தில் டக்ளஸ் பங்கு பற்றினார்.

ரணிலின் உடன்படிக்கையை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும்" என்று அக் கூட்டத்துக்குப் போன டக்ளசை சந்திரிகா வரவேற்றார்.

"ஆம் அதில் நான் உங்களோடு நிற்கிறேன்" என்று பதிலளித்தார் டக்ளஸ்.

தன் அமைப்பு ஒர் அரசியல் கட்சி எனவும், ஆயுதக் குழு அல்ல என்றும் டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்.

"புலிகள் எங்களை அழிக்க முயலுகிறார்கள். எங்களைப் பாதுகாப்பதற்காகவே ஆயுதம் வைத்திருக்கிறோம்" என்கிறார் அவர்.

நம்நாடு தொடர்புகளுக்கு:
020 8472 2900

படிப்பகம்

www.padippakam.com



# ஆண்டிப்பட்டி அம்மாவுக்கு

## முதலமைச்சர் ஆகிறார் ஜெயலலிதா

தமிழ் நாட்டுத் தபால்



மீண்டும் முதலமைச்சராகிறார் ஜெயலலிதா

தமிழக முதல்வராக ஜெயலலிதா மார்ச் 2இல் பதவியேற்பார்

ஆண்டிப்பட்டித் தொகுதியில் வெற்றியீட்டியுள்ள அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை தமிழக முதல்வராக பதவியேற்றக வருமாறு தமிழக ஆளுநர் ராம் மோகன்ராவ் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனையடுத்து ஜெயலலிதா எதிர்வரும் மார்ச் 2ம் திகதியன்று முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் பன்னீர் செல்வம் தமது ராஜினாமா கடிதத்தை ஆளுநர் ராம் மோகன் ராவிடம் கையளித்துள்ளார்.

ஜெயலலிதா பதவியேற்கவிருக்கும் மார்ச் 2ஆம் திகதியன்று அமைச்சரவையிலும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்படவுள்ளது.

"தமிழகத்தின் முன்னேற்றத்துக்கு அயராது உழைப்பேன்," என்று ஆண்டிப்பட்டி வெற்றியை அடுத்து ஜெயலலிதா அறிக்கை விடுத்துள்ளார்.

"ஜாதி மத வேறுபாடுகளையெல்லாம் கடந்து தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக உழைப்பேன் என்று எனது சூளுரையை மீண்டும் இந் நல்ல நேரத்தில் நினைவு கூருகிறேன்," என்று ஜெயலலிதா அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவு

இந்தியாவில் கடும் சர்ச்சைக்குரிய பெண் அரசியல்வாதியும் தமிழக முன்னாள் முதலமைச்சருமான ஜெயலலிதா ஆண்டிப்பட்டித் தொகுதி சட்டமன்றத் தேர்தலில் 41201 வாக்குகளால் அமோக வெற்றியீட்டியுள்ளதுடன் மீண்டும் முதலமைச்சராகிறார்.

ஜெயலலிதாவுக்கு 78,437 வாக்குகள் கிடைத்தன. கருணாநிதியின் தி.மு.கவைச் சேர்ந்த வைகை சேகருக்கு 37,236 வாக்குகளும் ம.தி.மு.க வேட்பாளர் ஜெயச்சந்திரனுக்கு 8,420 வாக்குகளும் புதிய தமிழகத்தின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமிக்கு 5,175 வாக்குகளும் கிடைத்தன.

ஜெயலலிதா வெற்றிபெற்றதையடுத்து அவரின் அ.தி.மு.க சட்டசபை உறுப்பினர்கள் ஞாயிறு பிற்பகல் கூடி சட்டசபை கட்சித் தலைவராக ஜெயலலிதாவை தெரிவு செய்தனர்.

அதன் பின்னர் முதலமைச்சர் பன்னீர்செல்வம் தனது இராஜிநாமா கடிதத்தை தமிழக ஆளுநர் ராம் மோகன் ராவிடம் கையளித்தார்.

முதலமைச்சராகபதவியேற்கவுள்ள ஜெயலலிதா பன்னீர்செல்வத்தை தூய தொண்டன் என்று பாராட்டினார்.

நன்றி கூறினார்

செய்தியாளர்களுக்கு ஜெயலலிதா வழங்கிய பேட்டியளித்தார்.

"இதுவரையில் எந்த அரசியல் கட்சித் தலைவரும் சந்திக்காத சோதனைகளையும் இடையூறுகளையும் வெற்றிகரமாகச் சந்தித்து வெற்றிகொண்டுள்ளேன். இந்த வெற்றிக்கு அண்ணா தி.மு.க உடன் பிறப்புக்கள் காட்டிய அன்பும் ஆதரவும் தான் காரணம்.

ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்பட்ட அ.தி.மு.க தொண்டர்களின் ஆதரவுடன்தான் இந்தளவுக்கு நான் வெற்றிபெறுவதற்கு முக்கிய காரணம் என்பதை மீண்டும் சொல்லிக் கொள்கின்றேன்.

தமிழ் நாட்டில் மட்டுமல்ல உலகத்திலேயே வேறு எந்த அரசியல் தலைவருக்கும் இந்தத் துன்பங்களும் இத்தனை சோதனைகள் தொந்தரவுகள் இடையூறுகள் நேர்ந்திருக்காது ஐந்தாண்டுகளுக்கு முன்னால் என்னுடைய வரலாறு முடிந்துவிட்டது அ.தி.மு.க வரலாறு முடிந்துவிட்டது என்று பலரும் சொன்னார்கள். ஆனால் அப்படிச் சொன்னவர்களின் கூற்றைத் தவறு என்று நிரூபித்து இருக்கிறோம்.

இந்த வரலாறு வெற்றி வரும் காலங்களில் சோதனைகளுக்கு ஆட்படும் அனைவருக்கும் துணையாகதுணிவாக உறுதியாக சோதனைகளை எதிர்கொள்வதற்கான ஒரு பாடமாக இருக்கும்.

விரக்தியின் விளிம்புக்குச் செல்வோருக்கும் புதியநம்பிக்கையையும் தெம்மையும் அளிக்கும் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதைத் திரும்பவும் சொல்கிறேன். நீதிக்கு வீழ்ச்சியே கிடையாது. தர்மத்தின் வாழ்வுதனை சூது கல்வும் தர்மம் மீண்டும் வெல்லும். என்பதை மீண்டும் தெரிவிக்கின்றேன்.

வாழ்நாளிலேயே மிக மகிழ்ச்சியான மிகச் சிறந்த பிறந்தநாள் பரிசாக இதைக் கருதுகிறேன்.ஆண்டிப்பட்டி வாக்காளப் பெருமக்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியை உள்ளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்: தேர்தல் நேரத்தில் ஆண்டிப்பட்டி தொகுதி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன் என்பதை மீண்டும் உறுதியாக கூறுகிறேன்.

என்னுடைய பிறந்தநாள் செய்தியாக எல்லாத் துறைகளிலும் தமிழ் நாட்டை இந்தியாவில் முதன்மை மாநிலமாக்கும் வரை ஓயமாட்டேன். அதேபோல் ஆண்டிப்பட்டித்தொகுதியை இந்தியாவின் முதன்மைத் தொகுதியாக மாற்றிக் காட்டுவேன்," என்றார் அவர்.

ஞாயிற்றுக்கிழமை ஜெயலலிதாவின் 54வது பிறந்த தினம். இத் தேர்தல் முடிவபற்றி தி.மு.க தலைவர்கருணாநிதி சொன்னார்: முடிவுகள் நாம் எதிர்பார்த்தது தான்.

மத்திய தேர்தல் ஆணையத்திடம் தேர்தல் முறைகேடு தொடர்பாக முறையிட்டும் அது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று கவலைதெரிவித்த கருணாநிதி தாம் இம்முடிவை ஆட்சேபித்து வழக்கு தொடரப் போவதாகக் கூறினார்.

கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்கக் கோரி குமரி முதல் சென்னை வரை பிரசாரபயணம் வந்த தமிழறிஞர்கள் சென்னையில் கண்ணகி சுடரை கருணாநிதியிடம் வழங்கினார்கள்.

சென்னை கடற்கரையில் இருந்த கண்ணகி சிலையை வாஸ்து சாஸ்திரப்படி அ.தி.மு.க அரசு அகற்றியது. சிலையை மீண்டும் அதே இடத்தில் அதே நிலையில் வைக்கக் கோரி கவிஞர் வா.மு.சேதுராமன் தலைமையில் கன்னியாகுமரியிலிருந்து கடந்த 12ம் திகதி ஊர்திமூலம் பிரசார பயணம் மேற்கொண்டார்.

திருநெல்வேலி விருதுநகர் தஞ்சை, சிதம்பரம், கடலூர் பாண்டிச்சேரி வழியாக திருத்தணியை பிரசார பயணம் வந்தடைந்தது. கலைஞர் பொன்விழா விளைவு அருகில் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழறிஞர் குழுவினரை அண்ணா அறிவாலய வளாகத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி வரவேற்று வாழ்த்து தெரிவித்தார். தமிழறிஞர்கள் ஏந்தி வந்த கண்ணகி சுடரை கருணாநிதியிடம் தந்தனர். பிரசாரப் பயணம் பற்றி அவர்களிடம் கருணாநிதி கேட்டறிந்தார்.

அதன் பிறகு கவிஞர் வா.மு. சேதுராமன் கூறினார்:

சென்னை கடற்கரையில்லிருந்து அகற்றப்பட்ட கண்ணகி சிலையை மிண்டும் அதேஇடத்தில்அதே நிலையில் வைக்க அரசை வலியுறுத்தி நாங்கள் மேற்கொண்ட பிரசார பயணம் வெற்றிகரமாக அமைந்தது. வழிநெடுக மக்கள் எங்கள் கோரிக்கைக்கு ஆதரவு அளித்தார்கள். நாங்கள் ஏந்தி வந்த கண்ணகி சுடரை தமிழின தலைவராக இருக்கும் கலைஞரிடமதந்துள்ளோம். கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவும் வரை போராட்டம் தொடரும்

## தமிழ் நாட்டில் தி.மு.க- பா.ஜ. கூட்டணி நீடிக்கும்

தமிழ் நாட்டில் திமுக -பாரதீய ஜனதா கட்சிக் கூட்டணி நீடிக்கும் என்று மாநில பொதுச் செயலாளர் இல. கணேசன் கூறினார். பாரதீய ஜனதா கட்சியின் மாநில பொதுச் செயலாளர் இல. கணேசன் திருசி சங்கம் ஓட்டலில் நிருபாகளுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழ் நாட்டில் இப்போது திருநாவுக்கரசு பா.ஜவில் சேர்ந்திருப்பது கட்சிக்கு கூடுதல் பலம் தான். தமிழ் நாட்டில் இப்போது பாரதீய ஜனதாக் கட்சிக்கு மக்களிடம் அங்கீகாரம் கிடைத்து இருக்கிறது. தமிழ் நாட்டில் தி.மு.கவுடன் எங்கள் கட்சிக்கு கூட்டணி நீடிக்கும். அ.தி.மு.க ஆட்சியைக் கலைக்கும் முயற்சியில் பா.ஜவோ தி.மு.கவோ ஈடுபடாது.

## அ.தி.மு.கவுடன் நட்பும் இல்லை பகையும் இல்லை

அதிமுகவுடன் நட்பும் இல்லை பகையும் இல்லையென காங்கிரஸ் தலைவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். முன்னாள் மத்திய மந்திரி அருணாசலம் முன்னாள் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் எம்.பி.சுப்பிரமணியம் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: ஆண்டிப்பட்டித் தேர்தலில் அதிமுக வேட்பாளர் ஜெயலலிதாவை முழுமையாக ஆதரித்து வேலை செய்ய வேண்டும் என்றும் அதன் மூலம் காங்கிரஸ் நன்றிக்கடனை செலுத்த வேண்டும் என்றும் தமிழ் நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வி.தங்கபாலு அறிக்கைவிட்டார். அதிமுகவை ஆதரித்து அறிக்கை விட்டதாக உங்கள் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கூடாது என தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஈ.வெ.கி.ச.இளங்கோவன் தங்கபாலுவுக்கு கடிதம் அனுப்பியிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. காங்கிரஸ் கட்சியையும் அதன் தலைவா சோனியா காந்தியையும் அ.தி.மு.கவைச் சேர்ந்த காளிமுத்து மற்றும் செங்கோட்டையன் ஆகியவர்கள் கடுமையாக விமர்சனம் செய்த பின்னரும் காங்கிரஸ் கட்சி அ.தி.முக.வுடன் நாடாளுமன்ற தேர்தலிலும் சட்டமன்ற தேர்தலிலும் தேர்தல் உடன்பாடு கண்டது உண்மைதான். இந்த உடன்பாட பரஸ்பரம் லாபம் கருதியே ஏற்பட்டவை. காங்கிரஸ் வெற்றிக்கு அ.தி.முக பயன்பட்டதைப் போல அதிமுக வெற்றிக்கு காங்கிரஸ் பயன்பட்டதை அரசியல் புரிந்தவர்கள் நன்கு உணர்வார்கள். காங்கிரஸ்-அதிமுக கூட்டணி தொடர்கிறது என அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் பல தடவை கூறியது உண்மையே ஆனால் அதை ஏற்று அதிமுக வின் சார்பாக அதிமுக காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது என யாரும் இதுவரை கூறவில்லை. இந்தநிலையில் ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் காங்கிரஸ் மேலிடம் காங்கிரஸ் போட்டியிடாது என்றோ அல்லது ஆதரிக்க வேண்டும் என்றோ கட்சி மேலிடம் முடிவெடுக்கவில்லை. அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் கட்சிக்கு நட்பும் இல்லை பகையும் இல்லை. இவ்வாறு அவர் அறிக்கையிலே கூறியுள்ளார்.

www.padippakam.com



# ரெலோவின் பெண் போராளிகளை புலிகளாகச் சேர்த்தார்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல்

மகளிர் பிரிவு

ரெலோவில் சேருவதற்காகத் தமிழ் நாட்டுக்குப்போய் ஏமாற்றமடைந்த இளம் பெண்களின் நிலையைக் கத்தோலிக்க மதகுருமார் எடுத்துரைத்தபோது பிரபாகரன் மிகவும் கவலைப்பட்டார். அவர்களைத் தன் இயக்கத்தில் சேர்க்க இணங்கினார்.

தங்களுக்கு ஆயுதப்பயிற்சியளித்து புலிகள் நடத்தும் தாக்குதல்களில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையைப் பற்றி அவர் பாலசிங்கத்துடனும் அவரின் மனைவி அடெலேயுடனும் மிகவும் ஆழ்ந்து ஆராய்ந்தார். இளம் பெண்களைத் துணைப் படையினராகப் பயிற்சியளிப்பதில் சிக்கல் எதுவும் இல்லை. ஆயுதம் தூக்கிப் போராடும் போராளிகளாக்குவதற்குத் தமிழ்ச் சமூகம், அதுவும் பழமையில் ஊறிய யாழ்ப்பாணச் சமூகம் அதை ஏற்றுக் கொள்ளுமா? இந்த வினா சில நாட்கள் மிகவும் ஆழமாக விவாதிக்கப்பட்டதாக அடேலே தன் விடுதலை வேட்கை என்னும் நூலில் கூறுகிறார். அந்த முடிவு எடுக்கப்படும் வரை ரெலோவிலிருந்தும் வேறு இயக்கங்களிலிருந்தும் விலகி எல்ரிரிஈயில்

காக கைது செய்யப்பட்ட நிர்மலாவும் நித்தியானந்தனும் இராணுவத்தினரால் கடுமையாக விசாரிக்கப்பட்டனர். அந்த விசாரணையை அப்போது யாழ்ப்பாண இராணுவ உளவுப் பிரிவில் இருந்த சரத் முனசிங்க நடத்தினார். அவ்விசாரணையின் போது நிர்மலா சீலனைப் புகழ்ந்து பேசியதோடு பிரபாகரனின் அரசியல் சிந்தனையுடன் தான் வேறுபடுவதாகக் கூறியுள்ளார். அவர் மார்க்சிய அணுகு முறையில் நம்பிக்கை கொண்டவர்.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையால் பாதிப்புறாத நிர்மலா மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். மட்டக்களப்பு

என்பது அவருக்குப் புரியுதில்லை''

மற்றது. 1985 ஏப்பிரலில் தொண்டமான் சொன்னது. ரஜீவ் தனது வெளிவிவகாரச் செயலாளராக ரொமேஷ் பண்டாரியை நியமித்தார். அவர் கொழும்புக்கு விஜயம் செய்த போது தொண்டமானை அவரின் கொள்ளுப்பிட்டி அமைச்சு அலுவலகத்தில் போய்ச் சந்தித்தார். ஒரு மணித்தியாலம் நடந்த அச்சந்திப்பின் பின்பு ஒரு பிரபல தமிழச் செய்திளரிடம் தொண்டமான தமிழில் சொன்னார்:

''அவனுக்கு ஒன்றும் விளங்குதில்லை,'' என்று தமிழர் பிரச்சினையைப் புலிந்து கொள்ள முடியாத இருவர்

நிலையத்தைத் தாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. தோல்வியுற்ற அம் முயற்சியுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறி ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்.

நவம்பர் 19ம் திகதி தெல்லிப்பளையில் நிலக்கண்ணித் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. அத் தாக்குதலில் வட பகுதி கட்டளைத் தளபதி கேர்ணல் ஏ. ஆரியப்பெருமா கொல்லப்பட்டார். அவருடன் பயணம் செய்த மூன்று அதிகாரிகள் படுகாயமடைந்தனர். அன்றும் அடுத்த நாளும் படையினர் தெல்லிப்பளையைச் சுற்றி




# சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதல்

சேர்ந்த பெண்கள் பாலசிங்கம் தங்கியிருந்த திருவான்மியூர் இல்லத்தில் தங்கியிருந்தனர். அங்கு ஏற்கனவே தங்கியிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சத்தியாகிரகிகள் நால்வருடன் (மதி கோஷ்டியினர்) அவர்கள் சேர்ந்து கொண்டனர்.

அந்த விவாதங்களின் போது மாதர் பிரிவின் தலைவியாக நிர்மலா நித்தியானந்தனை நியமிக்கலாமா என்ற விடயமும் எழுந்தது. மட்டக்களப்புச் சிறையிலிருந்து புலிகளால் காப்பாற்றப்பட்டு சென்னைக்கு நிர்மலா கொண்டு செல்லப்பட்டார். 1982ல் புலிகள் நடத்திய சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது காயமுற்ற சீலனை (சார்ல்ஸ் அந்தோனி) மறைத்து வைத்து வைத்தியம் செய்தமைக்காக அவரும் அவரின் கணவர் நித்தியானந்தனும் படையினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டனர். 1983 ஜூலை கலகத்தின் போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடந்த படுகொலையின் போது மேசையை உடைத்து அதன் கால்களால் தம்மைத் தாக்க வந்தவர்களைத் திருப்பித் தாக்கியவர்களுக்குத் த்லைமை தாங்கியவர் நித்தியானந்தன். மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்ட அவர் அங்கு நடந்த சிறையுடைப்பின் போது தப்பி சென்னைக்கு சென்றார்.

மலையகத்தைச் சேர்ந்த அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பட்டதாரி. இடதுசாரி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த நித்தியானந்தன் கொழும்பு தினகரன்பத்திரிகையில் சொற்ப காலம் உதவி ஆசிரியராக பணிபுரிந்த பின் பேராசிரியர் கைலாசபதியின் உந்துதலால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர். சென்னையில் 1984ல் ஆரம்பிரத்த புலிகளின்உத்தியோகப் பத்திரிகையான ''விடுதலைப் புலிகளை'' ஆரம்பித்து அதன் ஆசிரியராக இருந்தவர். ஆசிரியர் தலையங்கத்தையும்உலகின் விடுதலை இயக்கங்களைப் பற்றிய வரலாறுகளையும் அவர் எழுதினார்.

நிர்மலா

நிர்மலாவும் ஒரு பட்டதாரி. நாடகத்துறையில் ஈடுபட்டு உழைத்தவர். பாலேந்திராவின் சில படைப்புக்களில்- முக்கியமாக கண்ணாடி வீடுகள்-நடித்து மக்களைக் கவர்ந்தவர். அவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமை புரிந்தவர். அங்கு தான் நித்தியானந்தனைக் காதலித்து திருமணம் செய்தார்.

சீலனுக்குவைத்தியம் செய்தமைக்

சிறைச்சாலையின் உடைப்பின் போது பெண்கள் பகுதியில் தங்கியிருந்த அவர் த்வற விடப்பட்டார். சீலனுக்கு சிகிச்சையளித்து கைதான அவரை விடுவிப்பதற்கு பிரபாகரன் வேறொரு சிறையுடைப்பை நடத்த வேண்டியிருந்தது.

ஆங்கிலத்தில் செயலாற்றவல்ல நிர்மலாவிடம் எல்ரிரிசயின் மகளிர் பிரிவை ஆரம்பிக்கும் பொறுப்பை விடும்படி அடெலே பிரபாகரனுக்கு ஆலோசனை கூறினார். அதற்கு பிரபாகரன் இணங்கவில்லை. தன் எதிர்ப்புக்கு அவர் போதிய காரணங்களையும் கூறினார்.

நிர்மலாவின் அணுகுமுறை மார்க்சிய சித்தாந்தத்தின் அடிப்படையிலானது. மேற்குலக பெண்ணியச் சிந்தனையால் ஆட்கொள்ளப்பட்டது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் இளம் பெண்களின் உணர்வுகளையும் சிந்தனையையும் நிர்மலாவால் கிரகிக்கவோ புரிந்து கொள்ளவோ மதிக்கவோ முடியாது.

நிர்மலா பற்றிய பிரபாகரனின் மதிப்பீடு சரியென்பதை அடெலே சில மாதங்களில் புரிந்து கொண்டார். நிர்மலாவை அங்கு வசித்த இளம் பெண்கள் விரும்பவில்லை. அவர்களின் போக்கு வேறு. நிர்மலா அதை மதிக்கவில்லை. அதனால் 1984ம் ஆண்டு இறுதியில் 'அவர் தன் கணவன் நித்தியானந்தனுடன் எல்ரிரிஈயுடனான தன் உறவை துண்டித்துக்கொண்டார்.

ரஜீவ் காந்தி

எல்ரிரிஈயின் மாதர் பிரிவு உருவாகிக் கொண்டிருக்கையில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை பெருமளவில் பாதித்த-ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய- இந்திரா காந்தியின் கொலை நடந்தது. இந்திராகாந்தியின் இடத்தை அவரின் மூத்த மகன் ரஜீவ் காந்தியைக் கொண்டு காங்கிரஸ் கட்சியினர் நிரப்பினர்.

ரஜீவ் காந்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கையாண்ட கதையைக் கூறுவதற்கு முன்பு இரண்டு சம்பவங்களை முன்னுரையாகக் கூறவிரும்புகிறேன்.

முதலாவது கொழும்பில் நடந்த சந்திப்பு ஒன்றின் போது யாழ்ப்பாண பிரஜைகள் குழுவினருக்கு இந்திய ஹைக்கமிசனர் ஜே.என்.தீக்ஷித் கூறியது:

ரஜீவ் தன்னை இன்னும் விமான ஓட்டியாகவே கருதுகிறார். சில சுவிச்சுக்களைப் போட்டு விமானத்தை ஓடவைப்பது போல் தமிழர் பிரச்சினையையும் பார்க்கிறார். அதைச் செய் இதைச் செய் மற்றதைச் செய் பிரச்சினை தீர்ந்துவிடும் என்கிறார். அரசியல் மனிதர் சம்பந்தப்பட்டது

இந்தியக் கொள்ளையை வழி நடத்தத் தொடங்கினர்.

தமிழர் பிரச்சினையை நன்கு புரிந்து வைத்திருந்த இந்திரா காந்தியின் கொலையையிட்டு ஜனாதிபதி ஜெயவர்தனவும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். ''தங்கள் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த ஏ.கெ. 47 சுட்டு விழுத்தப்பட்டு விட்ட உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது.'' என்று பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வா ஒரு கருத்தரங்கில் கூறினார்.

பிரதம மந்திரியான ரஜீவ் காந்தி வெளியுறவு அமைச்சர் பதவியை தன்னுடன் வெத்துக் கொண்டார். அயல் நாடுகளுடன் நட்புறவுக் கொள்கையைக் கடைபிடிக்கப் போவதாகவும் இதுவரை நிலவிய முறுகல் நிலையைத் தளர்த்த நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் அறிவித்தார். உடனே அத்துலத்முதலி தன் ஆலோசகர்களை அழைத்து புதுடில்லியில் ஏற்பட்டுள்ள மாற்றம் இந்திய அரசாங்கத்தின் இலங்கைக் கொள்கையை எவ்வாறு பாதிக்கப்போகிறது என்ற ஆய்வொன்றை நடத்தினார்.

அந்த ஆய்வின் முடிவு இதுதான்:

இலங்கையின் இனப்பிரச்சினை இந்தியாவின் முக்கிய கவலையக இருக்காது. தங்கள் உள்ளூர் பிரச்சினையில் தான் இந்திய அரசாங்கத்தின் கவனம்இருக்கும்.

அந்த மதிப்பிட்டின்அடிப்படையில் அரசியல் தீர்வு முயற்சிகளைக் கொஞ்சக் காலம் இழுத்தடித்து இந்தியாவுக்குப் போக்கு காட்டிவிட்டு இராணுவ நடவடிக்கைக்கு முனைப்புக் காட்ட ஜெயவர்தனவும் அத்துலத்முதலியும் முடிவு செய்தனர்.

மீண்டும் வன்முறை

அதே சமயம் தமிழ் போராளிக் குழுக்களின் சிந்தனை வேறு விதமாக அமைந்தது. தமிழரின் பிரச்சினையை தமிழ் நாட்டினதும் புதுடில்லியினதும் கவனத்தில் வைத்திருக்க ஆவன செய்ய அவை தீர்மானித்தன.

அம்முடிவுக்கமைய இந்திரா காந்தியின் மரணச் சடங்கு முடிந்த சூட்டோடு- நவம்பர் 9ம் திகதி- யாழ்ப்பாணத்தில் குண்டு ஒன்றை வெடிக்க வைத்தனர். அதற்குப் பதிலளிக்கும் வகையில் யாழ்ப்பாண மார்க்கெற்றுக்கு அருகில் படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அதில் சிக்கி மூவர் இறந்தனர். அடுத்த நாளான 10ம் திகதி பீதுருதலகல மலைச் சிகரத்திலுள்ள செய்மதி தொடர்பு

வளைத்து தேடுதல் நடத்தினர்.

அடுத்த நாளான நவம்பர் 20ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ரெலோ இயக்கம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கி அழித்தது. ரெலோ நடத்திய பெரிய தாக்குதல் அதுதான்.

பிற்பகல் 2.30 மணியிருக்கும். சன நடமாட்டம் குறைந்த நேரம். 14 வயதுப் பையன் ஒருவன் பொலிஸ் நிலைய வெளிக்கதவருகே போகிறான். கதவுக்குப் பின்னால் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்திருந்த பொலிஸ்காரர் ''என்ன தம்பி'' என்ன வேணும்?" என்று கேட்கிறார்.

1982ம் ஆண்டுத் தாக்குதலுக்குப் பின்பு சாவகச்சேரி பொலிஸ் நிலைய வெளிக்கதவு எப்பொழுதும் சாத்தப்பட்டிருக்கும்.. அதன் பின்னால் துவக்குடன் ஒரு பொலிஸ் காரர் காவல் இருப்பார்.

''என்னுடைய அடையாள அட்டை துலைஞ்சு போச்சுது. புதிய அடையாள அட்டை பெறுவதற்கு பொலிஸ் 'என்ரி வேணும் என்கினம். அது தான் வந்தனான்.''

அந்த பொலிசார் ஒரு தமிழர். ஜி.சி.ஈ சாதாரணதர பரீட்சை நெருங்கி விட்டது அவருக்குத் தெரியும். அப்பரீட்சைக்கு தபால் தந்தோரில் தான் அடையாள அட்டை எடுப்பது வழக்கம். கிராம சேவகரின் அத்தாட்சிப் படுத்தலுடன் போனால் அடையாள அட்டையை வழங்குவர். அடையாள அட்டையைத் தொலைத்தால் அதுபற்றிப் பொலிசாரிடம் முறைப்பாடு செய்து அந்த முறைப்பாட்டின் பிரதியை கிராம சேவகரிடம் சமர்ப்பித்தால் புதிய அடையாள அட்டையொன்றைப் பெறுவதற்கான படிவத்தை அவர் வழங்குவார்.

பாய்தனர் போராளிகள்

அந்தப் பையனை பொலிஸ் நிலையத்துக்குள் பிரவேசிக்க அனுமதிப்பதற்காக பொலிஸ்காரர் கதவைத் திறந்தார். அப்பொது பொலிஸ் நிலையத்துக்கு எதிரே அமைந்துள்ள கட்டிடத்துக்குள் மறைந்திருந்த 35போராளிகள் தெருவைக் கடந்து போய் காவலுக்கு நின்ற பொலிஸ் காரனைச் சுட்டு விட்டு பொலிஸ் நிலையத்துக்குள் பிரவேசித்தனர். அவர்கள் எல்லோரும் இராணுவச் சீருடை அணிந்திருந்தனர். அவர்கள்சுட்டுக் கொண்டே முன்னேறியதும் பொலிசார் சிதறி ஓடி ஒளிந்து விட்டனர்.

உடனே இன்னுமொரு குழுவினர் பின் தொடர்ந்தனர். அவர்களைத் தொடர்ந்து வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட லொறியொன்று பொலிஸ்

15ம் பக்கம் பார்க்க...

படிப்பகம்

www.padippakam.com



# படையில் சேர்த்த பிரபாகரனின் பெருந்தன்மை:

14ம் பக்கதொடர்ச்சி

நிலையக் கட்டடத்துக்கு அருகே கொண்டு போய் நிறுத்தப்பட்டது. அது ஸ்ரீலங்கா மின்சார சபைக்கு சொந்தமானது. போராளிகள் அதைக் கடத்திச்சென்று வெடிமருந்துகளை நிரப்பியிருந்தனர். அதிலிருந்து மூன்று பேர் நிலத்தில் குதித்தனர். பொலிஸ் நிலையக் கட்டிடத்தை நோக்கி எறிகுண்டுகளை வீசினர். அதன் பின்பு லொறியிலிருந்து பொலிஸ்நிலையத்துக்கு வெளியே நிறுத்தப்பட்ட வானுடன் வயர்களைப் பொருத்தினர்.

அந்த வேலை முடிந்ததும் விசில் ஊதப்பட்டது. போராளிகள் எல்லோரும் பொலிஸ் நிலையத்திற்கு வெளியே ஓடினர். எல்லோரும் வெளியேறியதும் லொறியிலுள்ள வெடிபொருள்கள் வெடிக்க வைக்கப்பட்டன. அந்த வெடியின் தாக்கத்தில் பொலிஸ் நிலைய இரண்டு மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து எரிய ஆரம்பித்தது.

பதினைந்து நிமிடங்களில் பொலிஸ் நிலையத் தாக்குதலை முடித்துக் கொண்டு போராளிகள் தப்பிச் சென்று விட்டனர்.

இருபத்திநாலு பொலிசார் ஸ்தலத்திலேயே இறந்தனர் பொலிஸ் நிலையத்துக்குள் அந்த நேரம் இருந்த மூன்று பொதுமக்கள் இறந்தனர். அத் தாக்குதலில் உயிர் தப்பிய தமிழ் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தான் கண்டதை இவ்வாறு சொன்னார்:

''கண்மூடித் திறப்பதற்கும் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. எங்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. பொலிஸ் நிலையக் கட்டடம் இடிந்து விழுந்தது. உடனே வெளியிலிருந்து ஐம்பதோ அறுபதோ பாடசாலைப் பையன்கள் ஓடிவந்தார்கள். அவர்கள் நீல கட்டைக் காற்சட்டையும் வெள்ளைச் சேர்ட்டும்அணிந்திருந்தார்கள். அவர்கள் அங்கேயிருந்து ஆயுதங்களைப் பொறுக்கிக் கொண்டு போய்விட்டனர்''

சாவகச்சேரி போலிஸ் நிலையத் தாக்குதல் பற்றி செய்தி பரவியதும் பலா லியிலிருந்தும் ஆனையிறவிலிருந்தும் யாழ்ப்பாணம் குருநகரிலிருந்தும் இராணுவம் சாவகச்சேரிக்கு அனுப்பிவை க்கப்பட்டது. அவர்களால் சாவச்சேரிக்குப் போக முடியவில்லை சாவகச்சேரி நகருக்கு வெளியேயுள்ள மதகுகளைப் போராளிகள் தகர்த்து விட்டனர்.

சாவகச்சேரித் தாக்குதலை சென்னையிலுள்ள ரெலோ அலுவலகம் கொண்டாடியது. தமிழ் நாட்டில் அது பொரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அத் தாக்குதல் பற்றி அமிர்தலிங்கம் ஓர் அறிக்கை விடுத்தார்.

''ஆயுதப் படையினரும் பொலிஸ் அதிரடிப்படையினரும் வாலிபர்களுக்கு எதிரான நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி யுள்ளனர். வாலிபர்களைக் கைது செய்து சித்திரவதை செய்கிறார்கள். திருப்பித் தாக்குவதே சிறந்த பாதுகாப்பு நடவடிக்கை என்று வாலிபர்களில் ஒரு பகுதியினர் கருதியிருக்கலாம். சாவகச்சேரி தாக்குதலை இக்கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டும்'' என்று அவரின் அறிக்கை கூறியது.

நவம்பர் 23ம் திகதி இரவு மட்டக்களப்புக் கடற்கரையை இரண்டு படகுகள் அடைந்தன. பதுங்கியிருந்த படையினர் கரையில் இறங்கியோர் மீது தாக்குதல் நடத்தினர். அத் தாக்குதலின் போது ஐந்து போராளிகள் கொள்ளப்பட்ட தாகவும் 10 ஏ.கே. 47 களும் 3000 சுற்று வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதாக வும் படையினர் அறிவித்தனர். ஒரு படகைத் தாங்கள் அழித்துவிட்டதாகவும் மற்றப் படகு தப்பிச் சென்று விட்டதாகவும் அவர்கள் கூறினர்.

ஈழப்பிரகடனப் பிரசாரம்

அதையடுத்து தகவல் இராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் பத்திரிகை மகாநாடு ஒன்றை நடத்தினார். 1985 ஜனவரியில் இந்தியாவிலிருந்து இலங்கை மீது படையெடுப்பதற்கும் தைப் பொங்கல் தினத்தன்று ஈழப்பிரகடனம் செய்வதற்கும் தமிழ்ப் பயங்கரவாதிகள் நடவடிக்கை எடுப்பதாக அவர் அறிவித்தார்.'' அப்பயமுறுத்தலை எதிர் கொள்ள இலங்கை தயார். எமது நாட்டின் ஒருமைப் பாட்டை பாதுகாப்ப தற்காக போருக்கும் நாங்கள் தயார்'' என்று ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் சொன்னார்.

இந்திய அரசாங்கம் அக் குற்றச்சாட்டை மறுத்தது. யுத்த மனோநிலையை இலங்கை திட்டமிட்டு உருவாக்குவதாக புது டில்லியில் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குற்றம் சாட்டினார்.

சாவகச்சேரி தாக்குதல் அரசாங்கத் தை-குறிப்பாக அத்துலத் முதலியையும் ஜெயவர்தனவையும்- நிலைகுலையச் செய்துவிட்டது. அதையடுத்து ஜெயவர்தனவின் தலைமையில் தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூடியது. அக் கூட்டத்தில் தான் போராளிகள் மீது தமிழீழப் பிரகடனக் குற்றச்சாட்டைச் சுமத்தவும் இந்தியாவிலிருந்து அவர்கள் படையெடுக்கப்ப போவதாகக் குற்றம் வாட்டுவதற்கும் முடிவு எடுக்கப்பட்டது. அக் குற்றச் சாட்டின் மூலம் ரஜீவ் காந்தியை ஆழமறிவதற்கும் இந்தியாவை தாக்குதல் நிலையிலிருந்து பாதுகாப்பு நிலைக்கு தள்ளுவதற்கும் திட்டமிடப்பட்டது.

இந்தியாவின் ஆத்திரம் கலந்த மறுப்பைத் தான் ஜெயவர்தன எதிர்பார்த் தார். அந்த மறுப்பு வந்ததும் அத்துலத்முதலி மூலம் அதற்குப் பதிலளித்தார்.

''அதனால் (போர் மனோநிலையை உருவாக்குவதால்) எங்களுக்கு என்ன இலாபம்? இந்த அரசாங்கத்துக்கு பெரும்பான்மை ஆதரவு உண்டு. அடுத்த தேர்தல் 1989ல் தான் நடக்கவுள்ளது'' என்றார். அத்துலத்முதலி.

அந்தப் பதில் மூலம் அவர் இந்திய அரசாங்கத்துக்கு அவர் ஒரு ''சூடு'' கொடுத்தார்.

ரஜீவ் காந்தி பிரதம மந்திரியானதும் தனக்கு மக்களின் ஆணையைப் பெறும் நோக்கத்துடன் பொதுத் தேர்தலை நடத்த முடிவு செய்தார். அத் தேர்தலுக்கான பிரசாரம் நவம்பர் மாத நடுப்பகுதியில் ஆரம்பித்திருந்தது. இலங்கையின் இனப்பிரசினையை வைத்து ரஜீவின் காங்கிரஸ் கட்சியினர் தமிழ் நாடு தேர்தலை நடத்தப் போகிறார்கள் என்ற தொனியை அத்துலத்முதலியின் பதில் கொண்டிருந்தது.

அத்துலத்முதலியின் சூட்டில் அர்த்தமில்லாமலுமில்லை. டிசம்பர் கடைசிவாரத்தில் தேர்தலை நடத்த ரஜீவ் திட்டமிட்டிருந்தார். அத் தேர்தலில் தமிழ் நாட்டு வெற்றி அவருக்கு மிகவும் தேவைப்பட்டது. அதற்காக காங்கிரஸ் கட்சி அ.தி.மு.க.வுடன் கூட்டுச்சேர்ந்தது. தமிழ் நாட்டின் 39 லோகசபைத் தொகுதிகளையும் இரண்டுக்கு ஒன்று என்ற விகிதாசாரத்தில் பகிர்ந்து கொள்ள இரண்டு கட்சிகளும் இணங்கின. அதாவது அதிமுக 26 தொகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ் 13 தொகுதிகளிலும் போட்டியிட முடிவு செய்தன.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண தான் முயல்வதாகக் காட்டித் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு ரஜீவ் காந்தி திட்டமிட்டிருந்தார். அதே வேளை இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்னிலைப்படுத்தி அதைத் தன் தேர்தல் ஆயுதமாக பயன்படுத்த திமுக தலைவர் கருணாநிதி திட்டமிட்டிருந்தார்.

1984ம் ஆண்டின் இறுதியில் ரெலோ கருணாநிதி பக்கம் சாய்ந்திருந்த து. ரெலோ தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் கருணாநிதிக்கு நெருக்கமாக இருந்தார். அப்பொழுது எல்ரிரிஈயும் அதன் தலைவர் பிரபாகரனும் எம்.ஜி.ஆருடன் நெருக்கமாக இருந்தனர். புளொட்டும் உமா மகேஸ்வரனும் இந்திய கம்யூனிஸ்டுக்களுடன் நெருக்கமாக இருந்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப்.வும் மார்சிய கம்யூனிஸ்டுகளுடனும் கம்யூனிச தீவிரவாதிகளுடனும் கூட்டாக இருந்தனர்.

கருணாநிதியை தமிழ் இனத்தின் தலைவரான ஸ்ரீ சபாரத்தினம் ஏற்றுக் கொண்டதோடு எம்.ஜி.ஆரைப் பற்றி மிகவும் -அந்த மலையாளிக்கு என்ன தெரியும் என்பது போன்று- பேசிவந்தார். எனவே தேர்தலில் கருணாநிதிக்கு உதவுவதற்காக அவர் சாவகச்சேரி தாக்குதலை நடதியிருக்கலாம் என்ற அத்துலத்துமுதலியின் கணிப்பில் உண்மை இல்லாமலுமில்லை.

போராளிகள் ஈழப்பிரகடனம் செய்யவுள்ளதாக ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் வெளியிட்ட அறிவித்தலின் பின்னால் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாராக இருந்தது. போராளிகளை பொது மக்களிடம் இருந்து பிரித்து தனிமைப்படுத்துவதே அது. பொதுமக்கள் மீது கஷ்டங்களைக் சுமத்தினால் அவர்கள் போராளிகளைக் கைவிட்டு விடுவர் என்ற இஸ்ரேலிய அணுகுமுறையின் அடிப்படையில் அத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இலங்கை படைகளுக்கு இஸ்ரேலியர் வழங்கிய யோசனையை அத்திட்டம் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

நவம்பர் 27ம் திகதி அத்துலத்முதலி அத்திட்டத்தை அறிவித்தார். யாழ்ப்பாணத்தில் அரசாங்க பஸ்களைத் தவிர்ந்த மற்ற எல்லா வாகனங்களுக்கும் அவா தடைவிதித்தார். மினி பஸ்கள், தனியார் பஸ்கள். தனியாருக்கு சொந்தமான கார்கள் லொறிகள் டிரக்குகள் டிராக்டர்கள் மோட்டார் சைக்கிள்கள் பைசிக்கிள்கள் ஆகியவை யாவும் தடைசெய்யப்பட்டன.

அந்தப் போக்குவரத்து தடையை சற்றடேரிவியூ என்ற வார இதழ் கிண்டல் செய்து இவ்வாறு எழுதியது.

''அந்தப் பயங்கர பயங்கரவாதிகள் இனிமேல் என்ன செய்யப் போகிறார்கள். ? முச்சக்கர்வண்டிகளில் போவார்களா? அப்படியானால் அடுத்தாற் போல் முச்சக்கரவண்டிகளையல்லவா தடைசெய்யப் போகிறார்கள்''

போக்குவரத்து தடையை அறிவித்த அத்துலத்முதலி அதனிலும் கூடிய ஆச்சரியத்தை அளித்த செய்தியை சொன்னார்:

யாழ்ப்பாணத் தமிழர்கள் எல்லாரும் நாட்டின் வேறு பகுதிகளில் வாழும் தமது உறவினருடன் அல்லது நண்பர்களுடன் விடுதலையைக் கழிக்குமாறு ஆலோசனை கூறுகிறேன். அப்பொழுது யார் குற்றமற்றவர் யார் குற்றவாளி என்பது அரசாங்கத்துக்கு தெளிவாகத் தெரிந்து விடும்.

அந்தச் செய்தியை எவராலும் நம்பமுடியவில்லை.

அது அரசாங்கத்தின் கையாலாகாத் தனததைக் காட்டுகிறா அல்லது அதன் சர்வாதிகாரத் தன்மையைக் காட்டுகிறதா என்பதை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் வட இலங்கையின். இராணுவ கட்டளைத் தளபதி பிரிகேடியர் நளின் செனவிரத்தின ராய்ட்டர் நிருபர் பிரையன் வில்லியம்ஸ்சுக்கு சொன்னதைப் பார்த்தால் அரசாங்கத்தின் யைளாலாகத் தனத்தையே அத்துலத்முதலியின் அறிக்கை காட்டுவதாக கொள்ள வேண்டும்.

அவர் சொன்னது இது தான்:

''நாங்கள் செய்யக் கூடியது அவர்களின் தாக்குதலைக் குறைப்பது தான். யாழ் குடாநாட்டை நாங்ககள் எங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளோம். ஆனால் எமது அதிகாரம் எமது முகாம்களின் வேலியுடன் முடிவடைந்து விடுகிறது''

''நன்கு பயிற்சி பெற்ற கெரில்லாப் படையை- பொதுமக்களின் ஆதரவைப் பெற்ற படையை- கட்டுப்பாட்டுகள் கொண்டு வருவது கஷ்டமாகவுள்ளது''

பிரிகேடியர் செனவிரத்தினவின் கூற்றின் உண்மை நவம்பர் 30ம் திகதி டொலர்ஈ கென்ற் பார்ம்களில் நிருபிக்கப்பட்டது.

(அடுத்து டொலர் கென்ற பார்ம் தாக்குதலும் அது பற்றித் தொண்டமான் சொன்னதும்)


**அறிவித்தல்**

கதை, கட்டுரை, விமர்சனங்கள், கவிதை போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**Tel: +44(020) 8472 2900**

**FREE COMPUTER**

எமது வாசகர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நம்நாடு குடும்பத்தினர் ஒரு பரிசுத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

வாசகர்கள் நமநாடு பத்திரிகையிலிருந்து இந்த விளம்பரத்தைக் கத்திரித்து விளம்பரத்தோடு உங்கள் பெயர் விலாசம் தொலைபேசி எண் என்பனவற்றை எமக்கு அனுப்பி வைத்தால் அவை வரும் தமிழர் புத்தாண்டில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் வாசகருக்கு ஒரு புத்தம் புதிய கணனி (computer) பரிசாக வழங்கப்படும். விரும்பினால் நீங்கள் படத்தையும் அனுப்பி வைக்கலாம்.
அதிர்ஷ்டசாலியின் படம் நம்நாடு பத்திரிகையில் பிரசுரமாகும்.
உங்கள் களிப்பே எங்கள் விழிப்பு. காலம் தாழ்த்தாது உடனடியாக உங்கள் கூப்பனை அனுப்பி வையுங்கள்.



அனுப்ப வேண்டிய முகவரி:-
நம்நாடு பரிசுத்திட்டம்
**1A, SIBLEY GROVE, EAST HAM, LONDON E12 6SD.**


படிப்பகம்

www.padippakam.com



# பதில்சொல்லுகிறார் சங்கிலியார்

ராமச்சந்திரன் Woodgreen U.K.

**கேள்வி:** அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் ஏதும் பயன் உண்டா சங்கிலியாரே?

**பதில்:** பயன் இல்லாமல் பெருந்தலைவர்கள் இருவர் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கமாட்டார்கள். அதுவும் சமாதானத்திற்கு பெயர் போன நோர்வே அதிகாரிகள் தயாரித்த ஒப்பந்தம் பிரயோசனமில்லாததாக இருக்காது. ஆனால் அறிவற்ற கூட்டம் அருகில் இருந்தால் அறிஞனும் கோமாளி என்ற பதத்திற்கு ஏற்ப திரு. ரணிலைச் சூழ்ந்திருக்கும் கூட்டம் கொடுக்கப்போகும் இன்னல்களையெல்லாம் கடந்து வெற்றி பெறுவது சாதாரணமான விசயமில்லை. குள்ளநரிக் கூட்டம் வந்து குறுக்கிடும், நல்லவர்க்கு தொல்லை தந்து மடக்கிடும், நீ எள்ளவும் பயம் கொண்டு மயங்காதடா அவற்றை எமனுலகு அனுப்பிவைக்க தயங்காதடா, என்ற இந்த திராவிடர்களின் தத்துவத்தை அந்த ஆரியப் பெருமகன் மனதில் கொள்வாரானால் இதுவும் நடக்கும் இதற்கு மேலும் நடக்கும். அவர்களுக்கு திராவிடர்களும் தோள் கொடுப்பர். இனி ரணிலின் தொடர்ச்சியான துணிச்சல்தான் இந்த ஒப்பந்தம் உயிர் வாழ்வதா? உயிர் மாழ்வதா என்பது தங்கியிருக்கும்.

ராதா St'Denis, PARIS

**கேள்வி:** பாதுகாப்பு மந்திரியாக இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கைது செய்யப்பட்டது பற்றி?

**பதில்:** குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணிலும் நண்ணுவர், அதாவது ராஜபோக வாழ்க்கையில் திளைத்து பல்லக்கில் உட்கார்ந்து கொண்டு சேவகர்கள் குடைபிடிக்க ஊர் வலம் போனவர்கள், கால மாற்றத்தால் எல்லாவற்றையம் இழந்து பஞ்சையாய்,
பராரியாய் தங்குலத்துக்கு கூட இடமில்லாமல் தவிப்பதை இந்த உலகம் கண்டிருக்கின்றது. அப்படிப்பார்க்கும்போது இந்த ரத்வத்தை எம்மாத்திரம். அதிகாரம் கையில் என்று அவர் ஆடாத ஆட்டம் என்ன, அவர் மட்டுமா? அவரின் புதல்வர்களையும் அல்லவா சண்டியர்கள் ஆக்கிவிட்டார்.

அவர் எப்படியும் ஆடியிருக்கலாம் மக்கள் மன்னித்திருப்பார்கள், ஆனால் தமிழர் தாயகமான அந்த யாழ் மண்ணில் கொடியேற்றியது எத்தனையோ இலட்சோபலட்சம் மக்கள் இரத்தக் கண்ணீர்விடக் காரணமாய் இருந்ததை யாரும் மறக்க மாட்டார்கள். கனக விணயனின் முடித்தலை நெரித்து கல்லினை வைத்தான் சேரமகன், இமய வரம்பினில் மீன் கொடியேற்றி இசைபட வாழ்ந்தான் பாண்டியன். அப்படிப்பட்ட சேர, சோழ, பாண்டிய வம்சத்தில் வந்துதித்த தலைவன் அந்த யாழ்ப்பாணத்தில் இருக்க இவர் சிங்கக் கொடியை ஏற்றி வரலாற்றுத்தவறைச் செய்து உலகம் பூராவும் வாழும் தமிழ் மக்களின் சாபத்துக்கு ஆளாகிவிட்டார். இப்படிப்பட்ட சாபத்தில் இருந்து தற்காலிகமாகத் தப்ப சிறை இவருக்கு பாதுகாப்பளிக்கலாம். வினை விதைத்தவன் வினை அறுத்தே தீரவேண்டும்.

விஜயன் Ilford, london, U.K.

**கேள்வி:** புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டாயிற்று இனி என்ன நடக்கும் சங்கிலியாரே?

**பதில்:** இனித்தானே வடக்கு வீதிச் சமா இருக்கு, அளவெட்டி கும்பளாவினைப்பிள்ளையார் கோவிலில் திருவிழாவில் சுவாமி சுற்றி வடக்கு வீதிக்கு வந்தவுடன் அங்கே சுவாமியை நிறுத்தி நீண்டநேரம் தவில் சமா நடக்கும். தட்சணாமூர்த்தி, சின்னராசா, கணேசு இப்படி பெரிய பெரிய தவில் வித்துவான்களின் கச்சேரி நடக்கும். இதைப்பார்த்து கேட்பதற்காக மட்டுமே, பலர் கோவிலுக்கு செல்வார்கள். அப்படி இப்ப நடக்கும் சமாதானத் திருவிழாவில் இனித்தான் வடக்கு வீதி சமா நடக்கப்போகின்றது. உலகம் முழுவதும் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கின்றது. இனி எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய திருத்தங்களை உருவாக்க வேண்டும். அதற்கு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மனம் விட்டுப் பேசவேண்டும். அந்தப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முதல் விடுதலைப்புலிகளின் தடையை நீக்க வேண்டும். பேச்சுவார்த்தை நடப்பதற்கான ஒரு இடம் தேர்ந்து எடுக்கப்படவேண்டும். மாலைதீவில் பேச்சுவார்த்தை நடக்கலாம் என்ற செய்தியை திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மறுத்திருக்கின்றார்கள், அப்படிப் பார்த்தால் இந்தியா தனது விடாப்பிடியில் இருந்து இறங்கி வந்து பேச்சுவார்த்தையை தனது நாட்டில் நடாத்த அனுமதிக்கவேண்டும். முயற்சி செய்தால் மேற்குறிப்பிட்ட எல்லாமே நடக்கலாம். அதைச் சட்டமாக்கும்போது, அதாவது இதெல்லாம் நடந்து முடிய ஏறத்தாழ ஆறு மாதத்தில் இருந்து ஒரு வருடமாகலாம். அந்த நேரம்தான் என்ன நடக்கும் என்று நினைக்கப்பயமாக இருக்கின்றது. எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்காவைக் கொன்றவர்கள் இப்போதும் உயிருடன் இருக்கின்றார்கள். ஆண்டவன் தான் எல்லோரையும் காப்பாற்றவேண்டும்.


**MANOGARAN & CO**
**SOLICITORS**
**ADMINISTRATORS OF OATHS**

We have been recognised by the Law society as specialist advisors in Immigration and Asylum Law, And we are in the Law society's Immigration Law Panel.

**இங்கிலாந்து தேசத்து சட்டத்தரணிகள் சபையால் குடிவரவு அரசியல் தஞ்ச வழக்குகளில் விசேட ஆலோசனை வழங்கும் சட்ட நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டு, அதன் குடிவரவு அரசியல் தஞ்ச வழக்குகளில் விசேட ஆலோசனை வழங்கும் சட்ட அறிஞர் குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ள தமிழர் சட்ட நிறுவனம்.**

We offer friendly and professional advice on:

- ⇒ Immigration & Asylum Matters
- ⇒ Nationality Matters
- ⇒ Civil Litigation
- ⇒ Advice at Police Stations and detention centres
- ⇒ Employment Matters
- ⇒ Traffic Offences
- ⇒ Justices Licences

**we undertake legal aid work**

LEGAL AID FRANCHISE
A QUALITY SERVICE
Approved by The Legal Aid Board

**Principal: S. Manogaran LLB**
24 Hoe Street, Walthamstow,
London E17 4PH

Community Legal Service
Specialist Help Point Immigration

Tel: 020 8521 5757 Mob: 07889104194 Fax: 020 8521 8202

www.padippakam.com





## வளர்ந்துவரும் இளம் நடிகை (தற்)கொலை

பிரதியூஷா வளர்ந்துவரும் இளம் நடிகை. காதல் தோல்வி காரணமாக திடீரென தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டபோதும் கடைசியாக கிடைத்த தகவல்களின்படி பல மிருகங்களால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு விச ஊசி ஏற்றிக் கொல்லபட்டதாக மருத்துவ அறிக்கை தெரிவிக்கின்றது. இவர் நடிகர் பிரபுவுடன் பெரியகுடும்பம், பாரதிராஜாவின் கடற்பூக்கள், நடிகர் முரளியுடன் மனுநீதி, விஜயகாந்துடன் தவசி போன்ற படங்களில் நடித்திருக்கின்றார். சத்தியராஜ் உடன் சவுண்ட் பாட்டி, சரத்குமார் ஜோடியாக மானஸ்தன் போன்ற படங்களில் நடித்துக்கொண்டிருந்தார். இப்படி நாளுக்கு நாள் வளர்ச்சியை நோக்கி பயணப்பட்ட பிரதியூஷாவின் பரிதாப முடிவு திரையுலகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது. எமது இதழிலும் பிரபலமாகின்றார் பிரதியூஷா என்று எழுதியிருந்தோம்.

ஆந்திராவில் ஹைதராபாத்தைச் சேர்ந்த தொழிலதிபரின் மகனான சித்தார்த்த ரெட்டி என்பவரைக் காதலித்து வந்தாராம். இருவீட்டிலும் எதிர்ப்பு கிழம்பியபோதும் நடிகை வீட்டில் பச்சைக்கொடி காட்டப்பட்டது. ஆனால் காதலன் வீட்டில் எதிர்ப்புகிழம்பவே காதலனின் வற்புறுத்தல் காரணமாக இருவரும் விசம் குடித்ததாக தெரிவிக்கப்பட்டபோதும், மானபங்கப்படுத்தப்பட்ட பின்பு விச ஊசி ஏற்றியதற்கான பல தடயங்கள் இருப்பதாக மருத்துவ அறிக்கை தெரிவிப்பதால் இக் கொலை விவகாரம் ஆந்திர முதலமைச்சர் வரை சென்று விசாரணை தொடர்கின்றது. தற்போதைய நிலவரப்படி பிரதியூஷாவின் காதலன் பிழைத்துவிட்டதாகவும் ஆனால் மயக்கநிலையில் இருப்பதால் அது தெளிந்தவுடன் அவரின் வாக்குமூலத்தில் இருந்து விசாரணையை மேலும் முடக்கிவிட பொலிஸ் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

## BIO DATA அபிராமி

எனக்குப்பிடித்தது - நேர்மை, இசை, எளிமை, நாய்க்குட்டி
எனக்குப்பிடிக்காதது - பின்னால் பேசுவது
நான் விரும்பிப்பார்க்கும் டி.வி. ஷோ - டாப் 10 மூவிஸ், சப்தஸ்வரங்கள்
மறுபிறவி எடுத்தால் - என்வீட்டு நாய்க்குட்டியாக பிறக்க வேண்டும்.
நான் விரும்பிக் குடிக்கும் பானம் - பாட்டி செய்து கொடுக்கும் பில்டர் காப்பி
நான் அஞ்சி நடுங்குவது - இருட்டு, எட்டுக்கால் பூச்சி
எனக்குப்பிடித்த புத்தகம் - டிக்ஷனரி
எனது கனவு - அமைதியான வாழ்க்கையை அடையவேண்டும் என்பது.
நான் பயன்படுத்தும் கார் - ஹஜீண்டாய் சான்ட்ரோ
எப்போது பொய் சொல்வேன் - தேவைப்படும்போது
எனது ரகசிய ஆசை - அது அப்படியே இருக்கட்டும்
கொள்ளைக்காரியாக மாறினால் - ரசிகர்களின் உள்ளத்தை இன்னும் தீவிரமாய் கொள்ளை அடிப்பேன்
என்னை நெகிழ வைத்தது - அன்னை தெரசாவோட மரணம்
என்னைக் கவர்ந்த ஹீரோ - ஷாருக்கான்
எனக்குப்பிடித்த பழமொழி - Love and the world will love you
எனது பிறந்த நாள் - 26-07-1983 (அட)
என்னை சந்தோஷப்படுத்துவது - தந்தையுடன் ஸ்கூட்டரில் போவது, தோழிகளுடன் நேரம் போகுவது
எனது பலம் - பெற்றோர்
எனது பலவீனம் - Too Friendly
எனது பெரிய சொத்து - புன்சிரிப்பு
என்னுடைய பொழுதுபோக்கு - தொலைபேசியில் பேசுவது, இசை கேட்பது
எனக்குப்பிடித்த வெளிநாடு - அமெரிக்கா
எனக்குப்பிடித்த இசை - எல்லாவகையும்
எனது நெருங்கிய நண்பர்கள் - நிறையப்பேர்
எனக்கு நெருக்கமான தோழி - டெஸி
நான் பார்த்து ரசித்த படம் - மூன்றாம் பிறை
காதல் என்பது - புனிதமானது
எனது லட்சியம் - சிறந்த நடிகையென பெயரெடுப்பது



## கேபரே குயின்

ரக்ஷன் பிக்ஸர்ஸ் சார்பில் எம். வெங்கடாஜலம் தயாரிக்கும் மொழி மாற்றுப்படம். கதைக்காக கிளாமர் பண்ணவேண்டியதுதான் அதற்காக இப்படி செக்ஸியாக நடிக்க எப்படிச் சம்மதிச்சே என்று சக நடிகைகளே தபுவை கேள்வி கேட்க வைத்த சாந்தினி பார் என்னும் இந்திப்படம் தமிழ் பேசி வருகின்றது. இப்படத்தில கபரே குயினாக தபு நடித்திருக்க மற்றும் அதுல் குல்கர்னி (ஹேராம் படத்தில் நடித்தவர்) ராஜ்பால் யாதவ், வினய் ஆப்டே ஆகியோர் நடித்திருக்கின்றார்கள். விதியின் விளையாட்டாலும் சந்தர்ப்ப சூழ்நிலையாலும் பாரில் கபரே நடனமாட வரும் இளம் பெண்களின் வாழ்க்கைப் போராட்டங்களை மிக யதார்த்தமாக சித்தரித்துக்காட்டுகின்றது இப்படம். மும்பாய் பார்களில் நடக்கின்ற சூதாட்டங்கள், விபச்சாரம், ரௌடிகளின் அட்டகாசங்கள் இவற்றுள் அகப்பட்டு சீரழிந்துபோகும் இளம் பெண்களின் எண்ணிக்கை ஏராளம். இக்கருவை வைத்து காதல், சென்டிமென்டல், ஆக்ஷன், இளம் பெண்களின் கவர்ச்சிக் காட்சிகள் என... ஒரு கிளுகிளுப்பான படமாகத்தந்துள்ளார் இப்படத்தினை இயக்கியுள்ள மதுர் பந்தார்கர். இதில் முக்கிய கதாபத்திரத்தில் கேபரே டான்ஸ்ஸராக நடித்திருக்கும் தபு, நல்ல நடிப்பை வழங்கியதோடு கேரக்டருக்கு ஏற்றதுபோல் கவர்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டாராம். கதையோடு சார்ந்த கிளாமர் காட்சிகளும் வருவதால் சென்ஸாரின் கத்திரிக்கு இரையாகாமல் தப்பியிருக்கின்றது தபு தரிசனம்.






## சரக்கு பழசு ஆனால் பெயர் புதுசு

இயக்குனர் வின்சென்ட் செல்வா எடுத்துக்கொண்டிருக்கும் யூத் படத்தில் விஜய் இற்கு நாயகியாகப் போட புதிய நாயகிகளுக்கு அலைந்து திரிந்து வெறுத்துப் போய் விட்டாராம். சலித்துப்போன நிலையில் தென்பட்டார் ஒரு அழகு மயில். ஆகா நீதான் என் கனவு நாயகி என்று பிடித்துப்போட்டுவிட்டார் ஆனால் லேட்டாகத்தான் தெரிந்தது ஈரநிலா என்ற கவர்ச்சிப்படத்தில் பிங்கி தான் இந்த மயில் என்று. அப்போதும் அதனால் என்ன பெயரை மாற்றிவிட்டு புத்தம் புது சரக்கு என்று அறிமுகப்படுத்திவிட்டால் போச்சு என்று தனக்குத் தானே சமாதானம் ஆகி ஷாகின் என பெயர் சூட்டிவிட்டார் வின்சென்ட் செல்வா.

## சினிமா செய்தித்துளிகள்.

- கிளியோபட்ரா படத்தில் நடித்துவரும் குழந்தை நட்சத்திரம் உமா, இந்த ஆண்டின் குழந்தை நட்சத்திரத்திற்கான விருதைப் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றார். படப்பிடிப்பில் அத்தனை பேரையும் அசத்தி வருகின்றார். அழகி படத்தில் கட்டச்சியாக அசத்தியவர் இவர்.
- மோனல், குணால் ஜோடி மூன்று படங்களில் இணைந்து நடித்துவருகின்றது.
- திருமணத்திற்குப்பின் அவ்வளவாக திரையில் முகம் காட்டாத ஊர்வசி பஞ்ச தந்திரம் படத்தில் ஜெயராமுக்கு ஜோடியாக நடிக்கின்றார்.
- பஞ்சு படத்தை தானே வெளியிட இருக்கின்றார் விவேக்.
- சாமுராய் படத்தில் ஒரு பாடலில் தோரா போரா மலையே பின்லேடனே என்றொரு வரி. இந்த வரியை இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் மாற்றச் சொன்னார். இதனையடுத்து வைரமுத்து வீட்டுக்குப்போய் மாற்றும்படி கேட்டார் டைரக்டர் பாலாஜி ஷக்தி வடிவேல், என் பாட்டில் குற்றமா? முடியவே முடியாது என மறுத்த கவி அதன் பிறகு வேண்டா வெறுப்பாய் திருத்திக்கொடுத்தார்.
- சினிமாவுக்காக ஐ லவ் யூடா படத்துக்காக ராஜூசுந்தரம் கட்டிய தாலியை அன்று முழுக்க பொத்திப் பொத்தி பாதுகாத்தாராம் சிம்ரான். மறுநாளும் அந்தத் தாலியை கழற்றாமல் சிம்ரன் திரிய, பதறிப்போன ராஜூசுந்தரம் சத்தம் போட்டாராம். மனசே இல்லாமல் தானாம் அந்த சினிமா தாலியைக் கழற்றிப் போட்டாராம் சிம்ரான்.
- குமுதத்தில் தொடராக வந்த கோவில்பட்டி வீரலட்சுமியின் கதை படமாக உருவாகின்றது. ஹீரோ இல்லாத பூலான் தேவியின் டைப் கதையில் ஆக்ஷன் ஹீரோயினாக நடிக்கப்போறவர் சிம்ரன். படம் முழுக்க கையில் அரிவாள் துப்பாக்கியுடன் தான் வருவாராம் சிம்ரான்.
- மணிரத்தினம் தயாரிப்பில் சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் அன்புள்ள சிநேகிதியே என்ற தொடர் ஒரு ஆங்கில நாவலின் தழுவல் என மனந்திறந்து சொல்லியுள்ளார் சுஹாசினி.
- சிவாஜியின் வரலாற்றை படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது சிவாஜி பிலிம்ஸ். சிவாஜியின் புதல்வர்கான ராம்குமார், பிரபு ஆகியோர் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சிவாஜிகணேசனின் பிறந்த இடம் அவர் நடித்த படங்கள், அவரைப் புகழின் உச்சிக்கு இட்டுச்சென்ற படங்கள் என அவரது வாழ்க்கையுடன் தொடர்புடைய அனைத்து விசயங்களும் படமாக்கப்படவுள்ளது.
- ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆட லாரன்ஸ் கேடகும் சம்பளம் பத்து லட்சமாம்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழகத்தை குலுக்கிய பிரகாஸ்

**முன்னணி நடிகைகள். தொலைக்காட்சி நடிகைகள், பெண் அறிவிப்பாளர்கள்,செய்தி வாசிப்போர் முக்கிய பெரும் புள்ளிகளின் மனைவிமார். மொடல் அழகிகள், குடும்பப் பெண்கள், கல்லூரி மாணவிகள் என 1500 இற்கும் மேற்பட்ட பெண்களை வைத்து 1000இற்கும் மேற்பட்ட நீலப்படங்களை தயாரித்த டாக்டர் பிரகாஷ்**





## இன்னமும் தொடரும் திகில் செய்திகள்

**திடுக்கிடும் செய்திக் குவியல்**
**சென்னையிலிருந்து நம்நாடு நிருபர்**





## அழகி சித்ராவின் கைதால் அச்சத்துக்கு உள்ளாகியிருக்கும் பலர்



**பிரகாசின் வைத்திய அகத்தில் நர்ஸ்சாக இருந்த அழகி சித்ரா கோட்டுக்கு பெண்பொலிசாரால் அழைத்து வரப்படுகிறார். முதல்படத்தில் முகத்தை மறைத்துக் கொண்டார்**

செக்ஸ் டாக்டர் பிரகாஷ்- லேற்றஸ்ட் ரிப்போர்ட் நர்ஸ் சித்ராவிடம் பொலிஸ் விசாரணை: பிரபலங்கள் பல பீதியடைந்த நிலையில் இருக்கிறார்கள்.

டாக்டர் பிரகாஷ் எடுத்த ஆபாசப் படங்களின் கசற்றுக்களையும் சிடிக்களையும் போட்டுக் காண்பித்து நர்ஸ் சித்ராவிடம் பொலிசார் விசாரணை நடத்தினர். அவற்றை பார்த்து அதில் நடித்து இருப்பவர்களை சித்ரா அடையாளம் காட்டினார். இதனால் பிரபலங்கள் பலரும் பீதி அடைந்துள்ளனர்.

சைதாப்பேட்டை நீதிமன்றத்தால் பொலிஸ் காவலுக்கு மாற்றப்பட்ட நர்ஸ் சித்ரா டாக்டரிடம் தான் சிக்கியது பற்றியும் மற்றவர்கள் சிக்கிய விபரங்கள் பற்றியும் பொலிஸ் விசாரணையில் விளக்கியுள்ளார்.

தொடர்ந்தும் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பின்வரும் விபரங்களை சித்ரா வெளியிட்டதாகத் தெரிகிறது.

டாக்டர் பிரகாஷிடம் சிகிச்சைக்காக சென்ற தொடக்க நாட்களில் அவரை கடவுளுக்கு நிகராக நினைத்தேன். பாதிக்கப்பட்டிருந்த என்னுடைய காலில் சிகிச்சை செய்ய வேண்டும் என்றெல்லொம் சொன்னார். எனது நலனில் அக்கறை செலுத்தும் இது போன்ற ஒரு டாக்டரும் இருக்கிறாரே... இவர் நமக்கு கடவுள் போன்று அல்லவா? என்றெல்லாம் நன்றி உணர்வுடன் நினைத்திருந்தேன்.

ஆனால் அவரோ என்னை சீரழித்து என் வாழ்வை நாசம் செய்து என்னை புதைகுழிக்கே அனுப்பி வைத்துவிட்டார். இந்தப் பாவியின் செயலால் என் கணவரையும் குழந்தைகளையும் பிரிந்து விட்டேன். என் குடும்பத்தினருடைய முகத்திலேயே விழிக்க முடியாமல் போய்விட்டது.

என்னைப் போல் பல பெண்களின் வாழ்க்கையை சீரழித்து இந்த நிலைக்கு ஆளாக்கிய அந்த பாவியை சும்மாவிட்டு விடக்கூடாது. கல்லால் அடித்தே கொல்ல வேண்டும்.

பழவேற்காடு செக்ஸ் தீவுக்கு என்னை அடிக்கடி கூட்டிச் சென்று பலருடன் உல்லாசமாக இருக்க வைத்து ஆபாச படம் எடுத்த பிரகாஷ் ஒரு முறை சினிமா ஸ்டாண்டு நடிகர் ஒருவருடன் என்னை உல்லாசமாக இருக்க வைத்து அதையும் வீடியோ படமாக எடுத்தார்.

இது போன்ற தொடர் சம்பவங்கள் காரணமாக நான் மூன்று முறை கர்ப்பமடைந்தேன். அந்த மூன்று முறையும் டாக்டர் பிரகாசே தன்னுடைய மருத்துவமனையில் எனக்கு கருக்கலைப்பு செய்தார். இப்போது என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கும் அந்தப் பாவியை ஆண்டவன் தண்டிக்காமல் விடமாட்டான் என்று பொலிஸ் விசாரணையில் சித்ரா கூறியுள்ளார்.

நர்ஸ் சித்ரா மற்றும் டி.வி. நடிகை உமா உட்பட பலரும் நடித்துள்ள வீடியோ கசற்டுகள் மற்றும் சீ.டிக்கள் நூற்றுக்கணக்கில் பொலிஸாரிடம் சிக்கியுள்ளன. அந்த கசற்றுக்களை நர்ஸ் சித்திராவுக்கு போட்டுக் காட்டிய பொலிசார் அதில் இடம் பெற்றிருப்பவர்கள் பற்றிய விபரங்களை அவரிடம் விசாரித்துள்ளனர். அவரும் அந்த கசற்றுகளில் உள்ளவர்களின் பெயர் முகவரி உள்ளிட்ட தகவல்களை கூறி அடையாளம் காட்டியதாக தெரிகிறது.

சித்தாரவின் வாக்கு மூலத்தைத் தொடர்ந்து டாக்டர் பிரகாஷின் செக்ஸ் லீலைகளில் தொடர்புடைய பெண்கள், ஆண்கள் என நீண்ட ஒரு பட்டியலை பொலிசார் தயாரித்துள்ளதாக தெரிகிறது. மேலும் அடுத்த ஓரிரு நாட்களில் பழவேற்காடு செக்ஸ் தீவுக்கு சித்ராவை நேரில் அழைத்துச் சென்று விசாரணை நடத்தவும் அடையாளம் காட்டச் சொல்லவும் பொலிசார் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

நர்ஸ் சித்ரா டாக்டர் பிரகாஷிற்கு மிக நெருக்கமாக இருந்தவர் என்பதாலும் டாக்டரின் ஒவ்வோரு நடவடிக்கையின் போதும் உடனிருந்தவர் என்பதாலும் அவரது வாக்கு மூலம் டாக்டர் பிரகாஷின் இண்டர்நெட் செக்ஸ் படத்தில் தொடர்புள்ள பிரபலங்கள் பலருக்கு பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

மறுபக்கம்

டாக்டர் பிரகாஷுடன் இணைத்து பேசப்பட்ட நடிகை நிர்மலாவின் குமுறல் இது:

''பேனா முனை கூர்மையானது. அதை வைத்து அப்பாவிகள் மனதைக் காயப்படுத்துவது என்ன நியாயம்?'' என்று டாக்டர் பிரகாஷுடன் இணைத்து பேசப்பட்ட நடிகை நிர்மலா குமுறினார். இதனால் சினிமாவில் சம்பாதித்த புகழ் அழிந்துவிட்டது என்றும்

19ம் பக்கம் பார்க்க....


## சந்தா விபரம்

சந்தாதாரர்களாக சேர்ந்து விட்டீர்களா? இல்லையேல் உடனடியாக எமது காரியாலயத்தோடு தொடர்பு கொண்டு, நம்நாட்டுக்குடும்பத்தில் ஒரு அங்கத்தவராக மாறிவிடுங்கள். நம்நாடு பத்திரிகை ஒவ்வொரு வாரமும் உங்கள் வீட்டு கதவை தட்டும்.
ஐரொப்பா முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான நம்நாட்டுக்குடும்ப அங்கத்தவர்களோடு நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள். உலகத்தை உங்கள் காலடியில் நாங்கள் கொண்டு வருவோம். தொடர் கதை, கட்டுரைகள் போன்றவற்றை நீங்கள் வாசிக்க தவறியிருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அங்கத்தவராக சேர்வதற்குரிய கட்டணம்

6 மாத சந்தா:- £30.00 12 மாத சந்தா:- £55.00

மேற்குறிப்பிட்ட இங்கிலாந்து நாணயத்திற்கு சமமான எல்லா நாட்டு பணமும் ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் விளம்பர அறிவுப்புகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**1A, SIBLEY GROVE, EAST HAM, LONDON E12 6SD.**
**T.P:- 020 85522613, 020 8472 2900**
FAX:- 020 8552 2613 EMAIL:- namnadu@hotmail.com


படிப்பகம்

www.padippakam.com



# மூன்றுதரம் கர்ப்பமானேன் – சித்ரா

அவர் கூறினார்.

டாக்டர் பிரகாஷை நான் சந்தித்து பேசி இருக்கிறேன். அவருடன் தொடர்புபடுத்தி பேசிய பிறகு இனி என்னை யார் திருமணம் செய்து கொள்வார்கள்? என்று நடிகை நிர்மலா குமுறினார்.

நடிகை நிர்மலா மறைந்த நடிகர் ஜெய்சங்கரின்

தலைகாட்ட முடியவில்லை. யாரைப் பார்த்தாலும் இதைப் பற்றித் தான் கேட்கிறார்கள். உறவினர்கள் வாரத்துக்கு ஒரு தடவையாவது எங்கள் வீட்டுக்கு வருவாங்க. அந்த செய்திக்கு பிறகு அவர்களும் வருவதில்லை. பப்ளிக்ல என்னை பார்த்ததும் ரகசியமாக பேசிக்கிறாங்க. என்னால் தாங்க முடியவில்லை.

# நடிகை நிர்மலா வீட்டுக்குப் ஏன் போனார் பிரகாஷ்

தம்பி மகள். புதிய முகம் படத்தின் மூலம் வெள்ளித்திரைக்கு அறிமுகமானவா. தற்போது சூலம். அர்ச்சனைப் பூக்கள். அச்சம் மடம் நாணம் உட்பட பல டி.வி சீரியல்களில் நடித்து வருகிறார்.

சமீபத்தில் டாக்டர் பிரகாஷ் விவகாரத்தில் இவரது பெயரும் அடிபட்டது ஒரு பத்திரிகை இவர் நீச்சல் குளத்தில் குளிப்பது போன்று போட்டோவை வெளியிட்டு டாக்டர் பிரகாஷின் கசெட்டிலிருந்து அந்த போட்டோ எடுக்கப்பட்டதாக எழுதியிருந்தது.

இது பற்றி நடிகை நிர்மலாவிடம் கேட்டதற்கு. அவர் கூறியதாவது:

எனக்கு டாக்டர் பிரகாஷைத் தெரியும். தெரியாதுன்னு சொல்லமாட்டேன். எட்டு வருஷத்துக்கு முன் எங்கள் அப்பாவினால் நடக்க முடியாமல் போனது. அப்போத அவருக்கு ஆபரேஷன் செய்தது டாக்டர் பிரகாஷ் தான். கால் எழும்பு அறுவை சிகிச்சையில் பிரபலமானவர் என்பதால் அவரிடம் ஆபரேஷன் செய்துகொண்டார். அப்பாவை மறுபடியும் நடக்க வைத்ததே பிரகாஷ் தான். பிறகு எங்க அம்மாவுக்கு இடுப்பு எழும்பு ஆபரேசன் செய்ததும் பிரகாஷ் தான். ஒரு டாக்டராக அவர் எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார் அவ்வளவு தான்.

ஒரு டாக்டரிடம் ட்ரீட்மெண்ட் எடுத்துக்

ஜெய்சங்கர் தம்பி மகள் என்று எழுதும் போது அவருக்கு என்னால் இப்படியொரு கெட்ட பெயர் வரும் என்று நினைத்துக் கூட பார்த்ததில்லை. நல்லவேளை அவர் உயிரோட இல்லை. அவர் சினிமாவில் சம்பாதித்த புகழ் எல்லாவற்றையும் இந்த பிரகாஷ் மேட்டரில் என் பெயரையும் இழுத்ததால் அழிந்து விட்டது.

தப்பு செய்திருந்தால் கூட செய்த தப்புக்கு தண்டணையை ஏற்கலாம். ஆனால் தப்பே செய்யாத நிரபராதியான நான் தண்டனை அனுபவிக்கிறேன். நல்லது எவ்வளவு செய்தாலும் மனசுல தங்காது. ஆனால் ஒரு கெடுதல் என்றால் அது ஆயுள் வரை மறக்காது. இந்த விஷயம் மறையாத வடுவாக விழுந்து விட்டது.

எனக்கு ஒரு அக்கா ஒரு தங்கச்சி இருங்காங்க. அவங்களுக்கு லைப் செட்டில் செய்ய வேண்டியது என் பொறுப்பு. இந் நிகழ்ச்சிக்குப் பிறகு நான் செட்டில் ஆவதே கஷ்டம் என்னை யார் கல்யாணம் செஞ்சுக்குவாங்க? என் தங்கச்சியை யார் கல்யாணம்

# பிரகாசை பிணையில் விட மறுத்த நீதவானின் விளக்கம்

கொள்கிறோம். அதே டாக்டர் பின்னாடி வேறு ஏதாவது குற்றங்களில் மாட்டிக் கொள்ளும்போது வைத்தியம் செய்து கொண்டவர்களை அவருடன் முடிச்சுப்போடுவது என்ன நியாயம்? எனக்கு தெரிந்தவரை டாக்டர் பிரகாஷ் அப்படி இல்லை. டீசெண்டான டாக்டராகத் தான் இருந்தார்.

கேள்வி: நிங்கள் புளூமிலிமில் நடித்ததாக பல பத்திரிகைளில் வந்துள்ளதே?

பதில்: நான் புளூபிலிமில் நடிச்சேன்னு எழுதியிருப்பவர்கள் அதைப் பார்த்தார்களா? நான் நடிச்ச காசேட் ஆதாரம் இருந்தால் எழுதட்டும். என் போட்டோவை ஒரு பத்திரிகையில் போட்டார்கள். ஓந்த படம் நானும் ரவிராகுலும் ஒரு வருடத்துக்கு முன் நடித்த சினிமாவின் ஸ்டில். அப்படிப் பார்த்தால் பத்து வருடத்துக்கு முன்பு முதல் படத்திலேயே ஸ்விம் சூட்டில் நடிச்சிருக்கேனே அதை எடுத்து பத்திரிகைகளில் வெளியிட்டு டாக்டர் பிரகாஷுடன் முடிச்சுபோட்டால் என்ன செய்யமுடியும்?

நிறைய சீரியல்களில் நடிக்றோம். அதில் தூங்குற சீனில் படங்களை காட்டி எவன் கூடவோ இருந்த புளூபிலிம் என்று வெளியிட்டால் என்ன செய்வது?

கேள்வி: பிரகாசோடு நிறைய இடங்களுக்கு சென்றீர்களாமே?

பதில்: இப்படி சொல்பவர்கள் அதை நேரில் பார்த்தார்களா? பிரகாசோடு நான் எங்கேயும் போனதில்லை. எங்கள் அப்பாவோடு அவரை ஹொஸ்பிட்டலில் தான் சந்தித்தேன். அதுவும் கீழ்ப்பாக்கத்திலிருந்த பத்மினி நர்ஸிங் ஹோமில் தான் பாாத்தேன். புத்தகங்களில் வந்திருக்கும் அவருடைய ஹொஸ்பிடலை எனக்குத் தெரியாது. அவர் வீட்டுக்கும் நான் போனதில்லை. எங்கள் அம்மா அப்பாவின் ஆபரேஷனுக்குப் பிறகு அவர் வீட்டுக்கு வந்து தான் ட்ரீட்மெண்ட் கொடுத்துள்ளார். வேறு எங்கும் வெளியில நான் டாக்டர் பிரகாஷை சந்தித்ததில்லை.

பத்திரிகைகளில் வருவதை மக்கள் நம்புகிறார்கள். அப்படி இருக்கும் போது ஒருவரைப் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ளாமல் ஒரு விஷயத்தை ஆராயாமல் எழுதுவது மிகப் பெரிய க்ரைம் அல்லவா:. பத்திரிகைகளில் என்னைப் பற்றி வருவதைப் பார்க்கும் போது ரொம்ப அசிங்கமாக இருக்கு. வெளியே

செஞ்சுக்குவாங்க? எனக்கு புரியவில்லை. சினிமா டி.வியில் நான் நடிப்பது தப்பா? பத்திரிகையில் எழுதுபவர்கள் பொறுப்போடு எழுத வேண்டாமா? பேனா முனை கூரமையானது. அதை வைத்து அப்பாவிகளின் மனசைக் காயப்படுத்துவது என்ன நியாயம் ?

இவ்வாறு கூறினார்.

நீதவானின் கருத்து

டாக்டர் பிரகாஷை பிணையில் விட மறுத்து நீதிபதி அசோக்குமார் அளித்த தீர்ப்பு இது.

டாக்டர் பிரகாஷ் தமிழ் கலாச்சாரத்தை விற்பனை செய்து விட்டார். வெளிநாட்டில் ஏராளமான பெண்கள் இதற்காகவே இருக்கும் போது தமிழ் பெண்களை படம் எடுத்து வெளிநாட்டிற்கு அனுப்பி உள்ளது தவறானது. இந்த செயல் சமுதாயத்தை சீரழித்து விட்டது. இத்தகையவருக்கு ஜாமீன் கொடுத்தால் சமுதாயம் சீரழிந்துவிடும். இதில் உள்ள குற்றச்சாட்டுக்களைப் பார்க்கும் போது சட்டப்படி ஜாமீன் கொடுக்க கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் வரை ஜாமீன் தர முடியாது. வழக்கு விசாரணை ஆரம்ப கட்டத்தில் தான் உள்ளது. பெண்களை பலவாறாக புகைப்படம் எடுத்து அதை தனது சகோதரர் மூலம் வெளிநாடு அனுப்பியதாக தெரிகிறது.

இவர் பிரபல டாக்டராக இருந்தவர். இவருக்கு மருத்துவத்துறையில் ஏராளமான பணம் கிடைத்தும் இவர் இப்படி செய்தது தவறானது. சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ள டாக்டர் இப்படி செய்தது தவறானது. 100 சதவீதம் உண்மை இல்லாவிட்டாலும் 25 சதவீதம் குற்றம் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் இந்த குற்றத்தை மேலும் வளரவிடக்கூடாது. இதில் முழு விசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்கு எந்த கோர்ட்டிலும் ஜாமீன் கிடைக்காது. மேல் கொர்ட்டுக்கு வேண்டுமானால் செல்லுங்கள். இங்கு மேலும் ஒரு முறை ஜாமீன் தாக்கல் செய்தாலும் நான் ஜாமீன் தர முடியாது. தினமும் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்க கூடியவர் இப்படி செய்தது தவறானது. எனவே டாக்டர் பிரகாஷுக்கு ஜாமீன் தர முடியாது. மனுவை தள்ளுபடி செய்கிறேன்.



## உண்மையான காதலுக்காக ஒரு தற்கோலை

சென்னை. பிப். 25- நடிகை பிரதியூஷா நேற்று விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். அவரது காதலன் உயிர் ஊசலாடுகிறது.

கடல்பூக்கள் படம்மூலம் தமிழ்திரையுலகுக்கு அறிமுகமானவர் நடிகை பிரதியூஷா. மனுநீதி, சூப்பர் குடும்பம், பொன்னான நேரம், தவசி உள்பட பல்வேறு படங்களில் இவர் நடித்திருக்கிறார். சவுண்ட் பார்ட்டி என்ற படத்தில் சத்யராஜ் ஜோடியாக நடித்து வந்தார்.

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தை அடுத்த செகந்திரா பாத்தில் தனது தாய் சரோஜா, தந்தை லட்சுமிநாராயணன், தம்பி பிரனீசந்திரன் ஆகியோருடன் பிரதியூஷா வசித்து வந்தார். தமிழ் படங்களில் நடிக்கும்போது சென்னையில் வந்து தங்கி நடித்து வந்தார். படப்பிடிப்பு இல்லாதபோது மீண்டும் அவர் செகந்திரா பாத் சென்றுவிடுவார்.

காதல்

பிரதியூஷாவும் ஆந்திராவை சேர்ந்த பிரபல தொழில் அதிபரின் மகனும் என்ஜினீயரிங் பட்டப்படிப்பு படித்து வந்தவருமான சித்தார்த்தா ரெட்டியும் உயிருக்கு உயிராக காதலித்தனர். இந்த காதல் பிரதியூஷாவின் பெற்றோருக்கு தெரியவந்தது. அவர்கள் அதற்கு பச்சைக்கொடி காட்டினார்கள். இன்னும் 4 மாதத்தில் சித்தார்த்தாவின் என்ஜினீயரிங் படிப்பு முடிவடைய இருந்ததால் படிப்பு முடிந்த பிறகு திருமணத்தை வைத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் கூறினார்கள். இதற்கிடையில் காதலனின் பெற்றோருக்கு இந்த விவகாரம் தெரிய வந்தது. அவர்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பிரதியூஷாவுடனான காதலை முறித்துக்கொள்ளும்படி தனது மகனிடம் கூறினார்கள்.

மனம் உடைந்த சித்தார்த்த தங்களது பெற்றோரின் எதிர்ப்பை பிரதியூஷாவிடம் தெரிவித்தார். அதைக்கேட்டு பிரதியூஷா கலக்கம் அடைந்தார். தங்களது காதலை பிரித்துவிடுவார்களோ என்று இருவருமே வருத்தம் அடைந்தனர்.

தற்கொலை

நேற்று பகல் 11 மணிக்கு பிரதியூஷா தனது தாயாரிடம் வெளியில் சென்றுவிட்டு வருவதாக கூறி காரில் புறப்பட்டு சென்றார். ஆனால் நீண்ட நேரம் ஆகியும் வீடு திரும்பவில்லை. இந்தநிலையில் அவர் பஞ்சாரா ஹில்ஸ் என்ற இடத்தில் பிரபல ஓட்டலில் கார் நிறுத்தும் இடத்தில் நின்ற ஒரு காரில் பிரதியூஷா செத்துகிடப்பதாக அவர்கள் வீட்டுக்கு தகவல் வந்தது. பதட்டம் அடைந்த பெற்றோர் விரைந்து சென்று பார்த்தனர். அங்கு பிரதியூஷா விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டதை கண்டு கதறி அழுதார்கள். அருகில் காதலன் சித்தார்த்தா ரெட்டி கோமா நிலையில் கிடந்தார். உடனடியாக அவரை மருத்துவ மனையில் கொண்டு சென்று சேர்த்தனர். அங்கு காதலன் சித்தார்தா உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



# சுதந்திரன் தந்த சுடர்மிகுந்த பத்திரிகையாளன்

நம்நாடு காத்திரமான பல நேர்காணலை தமிழர் சமுதாயத்தின் விழுமியங்களை தமதாக்கிக்கொண்டிருக்கும் நம்மவரோடு உருவாக்கி வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப்பெற்றிருக்கிறது.

அந்த வகையில் இன்றைய இந்த நேர்காணல். சுதந்திர இலங்கையின் பத்திரிகைத் தளத்திலே ஆயிரத்தித்தொழாயிரத்தி ஐம்பதுகளிலே புயல் வேக இளைஞனாக ஆக்கிரமித்த-பல பத்திரிகைக் காலவரலாற்றில் தனது சுவடுகளைப்பதித்த. விடுதலைக் கால ஏட்டில் பலபத்திரிகையாளர்கள் உருவாக்கிப் பெருமைபெற்ற சுதந்திரன். வீரகேசரி. தினகரன் எனபல பத்திரகையாளர்களது இன்றைய உதயத்திற்கு உதயம் செய்த பொன். பாலசுந்தரம் அவர்களை 'நம்நாடு' வாசகர்களுக்காக இங்கே பேட்டி காணுகிறேன்.

பத்திரிகைகள் எனது பல்கலைக் கழகம். பத்திரிகையாளன் எனக்குப் பேராசிரியனாக வகுத்துக்கொண்ட எழுத்தியலே ஒரு பத்திரிகை ஆசிரியனாக இருப்பதற்கு எனக்கு அறிவியலைத் தந்திருக்கிறது.

இன்றைக்கு 'நம்நாடு' புலம் பெயர்ந்த நாடுகள் பலவற்றில் பரபரப்பாக சென்று கொண்டிருக்கிறது என்றால் இந்தப்பெருமைமிக்க பாத்திரத்தில் கனமும் காத்திரமும் அழுத்தமும் கொடுத்தவர்களே எனது அறிவியலை உழுதவர்கள். அந்த வகையில். பத்திரிகை அச்சேறுதலே அவஸ்தையான ஒரு தொழிலாக இருந்த நேரத்தில் பத்திரிகையில் நுழைந்து. அந்தப் பாத்திரத்திற்கு பெருமையும் மதிப்பும்பெற்ற ஐம்பது வருடங்களைச்சுமந்து இன்றைக்கு இலண்டனிலே வதியும் பொன். பாலசுந்தரம் அவர்களை-தமிழர் தகவலின் சிறப்பு விருதைப்பெற வந்த அவரை நம்நாடு காரியாலயத்தில் வரவேற்றுக் கொள்கின்றேன்.

விருதுக்குப் பெருமை சேர்க்கும் அவரது பணியை அந்த விழாவிலே கேட்டபோது எனக்கு இன்னும் அந்தப் பத்திரிகையானது-அவர்களைப் போன்றவர்களது அயராத உழைப்பிலே -அழகான தமிழிலே அரசோச்சியதினால் தான் இன்றைய பத்திரிகை உலகின் அழகியல். உண்மைகளின் உரைகற்கள் புதுமைகளைப் படைக்கின்றன என்பதற்கான அடையாளம் இறுகிக் கொண்டது.

அப்பம் இட்டு
அதன்பின்னெ நஞ்சுமிட்டு
குப்பத்து நாயதனைக்
கொல்ல நினைப்பதுபோல்
தமிழை அழிப்பார்கள்
தருகின்ற வெறும்சொல்லில்
தாலேலோப்போட்டு
தமிழ்த் தலைவர் ஓடுகிறார்....
நாளை களம் வரும்
நம்கரத்தில் வாளிருக்கும்....

என எனது பதினாறு வயதுக் கவிதைக்குக் காரணம் சுதந்திரன் ஆகும்.

என் கவிதைகளைத் தாங்கிய. எனக்கு மானமும் ரோசமும் ஆக்கிய அந்த எழுத்தியல் புரட்சி ஏடான சுதந்திரனில் ஆரம்பித்து ஐம்பது வருடங்களை பத்திரிகைப் பணியில் முத்திரை பதித்த சாதனையாளரை. 'நம்நாடு' பத்திரிகையை காணாவிட்டால் என்னைக் கடியும் வாசகர்களின் இனிய உள்ளங்களுக்கு விருந்தாகத் தருகின்றேன்

-ஆசிரியர்.

**வணக்கம் திரு.பொன் பாலசுந்தரம் ஐயாஅவர்களே, நீங்கள் பத்திரிகைத் துறையில் ஏன் நுழைந்தீர்கள், என்ன காரணங்கள் உங்களை ஈர்த்துக் கொண்டன, எந்தப் பத்திரிகையில் உங்கள் சுவடுகள் ஆரம்பமாகின-வியாபித்தன என்பதைச் சொல்வீர்களா?**

பாலா: வணக்கம் திரு. இராஜலிங்கம் அவர்களே,

எனது ஆரம்பம் சுதந்திரன் பத்திரிகை



ஆகும். இந்தப் பத்திரிகையில்தான் எதிர்காலத்தில் ஒரு பத்திரிகையாளனாக வருவதற்கு அத்திவாரம் இடப்பட்டது.

அரசியல், இலக்கியம். இயல், இசை., நாடகம், எழுத்தாளர் வட்டம். அறிஞர்கள், ஆய்வாளர்கள், இப்படிப் பல துறையினரையும், சந்திக்கவும், அவர்களுடன் கலந்துரையாடவும், கருத்துப் பரிமாறல்களைச் செய்யவும், ஒரு வாய்ப்பு ஏற்பட்டது.

ஒரு கஸ்டமான சூழலில் சுதந்திரன் பத்திரிகை தமிழர்களுடைய அபிலாசைகளைப் பிரதிபலிப்பதற்காக எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. தமிழர்களுடைய அரசியல் உரிமைகள். பிராந்திய உரிமைகள், ஒவ்வொன்றாக காலத்திற்குக் காலம் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் பறிக்கப்பட்டு வந்ததை சகித்துக் கொள்ள

## தமிழர் தகவல் விருது பெற்ற பொன். பாலசுந்தரத்துடன் ஒரு பேட்டி

முடியாத ஒருகட்டம் தமிழர்களுக்கு ஏற்பட்ட ஒரு காலத்தில் இந்தப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தமிழர்களுடைய நலன்களை பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல அரசியலுக்கும் புறம்பாக இலக்கியம் பொருளாதாரம் போன்றவற்றிலும் தமிழர்கள் வளர்ச்சி காண வேண்டும் என்ற ஆவலுடன். பல எழுத்தாளர்களை சுதந்திரன் உருவாக்கி இருந்தது.

வீரகேசரி. தினகரன் ஆகிய பத்திரிகைகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள் அதாவது அரசாங்கத்தை பகைத்துக் கொள்ளாத ஒரு நிலையில் தமது பத்திரிகைச் செய்திகளை கட்டுரைகளை விமர்சனங்களை முடக்கி. வைத்திருந்த நிலையில் சுதந்திரன் அவற்றையெல்லாம் மீறி ஒரு புதிய எழுத்தாளர் சமுதாயத்தை அல்லது பரம்பரையை உருவாக்கியது எனலாம். யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை வரையிலும் மட்டக்களப்பு மன்னாரில் இருந்து மலையகத் தமிழர்கள் வரையிலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதிற்கு சுதந்திரன் ஒரு மூலகாரணமாக இருந்தது. மலையக எழுத்தாளர்கள் சுதந்திரனில் மனம் திறந்து எழுதினார்கள். எழுத்தாற்றலும் சிறந்த சிந்தனைகளும் நிறைந்த இளைஞர்கள் ஏராளமாக சுதந்திரனால் வளர்க்கப்பட்டனர். சிறந்த கவிஞராக மிளிர்ந்த தான்தோன்றிக் கவிராயர் சில்லையூர் செல்வராசன். பேனா முனையால் தன்னை பிரபல்யப்படுத்திய செ. இராஜதுரை. மட்டக்களப்பு மண் வாசனையை மக்களுடன் ஹாஸ்மாகப் பகிர்ந்து கொண்ட ரி. பாக்கியநாயகம்.

புகையில் தெரிந்த முகம் என்ற நாவல் மூலம் திறமைசாலிகளுக்கு குறைவில்லாமல் தமிழ் மண் இருக்கிறது என்பதைக் காண்பித்த அ. செ. முருகானந்தம், தளத்து ஓயா கணேஸ், சுதந்திர தாகம் நிறைந்த கவிதைகளை எழுதிவந்த உருத்திரமூர்த்தி, இப்படி இன்னும் அநேகரை எழுத்தாளர் உலகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை இந்தப் பத்திரிக்கைக்கு உண்டு. அதுமட்டுமல்ல, இவர்களுடைய கதைகள், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், வெளிவருவதை அவதானித்த அநேக இளைஞர்கள் தமது எழுத்தாற்றலை வளர்க்க சுதந்திரன் ஒரு உந்து சக்தியாக இருந்தது. எமிலிஷோலா என்னும் ஆங்கில நவீனத்தை ஆங்கிலத்தில் அ. ந. கந்தசாமி மொழிபெயர்த்து சுதந்திரனில் வெளியிட்டது அந்தக் காலத்தில் ஒரு பரபரப்பையே ஏற்படுத்தியிருந்தது.

அரசியலுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு பத்திரிகை பல துறைகளிலும் உள்ளவர்களை ஊக்கப்படுத்தி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது என்பதைக் கூறுவது மிகையாகாது.

நான் சுதந்திரனில் கடமையாற்றும் போது சமகாலத்தில் உருவானவர்கள்தான் இவர்கள்-பிற்காலத்தில் பிரபல்யமாக வளர்ந்த

### நம்நாடு நேர்காணல்

எழுத்தாளர்கள்.

இப்படியாக, சுதந்திரன் தந்த ஊக்கம், அனுபவம் பிற்காலத்தில் எனக்குச் சிறப்பான இடத்தை உருவாக்கியது. பத்திரகையில் பணியாற்றுபவர்களுக்கு தேசப்பற்றையும் இனப்பற்றையும் வளர்க்கக் கூடியவர்களாக இருக்க வேண்டுமென்ற கோட்பாட்டையும் சுதந்திரன் பரவலாக எல்லோருக்கும் அறிவுறுத்தியது எனலாம்.

**கேள்வி: சுதந்திரனில் இருந்து நீங்கள் விலகியதிற்கான காரணிகள். அதன்பின் உங்கள் பத்திரிகைப் பணி எவ்வாறு தொடர்ந்தது என்பதைக் கூறுங்கள்.**

பதில்: சுதந்திரனில் இருந்து நான் வீரகேசரிப் பத்திரிகைக்குச் சென்றமைக்கான காரணம். வீரகேசரிப் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் கே.வி.எஸ் வாஸ் அவர்களே.சுதந்திரனில் வெளிவந்த எனது பேட்டிகளும் கட்டுரைகளும் விமர்சனங்களும் திரு. வாஸ் அவர்களை மிகவும் கவர்ந்திருந்தது. அதனால் அவர் என்னை தமது பத்திரிகையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென விரும்பினார். அதே போல வீரகேசரிப் பத்திரிகையின் போர்மனாக இருந்த நாராயணசாமி என்பவர் தினமும் சுதந்திரன் பத்திரிகையைப் படித்துவிட்டு திரு. வாஸ் அவர்களிடம் சென்று இந்த நிருபர். அவரது விமர்சகர் மிகவும் நல்ல முறையில் இதை எழுதியிருக்கிறார். அவரை எப்படியும் எமது பத்திரிகையில் பணிபுரிய வைப்பது நல்லது என்று திரு. வாஸ் அவர்களிடம் சொல்லிக்கொண்டே இருப்பாராம்.

அதைத் தொடர்ந்துதான் திரு.வாஸ் தம்மை வந்து சந்திக்கும்படி எனக்கு ஒருவரைத் தூது அனுப்பி இருந்தார். நான்அவரைச் சந்தித்த வீரகேசரிக்குச் சென்றிருந்தபோது உடனடியாகவே எனக்கு வேலை கொடுக்கப்படுவதாக என்னிடம் திரு. வாஸ் கூறினார்கள். இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. ஆனால் அவருடை வற்புறுத்தலிலிருந்து தப்ப முடியாத நிலையில் நான் வீரகேசரிப் பத்திரிகையில் பணியாற்றச் சம்மதித்தேன்.

இதைத்தவிர எனக்கும் சுதந்திரன் பத்திரிகைக்கும் எதுவித மனத் தாங்கலோ. வேறுபாடுகளோ இருக்கவில்லை. திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகள் அவர்களின் சம்மதத்தோடுதான் நான் வீரகேசரிக்குச் சென்றேன்.

**கேள்வி: வீரகேசரியில் உங்கள் பணியின் கனம் எவ்வாறு இருந்தது. உங்கள் எழுத்தாற்றல் வீரகேசிரியின் வளர்ச்சியில் புதுமைகள் செய்தனவா?**

பதில்: ஆம். வீரகேசரியில் எனக்கு எதுவித கட்டுப்பாடும் இருக்கவில்லை. மற்றவர்களுக்கு இல்லாத சுதந்திரம் எனக்கு ஒரு மாதத்தில் கிடைத்துவிட்டது. நான் விரும்பிய நேரத்திற்கு காரியாலயத்திற்குச் செல்லலாம். ஒரு வேலை நேரத்திற்குக் கூட கட்டுப்பாடு இருக்கவில்லை. அதனால் நான் இரவில் வெகுநேரம் வரையில் பத்திரிகைக்கான செய்திகளைச் சேகரித்து தயாரித்து. அதற்குத் தலையங்கம் இட்டுக் கொடுத்து உதவுவேன். நான் சேர்ந்த போது வீரகேசரிப் பத்திரிகையில் கொழும்புச் செய்திநிருபர்களாக இருவர் மட்டும் இருந்தனர். ஒருவர் சிங்களவர்-நாணயக்காரா, மற்றவர் பறங்கியர்-வன்டர்ஸ்ராற்டன் ஆகும். இவர்கள் இருவரும் தமது செய்திகளை எல்லாம் ஆங்கிலத்தில் கொண்டுவந்து கொடுப்பார்கள். பாராளுமன்ற நிகழ்வுகளைக் கூட ஆங்கிலத்தில் எழுதுவார்கள். அவைகளை எல்லாம் மொழி பெயர்த்துத்தான் பத்திரிகை வெளியிடுவார்கள்.

ஒரு சமயத்தில் என்னை பாராளுமன்றத்திற்கு சென்று சபைக் கூட்ட நிகழ்வுகளை குறிப்பெடுத்து எழுதி தரும்படி கேட்டிருந்தார்கள். நான் அந்த ஆங்கிலப் பேச்சுக்களை நேரடியா தமிழிலே எழுதி கொடுத்திருந்தேன். அதைப் பார்த்ததும் மிகவும் சந்தோஷமடைந்து அப்படியே அதைப் பிரசுரித்தார்கள். அன்றிலிருந்து பாராளுமன்றத்தில் நிரந்தர நிருபராகக் கடமைக்கு அமர்த்தப்பட்டேன்.

ஒரு சமயத்தில் குன்றக்குடி அடிகளார் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். அது அவரது முதலாவது விஜயம். இந்திய உரிமையாளர்களது பத்திரிகையாக இருந்தபடியால் குன்றக்குடி அடிகளாரின் விஜயச் செய்திகளை முழுக்க முழுக்க பிரசுரிக்க வேண்டுமென கேட்கப்பட்டிருந்தது.

அதற்காக தமிழில் திறமை வாய்ந்த ஒருவரை அனுப்ப வேண்டுமென மேலிடத்தில் இருந்து கேட்டுக் கொள்ளப்பட்ட போது திரு. வாஸ் அவர்கள் என்னை அழைத்து குன்றக்குடி அடிகளாரை பேட்டி காண முடியுமா உங்களால் என்று கேட்டார். அப்போது குன்றக்குடி அடிகளார் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர் எனவும் அவரின் பேச்சைக் கிரகித்து எழுதுவது மிகவும் கஸ்டமாக இருக்கும் எனவும் அதனால் அவதானிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் என்னை எச்சரிக்கை செய்வதுபோல அவர் கூறினார். நான் அதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டேன். அது எனது வயதின் வேகம்தான்.

குன்றக்குடி அடிகளாரை அவர் இருந்த வீட்டிற்குச் சென்றிருந்தேன். காவி உடை, தலைப்பாகை. நீண்டதாடி. கழுத்திலே உருத்திராட்சை மணிமாலை. நீறணிந்த நெற்றி என பார்வைக்கு ஒரு ஞானியர் போல் தென்பட்டார். வீரகேசரிப் பத்திரிகையில் இருந்து ஒரு நிருபர் பேட்டி காண வந்திருக்கிறார் என ஒரு குரல் ஒலிக்க, அடிகளார் மண்டபத்தில் இருந்து வெளியே வந்து என்னை வரவேற்றார். என்னைக் கண்டதும் அவர் மேலும் கீழுமாக என்னைப் பார்த்தார். அதற்குக் காரணம் வேறு ஒன்றும் அல்ல. எனது உடைதான்: வெள்ளைக் காற்சட்டை. வெள்ளை மேலங்கி. கழுத்திலே ரை. இதை விட தோற்றத்தில் ஒருபையன். இப்படிப்பட்ட ஒருவரைப் பேட்டிகாண அனுப்பியிருக்கிறார்களே என்று அவர் அனுப்பி இருக்கலாம். அனுதாபப்பட்ட நிலையில் தமது பக்கத்தில் அமரவைத்து பேட்டியை ஆரம்பிக்கச் சொன்னார்.

கேள்விகளை எல்லாம் மனத்திற்குள் வந்திருந்தேனே ஒழிய காகிதத்தில் எழுதிக் கொண்டு போகவில்லை.

ஒன்றன்பின் ஒன்றாக கேள்விகள்பறந்தன. அடிகளாரும் விபரமான பதில்களைத் தந்தார். குறிப்புகளை மிகவும் கவனமாக எடுத்துக் கொண்டுதான் பேட்டி முடிந்து காரியாலயம் திரும்பினேன். பத்திரிகையின் ஒருபக்க....

அடுத்த வாரம் தொடரும்....

www.padippakam.com



# சுயம்வரம்

(1). இலண்டனில் வசிக்கும் 23 வயது நிரம்பிய அழகான தனது தங்கைக்கு அவரது அண்ணன் மாப்பிள்ளை தேடுகிறார். பெண் பொதுநிறம். 5அடி 3அங்குலம் உயரம். இலண்டனில் PR உள்ள வேலைசெய்பவராக இருப்பவர் விரும்பத்தக்கது. **REF:- A/01**

(2). 29 வயது நடுத்தர நிறமுடைய வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்த படித்த பெண்ணுக்கு தாய் தந்தையர் மணமகன் தேடுகிறார்கள். மணமகன் சைவமாகவும் டாக்டர், இஞ்சினியர், அக்கவுண்டன் ஆகவோ இருத்தல் வேண்டும். **REF:- A/02**

(3). 30 வயதுடைய Cambridge Uni யில் படித்து நல்லவேலையில் இருக்கும் அழகான நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்கு பெற்றோர் மணமகன் தேடுகிறார்கள். மணமகன் Cambridge Uni யில் படித்து நல்ல வேலையில் இருப்பவராக இருத்தல் அவசியம். **REF:- A/03**

**(4).** REF:- Accountancy படித்த நல்ல நிறமான 27 வயதுடைய மணமகனுக்கு பெற்றோர் பெண் பார்க்கின்றார்கள். மணமகன் இலண்டனில் வேலை செய்கின்றார். UK P.R உடைய படித்த பெண் விரும்பப்படுவார;. REF:- A/04

(5). கொழும்பில் டீயமெ இல் வேலை செய்யும் பெண்ணுக்கு அண்ணன் மணமகனைத் தேடுகிறார். மணமகன் படித்தவராகவும் லண்டனிலோ அல்லது கனடாவிலோ இருப்பவராக இருந்தால் விரும்பப்படும். **REF:- A/05**

(6). யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த Batticoloa வில் நல்ல வேலையில் இருக்கும் பெண்ணுக்கு இலண்டனில் இருக்கும் பெற்றோர் வரன் தேடுகிறார்கள். வரன் படித்தவராகவும் இலண்டனிலோ, France இலோ இருப்பவராக இருந்தால் நல்லது. **REF:- A/06**

**(7).** அழகான 25 வயது கணக்காளராக France இல் வேலைசெய்யும் தனது தங்கைக்கு அண்ணன் வரன் தேடுகிறார். வரன் படித்தவராகவும், நல்ல பண்பான குணமுள்ளவராகவும் இருத்தல் அவசியம். **REF:- A/07**

(8). 32 வயதுள்ள படித்த , லண்டனில் வாழும் நல்ல குணமுள்ள தனது தம்பிக்கு அக்கா பெண் பார்க்கிறார். பெண் அழகானவராகவும், படித்தவராகவும் இருக்க வேண்டும்.
**REF:- A/08**

(9) யாழ் இந்து குகன் வம்சம், பரம்பரை நகை வியாபாரிகள் தமது மகன் வயது 35 ரோகினி நட்சத்திரம் 8இல் செவ்வாய் உடைய, இலண்டனில் CHARTERED CERTIFIED ACCOUNTANT ஆக எட்டு ஆண்டுகள் தொழில் புரியும் மிகவும் நல்ல குணமுள்ள பிரிட்டனில் P.R. உள்ள 5' 7" உயரம் உள்ள சிவந்த நிறமான தமது அன்பு மகனுக்கு அழகிய படித்த சிவந்த மணமகளை எதிர்பார்க்கின்றார்கள். பிற உயர் குலத்தவர்களும் விண்ணப்பிக்கலாம். REF/18

(10) இலண்டனில் வசிக்கும் அன்ரியார் தமது 33 வயதுடைய Bcom 2ND upper JAFFNA UNIVERSITY, POST GRADUATE DIPLOMA IN BUSINESS MANAGEMENT படித்த 5' 5"உள்ள வேளாளர் குலத்தைச் சேர்ந்த கொழும்பு University யில் Asst. Registrar க பதவி வகிக்கும் தமது மகளுக்கு P.R. உள்ள DOCTOR, ENGINEER OR ACCOUNTANT, LONDON, AUSTRALIA, CANADA அல்லது மற்றைய EUROPEAN நாடுகளில் இருந்து எதிர்பார்க்கிறார்கள். காலம் சென்ற தந்தையார் ஒரு ENGINEER, சகோதரர் PHD படித்துக்கொண்டிருக்கின்றார், சகோதரி INTERNATIONAL COLLEGE IN COLOMBO இல் ஆசிரியையாக இருக்கின்றார். பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கலாம். REF A/19

(11) அழகான 31 வயதுடைய கனடா பிரஜா உரிமை பெற்று நல்ல
வேலையில் இருக்கும் நல்ல குணமுள்ள மருமகனுக்கு லண்டனில் இருக்கும் மாமா அழகான ஓரளவு படித்த நல்ல குணமுள்ள பொருத்தமான பெண்ணை தேடுகிறார்கள். பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்..
REF A/20

(12) சுவிசிலாந்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவ தாதியாக தொழில் புரிபவரும் சுவிசில் நிரந்தர வதிவுடமை பெற்ற வரும் 28 வயது உடைய பெண்ணுக்கு லண்டனில் வாழும் அவரது மாமியார் பொருத்தமான வரனை தேடுகிறார்கள்.
மணமகன் Doctor, Engineer, Accountant, க இருக்க வேண்டும். கூடியளவு லண்டன் ,அமெரிக்கா, கனடா அவுஸ்ரேலியாவில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. மற்றைய ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.REF A/21

சுயம்வரத்தில் பங்குகொள்ள விரும்புவவர்கள் **£10 க்கு Cheques,**
**Postal orders cross and made payable to "NAMNADU"**
**Address:- SUYAMVARAM, 1A SIBLEY GROVE, EASTHAM, LONDON E12 6SD.**

## ஸ்ரீகுமரன் சொல் தேடும் பகுதி 3

### COLOURS

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q | W | E | R | K | C | A | L | B | T | Y | U | I | O | P | L | K | J | H |
| D | U | H | L | O | K | Y | F | S | R | F | G | A | S | O | S | D | F | G |
| B | E | T | I | H | W | J | G | Z | D | D | H | L | G | U | B | S | P | M |
| K | Q | D | T | Y | K | N | D | L | V | Z | M | I | N | M | D | F | N | L |
| R | K | Y | K | H | R | S | O | C | B | C | D | C | B | Y | Y | B | E | F |
| E | I | J | V | F | V | G | C | B | M | N | C | C | A | L | L | H | E | B |
| D | F | S | V | Z | K | M | B | A | I | N | C | R | X | F | K | Y | R | Y |
| N | R | B | N | A | T | H | D | U | I | U | G | A | Z | P | J | U | G | N |
| E | T | N | J | X | Y | G | U | E | T | U | D | S | L | N | E | K | Y | J |
| V | B | T | Y | T | R | E | W | Q | Y | F | G | H | A | F | M | J | T | E |
| A | T | E | U | I | O | P | L | V | W | M | K | J | E | B | I | N | F | S |
| L | Y | L | J | H | G | E | G | N | A | R | O | W | T | F | L | G | B | I |
| V | F | O | K | D | F | X | Z | V | B | N | Q | N | M | U | Q | T | H | O |
| C | S | I | L | P | O | I | U | Y | W | R | T | W | E | D | K | D | N | U |
| N | E | V | B | E | S | O | R | N | M | O | R | E | W | K | N | H | K | Q |
| W | M | L | P | O | I | Y | U | A | Y | T | L | X | C | N | I | F | S | R |
| O | O | K | J | H | G | F | U | D | S | A | Z | L | V | I | P | J | W | U |
| R | K | E | T | I | D | Q | H | G | E | G | N | A | E | M | H | F | C | T |
| B | G | S | F | C | A | B | M | E | U | L | B | B | K | Y | M | B | P | L |

| | | | |
|---|---|---|---|
| BLACK | ORANGE | YELLOW | INDIGO |
| RED | GOLD | TEAL | VIOLET |
| PINK | TAN | AQUA | LAVENDER |
| ROSE | GREEN | TURQUOISE | WHITE |
| BROWN | LIME | BLUE | GRAY |

கீழ்க்காணும்சொல் தேடும் பகுதியில் இருபது நிறங்கள் ஒளிந்திருக்கின்றது. அவற்றைக் கண்டு பிடித்து அப்பெயர் மீது கோடிட்டு கத்தரித்து எமக்கு அனுப்பிவைக்கவும். அத்துடன் உங்கள் பெயர் விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எமக்கு அனுப்பிவைக்கவும். குலுக்கல் முறையில் அதிஸ்டம் பார்க்கப்பட்டு மூன்று அதிர்ஸ்ட சாலிகளைத் தெரிவு செய்து ஒவ்வொருத்தருக்கும் தலா பத்து ஸ்ரேலிங் பவுண்ஸ் பரிசு தொகையாக அனுப்பிவைக்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி:

1a Sibley Grove,
Eastham,
London E12 6SD

## சிரியுங்கள்....

மேடையில் ஒரு பெண்:

இன்றைய உலகில் பைத்தியகாரர்களாக இருப்பவர்கள் ஆண்களே!
நீங்கள் பைத்தியகார ஆஸ்பத்திரிக்கு சென்று பார்த்தீர்களானால் முக்கால் வாசிப்பேரும் ஆண்களாகவே இருப்பார்கள்.

கூட்டத்தில் ஒருவர்:

அந்த ஆண்களை வீட்டிலிருந்து பைத்தியகார ஆஸ்பத்திரிக்கு அனுப்புபவர்கள் யார்?..........

www.padippakam.com




# SELECT

## Estates & Lettings

ஐரோப்பிய மற்றும் வெளிநாடுளில் இருந்தும் இங்கிலாந்தில் வீடுகள் வாங்க, முதலீடு செய்ய விரும்புவோருக்கான ஆலோசனைகளும் கடன் வசதிகளும் விசேடமாக ஒழுங்கு செய்து தரப்படும்.

**228 High Street North, Manor Park, London E12 6SA**

www.selhouses.com

**Tel: 020 8470 1500**

**Fax: 020 8470 9800**

Mobile: 07956 150 580

E-mail:raj@selhouses.com

# UAL

**United Amba Ltd.**

**Suppliers of Spices & Dhals all over Europe**

**எமது பரிசு திட்டத்தில் கலது கொண்டு 1000 பவுண்களை பரிசாக பெறுங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வறுத்த பிட்டு மா | 1Kg | 79p | பொன்னி அரிசி (பச்சை) | 1Kg | £1.10 |
| அவித்து அரித்த கோதுமை மா | 1Kg | 49p | பொன்னி அரிசி (புழுங்கல்) | 1Kg | 95p |
| வறுத்து அரித்த ஆட்டா மா | 1Kg | 69p | மைசூர் பருப்பு | 1Kg | 79p |
| வறுத்த வெள்ளை அரிசி மா | 1Kg | 89p | உளுத்தம் பருப்பு | 1Kg | 95p |
| உளுத்தம் மா | 1Kg | £1.79 | மிளகாய்த் தூள் | 1Kg | £2.69 |
| பாஸ்மதி அரிசி | 1Kg | £1.19 | மல்லித் தூள் | 1Kg | £1.49 |
| சம்பா அரிசி | 1Kg | £1.10 | வறுத்த ரவை | 1Kg | 79p |

அனைத்து வகை பருப்பு, பயறு, மா, மளகாய்த்துாள் ஆகிய பொருட்களை மலிவாகவும் சுவைத்துண்ண அருகாமையில் உள்ள கடைகளில் **UAL** தயாரிப்புக்கள் என்று கேட்டு வாங்குங்கள்

மொத்தமாக பெற்றுக் கொள்ள தொடர்புகள்:

**Telephone:- +44 208 385 1370, Fax:- +44 208 385 1369**

**e-mail:- ualuk@yahoo.co.uk, http://www.ual.uk.com/**

www.padippakam.com



# ஈழத்துப் பெண் போரின் அனர்த்தம்: ஒரு சோக சம்பவம் தமிழகத்தில் கொலை

உண்மைக்கதை

கடல் கடந்து ஒரு கதறல்!

காதலித்துக் கரம் பிடித்தவளை கதறக் கதறக் கொடூரமான முறையில் கொலை செய்த சம்பவம் ஒன்று அண் மையில் சென்னையில் இடம் பெற்றுள்ளது.

சொந்த பந்தம் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு காதலனின் உறவு மட்டுமே போதும் என்று காதலனையே சரணாகதியடைந்த இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவருக்கே இந்தக் கொடூரம் நிகழ்ந்துள்ளது.

கடந்த ஆறு மாதகாலத்துக்கு முன் இந்தக் கொடூரக் கொலை நடந்தது.

கொலை செய்யப்பட்ட ஜானகி கொழும்பைச் சேர்ந்தவர். இவருடைய கணவரான உதயகுமாரும் இலங்கையர் தான். இவர்களுக்கு கௌதம். கௌசிகன் எனற இரு ஆண்பிள்ளைகள் இருக்கிறார் கள். கொலை செய்யப்பட்ட ஜானகியின் சகோதரியான சரஸ்வதியின் மூலமே இந்தப் படுகொலைச்சம்பவம் வெளிச்சத் துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

''என்னுடைய கணவருடைய தம்பி தான் உதயகுமார். என தங்கச்சியும் அவரும் காதலித்தது தெரியவந்ததும் இருவருக்கும் திருமணம் செய்து வைத்தோம். இரண்டு குழந்தைகள் பிறந்தன. நால்வரும் சந்தோஷமாக தான் இருந்தார்கள்,'' என்று அந்தக் கொலை பற்றி சரஸ்வதி சொன்னார்.

உதயகுமாரின் அக்காவான குமுதவல்லி வந்த பிறகுதான் சந்தோஷமாக இருந்த குடும்பத்தில் புயல் வீசத் தொடங்கியது.

குமுதவல்லியின் கணவர் பல வருடமாக லண்டனில் இருக்கிறார். அதனால் தம்பியின் குடும்பத்தினருட னேயே குமுதவல்லியைத் தங்கியிருக்கச் சொல்லியிருக்கிறார். இதற்கு ஜானகி சம்மதித்தார்.

வேலை எதுவுக்கும் போகாமல் உதயகுமாரும் சோம்பேறியாகிவிட்டார். அத்துடன் குடிப்பழக்கம் வேறு.

குடித்துவிட்டு ஜானகியையும் அடித்துத் கொடுமைப்படுத்தி வருவது வழக்கமாகி விட்டது.

இந்த நிலையில் தனது கணவனின் குடிப்பழக்கத்திற்கும் சண்டை சச்சரவுகளிற்கும் குமுதவல்லிதான்முக்கிய சூத்திரதாரி என்றதை அறிந்து கொண்டு ஜானகி குமுதவல்லியுடன் சண்டை போட்டு வந்தார் .இதனால் உதயகுமார் எனது தங்கச்சியை மிகவும் மோசமாக கொடுமைப்படுத்தியதாக சரஸ்வதி கூறினார். இந்தக் கொடுமையைத் தொடர்ந்தும் தாங்க முடியாமல் ஜானகி இரண்டு பிள்ளைகளையும் சென்னையில் விட்டுவிட்டு இலங்கை வந்துவிட்டார்.

ஆனால் குழந்தைகளைப் பார்க்காமல் அவளால் இருக்க முடியவில்லை இதனால் கணவரையும் பிள்ளைகளையும் இலங்கைக்கு மீண்டும் கூட்டி வரவதாகச் சொல்லிவிட்டுப் போனவள் போனதுதான். அவளுடைய பிணத்தைக் கூடப் பார்க்கமுடியவில்லை என்று கூறிவிட்டு கதறினார் சரஸ்வதி.

சரஸ்வதிகூறுவதையே அவதானித் துக் கொண்டிருந்த பொலிசார் பெரியம்மாவின் (சரஸ்வதி )அழுகைக்குக் காரணம்தெரியாமல் விழித்துக் கொண்டி ருந்த கௌதமிடமும் கௌசிகனிடமுமம் பேச்சைக் கொடுத்துள்ளனர். படு சுட்டியாய் இருந்த கௌசிக் படபடவென்று சொல்லத் தொடங்கினான்.

ஒரு நாள் அம்மாவுக்கும் அப்பாவுக்கு சண்டை. அம்மாவை அப்பா அடிச்சிது. அம்மா மூக்குல ரத்தம் வந்தது.உடனே அப்பா எங்களை ஒரு ரூம்ல போட்டு பூட்டிட்டாரு. நாங்க அப்படியே தூங்கிவிட்டோம். காலையில அம்மாவைத் தேடினோம். காணவில்லை. அப்பாட்ட கேட்டோம். அம்மா ஊருக்கு(இலங்கைக்கு) போயிட்டார் என்று சொன்னார்கள்.

அம்மா பெரிய சூட்கேசும் சின்ன சூட்கேசும் கொண்டு வந்திருந்தார். சின்ன சூட்கேஸ் மட்டும் இருந்தது. அம்மா சூட்கேஸ் இங்க இருக்கு அம்மா போகல பொய் சொல்லுறன்னு சொன்னேன். அதுக்கு அப்பா ''அம்மா போகும்போது எனக்கு இதைக் கொடுத் திட்டுப் போயிட்டா'' என்றார்.

பாத்ரூம்பல ரத்தம் கிடந்தது. அதுபற்றிக் கேட்டப்போ அது'' ஹேர்-டை என்று அப்பா சொன்னார். அப்பாட சட்டை பொக்கட்டில் அம்மாவோட தோடு இருக்கிறதை பார்த்தேன்.

அம்மாவை ஏதோ பண்ணிட்டாங்க் என்று மட்டும் கௌதமிடம் சொன்னேன். அதற்குப் பிறகு அம்மாவைப் பார்க்கவே இல்லை. என்று சொன்னான்.

இவற்றையெல்லாம் கேட்டு அறிந்து கொண்ட பொலிசார் புலன் விசாரணைகளை ஆரம்பிக்கத் தொடங்கினர்.

இது தொடர்பாக பொலிசார் தெரிவிக்கையில்:

சம்பவத்தினத்தன்று இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. அடிதடி வரை போயுள்ளது. பின்னர் ஜானகியை சமாதானப் படுத்தியிருக்கிறார் உதயகுமார். நானும் குழந்தைகளும் இலங்கைக்கு வந்து விடுகிறோம் என்று நயமாகப் பேசி மனைவியை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று இருவரும் மது அருந்தியுள்ளனர்.

ஜானகிக்கு இலங்கையில் ஆனந்த் என்ற காதலன் இருப்பதால் அவருடன் சென்று வாழ அவர்விரும்பியிருக்கிறார். இதனால் ஆத்திரம் அடைந்த உதயகுமார் அவர் தூங்கும் போது கழுத்தை நெரித்துக் கொன்று விட்டார். பின்னர் குமுதவல்லியின் துணையுடன் சூட்கேசில் பிணத்தைப் போட்டு நாகபட்டினம் போவது போல பஸ் நிலையத்துக்கு வந்து பிணத்தைப் போட்டுவிட்டு தப்பிவிட்டனர். எனப் பொலிஸ் இணை இயக்குனர் சைலேந்திர பாபு தெரிவித்தார்.

இந்தக் கொலை எப்படிப் வெளியுலகுக்குத் தெரிந்தது? என்ற கேள்விக்கு மீண்டும் சரஸ்வதியே பதில் சொன்னார்.

ஜானகியிடமிருந்து எந்தத் தகவலும் இல்லாததால் என் அம்மாவுடன் சென்னைக்கு வந்தேன். குமுதவல்லி வீட்டுக்குப் போனால் அங்கு யாரும் இல்லை. அதற்குப் பின்னர் ஒரு புடவைக்கடைக்காரன் மூலமாக குமுதவல்லியின் புதுவீட்டைக் கண்டுபிடித்தேன். ஜானகி இலங்கைக்கு வந்துவிட்டாள் என்று குமுதவல்லி சொன்னார். அது பொய். ஜானகியோட கணவரான உதயகுமாரிடம் கேட்டேன்.

''இந்தா கூட்டிட்டு வர்றேன்'' என்று சொல்லிவிட்டு போனவர் பதினைந்து நாள் கழித்துத்தான் வந்தார். வந்தவர் கதவைச் சாத்திவிட்டு எங்களுடைய காலில் விழுந்து ''கோபத்தில் ஒரு நாள் ஜானகியை அடித்தேன். செத்துட்டா. என்னை மன்னிச்சிடுங்க. தயவு செய்து பொலிஸில் சொல்ல வேண்டாம்'' என்று குமுதவல்லியும் உதயகுமாரும் கெஞ்சினார்கள்.

இதைத் தொடர்ந்து திருவான்மியூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன். மறுநாள் வரச்சொன்னார்கள். திடீரென ''உன் தங்கச்சி இலங்கைக்கே போயிட்டாள்'' என்றனர். கதறி அழுது இலங்கைத் தூதரகத்தில் புகார் செய்தேன். அவர்கள் சி.பி.சிஐடிக்குப் போகும்படி சொன்னார்கள். பின்பு அங்கு புகார் செய்தோம். பிறகு தான் உதயகுமாரையும் குமுதவல்லியையும் கைது செய்தார்கள்.

இதற்குப் பின்புதான் ஆறு மாதத்திற்கு முன்னால் பஸ் நிலையத்தில் சூட்கேஸில் கிடந்த பிணத்தின் போட்டோவைப் பத்திரிகையில் பார்த்தேன். நான் தைத்துக் கொடுத்தசுடிதாரில் தான் ஜானகி செத்துக்கிடந்தா. இப்ப இந்தக் குழந்தைகளை நினைத்தால் தான் கவலையாக இருக்கிறதெனக் கூறிக் கொண்டு மீண்டும் சரஸ்வதி மீண்டும் அழ ஆரம்பித்துவிட்டார்.

> ''என்னுடைய கணவருடைய தம்பி தான் உதயகுமார். என தங்கச்சியும் அவரும் காதலித்தது தெரியவந்ததும் இருவருக்கும் திருமணம் செய்து வைத்தோம். இரண்டு குழந்தைகள் பிறந்தன. நால்வரும் சந்தோஷமாக தான் இருந்தார்கள்,'' என்று அந்தக் கொலை பற்றி சரஸ்வதி சொன்னார். உதயகுமாரின் அக்காவான குமுதவல்லி வந்த பிறகுதான் சந்தோஷமாக இருந்த குடும்பத்தில் புயல் வீசத் தொடங்கியது. குமுதவல்லியின் கணவர் பல வருடமாக லண்டனில் இருக்கிறார். அதனால் தம்பியின் குடும்பத்தினருடனேயே குமுதவல்லியைத் தங்கியிருக்கச் சொல்லியிருக்கிறார். இதற்கு ஜானகி சம்மதித்தார்

# பிரபாவின் கார்ச்சாரதி பிணையில் விடுதலை

பாரதூரமான குற்றச்சாட்டுக்களுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிகளின் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் கார்ச் சாரதி வேலன் செல்லத்துரை(வயது 64 ) புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வவுனியாவிற்கு சென்றிருந்த சமயம் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமச்சந்திரன் இவரை பிணையில் விடுவித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 64 வயதான வேலன் செல்லதுரை சட்டத்தரணி என். சிறீகாந்தாவின் வாதத்தின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட இவர் 2000.6.6. ஆம் திகதி கொழும்பில் வைத்து கொட்டாஞ்சேனை பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இவரை மூன்று மாதம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்த பொலிசார் பின்னர் நீதிவானிடம் ஆஜர்படுத்தி பூஸா முகாமில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவர் மீதான குற்றச் சாட்டாக 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1ம் திகதிக்கும் 1995 டிசம்பர் 31ம் திகதிக்கும் இடையில் யாழ். புதுக்குடியிருப்புப் பகுதியில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக-ஆயுதம் ஏந்திப் போராடும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பருக்கு வாகனச் சாரதியாகச் செயற்பட்டமை.புலிகளின் நடவடிக்கைகளில் கலந்து கொண்டமை போன்ற குற்றச்சாட்டு கள் சுமத்தப்பட்டிருந்தன.

வவுனியா மேல் நீதிமன்றம் இவர் மீதான இவ்வழக்கை விசாரித்தது. வெள்ளி யன்று இவ்வழக்கு மீண்டும் எடுக்கப்பட்ட போது இவரை பிணையில் விடுவிக்கக் கோரி சட்டத்தரணி சிறீகாந்தா வாதிட்டார்.

கடந்த காலத்தில் இக் குற்றச்சாட்டு பாரதூரமானதாக இருக்கலாம். ஆனால் இப் போது நிலைமை மாறிவிட்டது. இலங்கை யின் பிரதமர் தங்களது நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட வவுனியாவுக்கு வருகை தந்துள் ளார். புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் அவர் கைச்சாத்திட்டுள்ளார்.

இது புதிய நிலைமையாகும். அத் துடன் இவர் ஒரு நீரிழிவு நோயாளி என்பதுடன் இவருக்கு எதிராக குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் மட்டுமே ஆதாரமாகவும் உள்ளது.

சட்டமா அதிபரின் அறிவிப்பின்படி ப.த.ச.வின் 5ம் பிரிவு வழக்குகள் வாபஸ் பொறப்படுவதுடன் 2ம் பிரிவில் வழக்கு வாபஸ் பொறக்கூடிய தகுதி உள்ளதெனக் கருதும் பட்சத்தில் அதனை வாபஸ் பெறுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில் இவரை நீதிமன்றம் பிணையில் விட வேண்டும் என்று வாதிட்டார். அரச தரப்பில் ஆஜரான சட்டத் தரணி சிவபாதம் இது விடயத்தில் நீதிபதியின் முடிவுக்கு இணங்குவதாக தெரிவித்தார். இதனையடுத்து எதிரியான வேலன் செல்லத்துரையை ஆட்பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



# இலக்கியப் பக்கம்

## புதிய நூல்
## அந்த ஏழு நாட்கள்

அஷ்ரப்பின் அந்த ஏழு நாட்கள் மில்லேனியம் பதிப்பகத்தின் முதலாவது நூலாக வெளிவந்திருக்கிறது.

அஷ்ரப்பின் அந்த ஏழு நாட்கள் அனிஸ்டஸ் ஜெயராஜாவின் படைப்பு. கிழக்குமாகாணத்தின் படைப்பாளியான இவர் ஏற்கனவே சிலசிறந்த நூல்களை தந்தவர். சேகுவேரா (1979). மரணபூமி (1979). போரும் மனிதனும் (1985). அப்பா (1993). நாக்கியா (1994). ஜனாதிபதியே ஜனநாயகம் (1994). மலையக மக்களுக்கு அடையாளஅட்டை(1998). ஆகிய நூல்கள் இவருடைய எழுதுகோல் ஏற்கனவே இலங்கை எழுத்துலகிற்கு வழங்கி விட்டது.

கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம் என்ற இவருடைய நூல் 1998இல் வெளிவந்த போது இவரை பலரும் கவனிக்கத் தொடங்கினர். மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் வாழ்க்கைச் சரிதமாக அந்நூல் அமைந்ததே அதற்குக் காரணம்.

கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம் மர்ஹூம் அஷ்ரப்பின் வாழ்க்கையின் சில பகுதிகளை நம் கண்களின்முன் நிறுத்தியது. அந்த ஏழு நாட்கள் என்ற இந்த புதிய படைப்பு அவரின் வாழ்க்கையில் மறக்க முடியாததாகப் பதிந்துவிட்ட ஒரு விடயத்தை நம் கண்முன் நிறுத்தி நெஞ்சில் பதிய வைக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகரான அஷ்ரப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்தது நாட்டின் அரசியலில் ஒரு மாபெரும் திருப்பமாகும். அதற்கான சூழல் சந்தர்ப்பம். நிகழ்வு என்பன இந்நாட்டின் சமகால வரலாற்றின்பதிவுகளாகும். அந்த ஏழு நாட்கள் அந்த முறையில் கதையோட்ட நிகழ்வு போல் பதிவு செய்துள்ளது.

## கவிதையில் சமாதானப் பேரவா

ஏம்.ஏ.நி:.மத் எருக்கலாம்பிட்டியைச் சேர்ந்தவர். சுமார் ஏழு வருடங்களுக்கு முன் ``பொன்விளையும் பூமி`` என்ற தலைப்பில் ஒருகவிதைத் தொகுதியை வெளியிட்டார். இவர் சிறுகதை கவிதை வானொலி நாடகம் போன்ற ஆகக் எழுத்துக்களையும் தந்திருக்கிறார்.

`எரிகொள்ளி`` (சிறுகதைத் தொகுப்பு)`வா ஊருக்குப் போவோம்` (கவிதைத் தொகுதி) போன்ற நூல்களைத் தந்துள்ளார். இன்னும் ஓிரு நூல்களைத் தந்துள்ளார். தமிழ் நாட்டு ஆனந்த விகடன் சஞ்சிகையில் இவர் எழுதிய கதையொன்று பரவலான முறையில் வாசகர் கவனத்தைப் பெற்றது.

சங்கமம். நவமணி. இடி. ஆகிய பத்திரிகைகளில் பணிபுரிந்திருக்கும் எம்.ஏ. நி:.மத். `நவமணி வாரப்பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக பணிபுரிந்தார்.

`பொன் விளைபூமி என்ற தொகுதியிலே 29 தேசிய ஒற்றுமைக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

ஐக்கியம் பற்றி அவர் கூறுவது:

ஐக்கியம் ஒட்டாத ஒட்டையையும் ஓர்மையுடன் ஒட்டிவிடும்

என்றும் எட்டாத தொலைவினுக்கும்

யாவரும் சமமென்றாகிவிடின் இங்கு யாவரின் மனமொன்றாகிவிடும். யாவரின் மனமொன்றாகிவிடின் இங்கு யாவரின் மதமொன்றாகிவிடும். என்றும் கூறுகிறார்.

கவிஞரின் வேணவா இது:

சத்தியம் வெல்லும் சாந்தியும் வெல்லும் இத்தரையிலே எம் ஒற்றுமை வெல்லும் புத்தியும் வெல்லும் புரிந்துணர்வும் வெல்லும் பூமியிலேயன்புப் புனிதமே வெல்லும் சமரசம் தானினிமேற் பங்கமில்லை என்று கூறுகிறார்.

நானிலஞ் செழிக்க நற்பணிபுரிவோம் என்ற கவிதையில்:

ஆயுதம் தூக்கி ஆர்ப்பரித்தெழுந்து அழிவினைத் தேடல் அறிவிலி செயலாம் ஆய்ந்திட வேண்டும் அறிஞர் கூடி அன்பெனும் தேசம் அமைந்திட என்று கூறுகிறார்.

போரினால் விளைவது துன்பம்
இதைப் புரிந்தவர் வாழ்வினிலின்பம்
சீரினை யடைவதெம் கடமை நாம்
சிந்தனை செய்வதெம் கடமை
என்றும் கூறுகிறார்.

## யார் கலர்ட் மான்?

ஒரு கறுப்பு நிறத்தவன்
வெள்ளையனைப் பாத்துச் சொல்கிறான்.
நான் பிறக்கும் போது கறுப்பு..
வெயிலில் போகும் போது கறுப்பு..
பயந்து நடுங்கும் போது கறுப்பு..
வளர்ந்து பெரியவனானாலும் கறுப்பு..
குளிரிலும் கறுப்பு. நோயிலும் கறுப்பு..
ஏன் செத்துப் போனால் கூடக் கறுப்புத்தான்..
ஆனால் உன்னைப் பார்
நீ பிறக்கையில் குங்கும நிறத்தில்
பிறக்கிறாய்..
வெயிலில் போனால்
சிவப்பாகி விடுகிறாய்
பயந்தால்
மஞ்சலாகப் போய்விடுகிறாய்
வளரும் போது
வெள்ளையாகிவிடுகிறாய்
குளிரில் நீலம்பாரித்துவிடுகிறது
உனக்கு
நோயில் பச்சையாகிவிடுகிறாய்..
கடைசியில் செத்துப் போகையிலும்
சாம்பல்
நிறத்தவனாகிவிடுகிறாய்..
இப்போது சொல்லு
யார் கலர்ட் மனிதன்!
நீயா நானா!

## இலக்கியம்:
## நூல் அறிமுகம் :
## ஆச்சி (கவிதைத் தொகுப்பு)

எழுதியவர்: சோ. தேவராஜா
வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை

சிறந்த நாடக நடிகராகவும் பேச்சாளராகவும் நாடகத் தயாரிப்பாளராகவும் இயக்குநராகவும் விளங்கும் சோ. தேவராஜாவின் கவிதைத் தொகுப்பு `ஆச்சி`

தேசிய கலை இலக்கியப் பேரவையில் பல முக்கிய பொறுப்புக்களை வகித்துவரும் சோ.தேவராஜா மார்க்ஸிய வழி நின்று சிந்தித்து எழுதுபவர். இக்கவிதைத் தொகுப்பும் அவரது சிந்தனைக்கு எடுத்துக்காகட்டாக விளங்குகிறது.

இவை 1980களின் நடுப்பகுதியில் வடக்கில் நிலவிய பயங்கர அரசியல் சூழலின் உணர்வுப் பாதிப்புக்களை விளக்குபவை.

இவை அவரது ``தில்லை நடனம்`` கவிதையில் வரும் வரிகள்.

``வெடிகள் சிதறி வானத்தில் புகைக்கும்
காகங்கள் கதறி
அந்தரத்தில் பறக்கும்.
கடைகள் பூட்டி
காரியங்கள் முடிக்கும்.
படைகள் றோட்டில்
மொய்த்துப் பிடிக்கும்.
மானுடர் நின்ற இடம்
மயானமாய் மாறும்.
அனைத்தும் மூடும் அநியாயம் ஆடும்.
காகம் ஒன்று
வெடிபட்டுத் தொங்கும்....
``இன்னும் சாகவில்லை`` என்ற கவிதையில்.
``அகதி என்று சொல்லும்
அர்த்தத்தை மாற்ற
வீட்டுக்கு கிளம்பு
வினைகள் ஆற்ற மகனே``.

## உருவகம்:
## இயக்கம்
### -சாந்தன்

அங்கும் இங்குமாக பாறைகளில் மோதி
விழுந்து எழுந்து இடைவிடாது
ஓடிக்கொண்டிருக்கும் ஆற்று நீரைப் பார்க்க
பரிதாபமாக இருந்தது குளத்து நீருக்கு.
தன்னைப் போன்று நிலையாக இருந்து
சுகமான வாழ்வை அனுபவிக்கத் தெரியாத
ஆற்று நீருக்கு யார்தான் புத்திமதி கூறப்
போகிறார்களோ என நினைத்துக் கொண்டது.
சோவென மாரி பொழிந்தது.
பெருக்கெடுத்து ஓடியது ஆற்று நீர். வெள்ளம்
புகுந்து குளத்து நீர் நிரம்பி வழிந்தது.
எதிர்பாராமல் ஆற்று நீரும். குளத்து நீரும்
ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன.
குளத்து நீர் தன் நீண்டநாள் அவதானிப்பை
வினாவாகத் தொடுத்து நின்றது.
``ஓரிடத்தில் என்னைப்போல ஆற அமர
இருக்காமல் உன் வாழ்நாள் முழுவதும்
ஓடிக்கொண்டிருப்பதால் யாருக்கு என்ன பயன்
உண்டாகப் போகின்றது?``
குளத்து நீரின் குறுகிய மனப்பாங்கை
நினைத்து தனக்குள் நொந்து கொண்ட ஆற்று
நீர் சொன்னது.
``நண்பா! நீ ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே
தேங்கிக் கிடப்பதனால். உன் கரையை
அண்டியிருக்கும் மரங்களுக்கும் சிறிய தொகை
மனிதர்களுக்கும் மட்டுமே உன்னால்
பயன்படக் கூடியவாறு இருக்கின்றது.
நானோ என்னை வருத்தி. காடு
மலையெல்லாம் தாண்டி வருவதனால். நான்
போகுமிடமெல்லாம் நிலம் பூரித்துப்
போகின்றது. மரங்களும். செடிகளும்.
கொடிகளும் செழித்துதோங்கி வளர்கின்றன.
பெருந்தொகையான மிருகங்களும்
எண்ணிலடங்காத மனிதர்களும் தம்
தேவைகளை நிறைவு செய்கின்றனர். என்
வாழ்வோ முடிவுறாமல் நீள்கிறது``
குளத்து நீர் தன் அறியாமையை எண்ணி
வருந்திக் கொண்டது.
- எரிமலையிலிருந்து எடுத்தது

## அகிம்சைப் போரை ஆயுதத்தால் அடக்க முற்பட்டதாலேயே அது ஆயுதப் போராக மாறியது

-வவுனியா மாவட்ட பொங்கு தமிழ் செயற்பாட்டுக் குழு துண்டுப்பிரசுரம்

அழுவதால் ஆவது ஒன்றுமில்லை. விழுதுகளாய் விருட்சத்திற்கு உரம் கொடுப்போம். எம் உள்ளத்து உணர்வுகளை உலகிற்கு உரைக்க உணர்வுடன் அலையென எழுந்து பொங்கு தமிழ் நிகழ்வில் பொங்கிட வாரீர் என தமிழ் பேசும் மக்களுக்கு வவுனியா மாவட்ட பொங்குதமிழ் செயற்பாட்டுக் குழு துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமாதான நடவடிக்கைகள் முனைப்பு பெற்றுளள் இக் காலகட்டத்தில் இச் சமாதானம் நிரந்தரமாக வேண்டும் என்பது எம் எல்லோருடைய பேரவாவாகும். கடந்த காலத்தை நோக்குகையில் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததாக கூறப்படும் 1948 ஆம் ஆண்டிலிருந்து எமது சுதந்திரம் படிப்படியாக பறிக்கப்பட்டு அடக்குமுறை திணிக்கப்பட்டு அவல வாழ்வே பேரினவாதத்தால் தமிழர்களாகிய எமக்கு வழங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் அடக்குமுறையை அகிம்சையாலேயே நாம் எதிர்த்தோம். அகிம்சைப் போரை ஆயுதத்தால் அடக்க முற்பட்டதால் எமது அகிம்சைப் போர் ஆயுதப் போராக வடிவம் பெற்றது தவிர்க்க முடியாததாகியது.

ஆயுதப் போர் தொடர்ந்தபோது ஆயுதப்பலத்தாலோ ஆட்பலத்தாலோ எமது ஆன்மபலத்தை அசைக்க முடியாது என்று கண்ட பேரினவாதம் முழுவீச்சுடன் விடுதலைப் போர் முனைப்படையும் காலங்களில் போரை மழுங்கடிக்கவும் மக்களின் விழிப்புணர்வை திசை திருப்பவும் அந்த கால அவகாசத்தைப் பயன்படுத்தி தமது ஆயுத ஆட்பலத்தை பெருக்கிக் கொள்ளவும் சமாதானம் என்ற போர்வையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டு தமது நாசகார நோக்கம் நிறைவேறியவுடன் அவை கிழித்தெறியப்பட்டதும் எமது கறைபடிந்த வரலாற்றின் கசப்பான உண்மைகள். சமாதான தேவதையாய் வந்த அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் இந்த அவலத்தை தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் அனுபவித்து அந்த வடு ஆறும் முன்னர் நடந்த தேர்தலில் மக்கள் சமாதானத்தை நோக்கி வாக்களித்ததால் ஆட்சிக்கு வந்த புதிய அரசு அதேபோன்ற சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. இதேவேளை சிங்கள இராணுவத்தினர் பல பின்னடைவுகளை சந்தித்து பலவீனப்பட்டு உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது எமது விடுதலைப் போர் முனைப்படைந்துள்ளது என்பதும் மறுக்க முடியாது. எனவே முன்னைய காலங்களைப் போல் இக்கால அவகாசத்தை பயன்படுத்தி சிங்கள இராணுவத்தினர் தம்மைப் பலப்படுத்தி மீண்டும் கொடிய யுத்தத்திற்கு இட்டுச் செல்வார்களோ! என்கிற ஐயம் எம்மத்தியில் எழுவது இயல்பே.

எனவே தமிழர்களாகிய நாம் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். அதேவேளை இதய சுத்தியுடன் இனத்துவேசம் எதுவுமின்றி முன் வைக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு தலை சாய்ப்பதுடன் எமது உரிமைகளையும் அபிலாஷைகளையும் நிரந்தர சமாதானத்தையும் பெற்றிட ஒன்று கூடி உரத்து குரல் கொடுப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



# குழந்தைக்கு மட்டுமன்றி தாய்க்கும் சிறந்த தாய்ப்பால்

## தாய்ப்பால் கொடுப்பது தாய்க்கு நல்லது

தாய்ப்பால் கொடுப்பது குழந்தைக்கு மட்டுமன்றி தாய்க்கும் பல வழிகளில் உதவுகின்றது. ஒவ்வொருமுறை தாய்ப்பால் கொடுக்கும் போதும் அந்தத் தாயின் உடலில் இருந்து ஆக்ஸிடாகின் என்ற ஹார்மோன் வெளியாகிறது. இது பிரசவத்திற்குப் பிறகான ரத்தப் போக்கை கட்டுப்படுத்தி கர்ப்பப்பை சீக்கிரமே அதன் பழைய நிலைக்குத் திருப்ப உதவுகின்றது. தவிர, டென்ஷனுக்குக் காரணமான ஹார்மோன்களின் அளவைக் கட்டுப்படுத்தி, தாயை அமைதியுடன் இருக்க வைக்கின்றது.

தாய்ப்பால் ஊட்டும் பெண்களின் உடல் உருக்குலைந்து போவதாக இதுவரை சொல்லப்பட்டு வந்தது. இப்போது அது தவறு என நிரூபிக்கப்பட்டு உள்ளது. தாய்ப்பால் ஊட்டும் பெண்களுக்கு பிரசவத்திற்குப் பின்பு இடுப்பிலும் வயிற்றிலும் சதை போடுவது இல்லை. தாய்ப்பால் கொடுப்பதால் உடல் மென்மையாகின்றது.

தாய்ப்பால் ஊட்டும் பெண்களுக்கு அதுவே சிறந்த கருத்தடை முறை. அவர்கள் மறுபடி கருத்தரிக்கும் வாய்ப்பும் குறைவு.

மெனோபாஸ் காலத்தில் பெரும்பாலான பெண்களுக்கு மார்பகப் புற்று நோய் ஏற்படுகிறது. தாய்ப்பால் ஊட்டும் பெண்களுக்கு இந்த ஆபத்து இல்லை. அதே மாதிரி தாய்ப்பால் ஊட்டும் பெண்களுக்கு கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பும் குறைவு.

தாயின் உடலிலுள்ள கல்சியமும், இரும்பும் பாலாக வெளியேறி விடுவதால், அவளின் உடல் எலும்புகள் பலமிழக்கும். ஆனால் தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்திய பிறகு எலும்புகளின் பலம் தாய்ப்பால் கொடுக்காத பெண்களின் எலும்புகளை விட அதிக பலமடைகின்றன. அது மட்டுமன்றி இடுப்பு முதுகு போன்ற இடங்களில் பிரச்சினைகள் வரும் வாய்ப்பு தாய்ப்பால் கொடுப்பதால் தவிர்க்கப்படுகின்றது.

## முகம் பொலிவுற

முகம் பொலிவுபெற இனிமையாக பேசுங்கள்

சாதாரணமாக நடப்பதை விட சற்று மெதுவாக நடக்க முயலுங்கள்.

மகிழ்ச்சியான மனநிறைவான உணர்ச்சிகளை தினமும் பத்து நிமிடங்கள் மனதிலே கொண்டு வாருங்கள்.

சாதாரணமாகப் பேசுவதைவிட குறைவாகப் பேசுங்கள். இனிமையாகப் பேசுங்கள்.

உங்களுக்காகத் தினமும் 30 நிமிடங்கள் ஒதுக்குங்கள். அந்த முப்பது நிமிடங்களுக்குள் மற்றவர்களை நுழைய விடாதீர்கள்.

சாப்பிட்ட உடனே எழுந்து ஓடாதீர்கள். அமர்ந்து பின்னர் எழுந்து செல்லுங்கள்.

பேருந்திலே போகும் போதும் ஒரு கூட்டத்தில் பங்கேற்கும் போதும் மற்ற நேரங்களிலும் மக்களின் முகங்களைப் பாருங்கள்.

நம்நாடு தொடர்புகளுக்கு அழையுங்கள்
Tel/Fax (416) 429-6455

# குடும்பம்

குடும்பம் என்பது
பல்கலைக்கழகம்.
கோவிலும் கூட
ஒன்றேயாம்....

இடுக்கண் வருங்கால்
என்றாலும்......
இன்பம் உளத்தே
என்றாலும்.....
ஒன்றாய் இருப்பதே
குடும்பமாம்
கொண்டே வாழ்வோம் நன்றாக
-நல்லைச்சாமி

பிறர்மேல் உள்ள அன்பை வார்த்தையில் வெளிப்படுத்துங்கள்.

உங்கள் கோபத்திற்கு உரிய காரணங்களைக் கண்டுகொள்ள இன்று முயலுங்கள்.

அழகான மரம், மலர் போன்ற இயற்கை காட்சிகளை நின்று ரசியுங்கள்.

உங்கள் முகம் கூட மலர்ச்சியாக இருக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பிறரைப் பார்க்கும் போது புன்முறுவல் பூத்துப் பழகுங்கள்.

வேகமாகப் போகிறவன் முகம் கவர்ச்சியாகவோ அருளானதாகவோ இருக்க முடியா என்பதை உணருங்கள்.

### அலுவலகத்தில் நட்புறவைப் பேண வழிகள்

வேலை பார்க்கும் இடத்தில் பொதுவான நட்புறவு அவசியமானதொன்று அதைப் பேண:

1. சண்டை சச்சரவுகளை அவை எற்பட்டவுடன் தீர்த்து வையுங்கள்.
2. மற்றவரின் செயல்களுக்கான காரணத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.
3. நட்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு உங்கள் நல்ல பெயர் பயன்படும்.
4. வேலையில் ஆர்வம்.
5. மற்றவரைப் பற்றி புறம் பேசுதல் கூடாது.
6.பேச்சுவார்த்தைகள் நிறத்தாமல் தொடரவேண்டும்.

## பாட்டி வைத்தியம்

### இளநரை வராமல் தடுக்க

உடல் சூட்டினாலும் பித்தம் காரணமாகவும் பல பேருக்கு தலைமுடி நரைக்கும் இதற்கு தலைமுடியை குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். வாரத்தில் மூன்று நாள் நல்லெண்ணெய் தேய்த்து, பின் கஞ்சியும் சீயக்காய்த் தூளும் சேர்த்து தேய்த்து பச்சைத் தண்ணீரில் குளிக்கவும்.

8 பிடி மருதோன்றி இலை, கடுக்காய் தோல் சுமாராகப் பொடித்து சிறிது பொன்னாங்கண்ணிக் கீரை 6பிடி, செம்பருத்திப் பூக்கள் 25, இவற்றை சுமாராக ஆட்டு உரலில் அரைத்து, அதை 3 லீட்டர் தேங்காய் எண்ணெயில் நன்றாகக் காய்ச்சவும் சூடு ஆறிய பிறகு சல்லடையில் வடிகட்டி அந்த எண்ணெயை ஒரு பாட்டிலில் எடுத்துக் கொள்ளவும் இதை தினமும் தலையில் அழுத்தி தேய்த்து விடவும் அதிகம் வேண்டாம். இப்படிச்செய்தால் இளநரை வராமல் தடுப்பதுடன் முடி அடர்த்தியாகவும் கருமையாகவும் வளரும். தவிர காபி, டீ, போன்ற பித்தமான பானங்களை அதிகம் அருந்த வேண்டாம். இரவு படுக்கும் முன் தலை உச்சியில் ஒரு ஸ்பூன் விளக்கெண்ணெயை அழுத்தித் தேய்த்துவிடவும். இப்படிச் செய்தால் தலையில் சூடு குறையும். தலையுமுடியும் பூப்போல மிருதுவாக இருக்கும்.

## அடுப்படி அட்வைஸ்

தக்காளி அப்பம்

2கப் பச்சரிசி, அரை கப் உளுந்தை ரவையாக உடைக்கவும், கால் கிலோ தக்காளியை வெந்நீரில்போட்டு தோல் நீக்கவும். 1 வெங்காயம், அரை கட்டு கொத்தமல்லி, 8 பச்சை மிளகாயை பொடியாக நறுக்கவும், உப்பு நீர் சேர்த்து கரைத்து 5 மணி நேரம் ஊறியபின் அப்பங்கள் செய்யவும்.

தானிய அப்பம்

கொள்ளு, கட்டாணி, பச்சைப் பயறு, காராமணி தலா அரைக் கப் எடுத்து 6 மணி நேரம் ஊற வைத்து கறிவேப்பிலை, 1 இஞ்சி துண்டு, 6-8 பச்சை மிளகாய் சேர்த்து சற்று கரகரப்பாக அரைக்கவும். இத்துடன் 2 மணி நேரம் ஊற வைத்து அப்பம் செய்ய அபாரருசி!

## தக்காளி ஸ்பெஷல் ப்ரைட் ரைஸ்

தேவையானவை:

வடித்து ஆற வைத்த சாதம்- கால் கிலோ
பழுத்த தக்காளி-6 வெங்காயம்-2
பச்சை மிளகாய்-10
இஞ்சி, பூண்டு அரைத்த விழுது-1 ஸ்பூன்
பட்டை, லவங்கம்-4, 4 சோம்பு
பொடித்தது-அரை ஸ்பூன்
ஏலக்காய்-1 அன்னாசி மொக்கு-1
பிரியாணி இலை-சிறிது ஆயில் -100மில்லி.
உப்பு- தேவையானது.

செய்முறை:

அடுப்பில் வாணலி வைத்து ஆயில் விடவும். காய்ந்த பின் பட்டை, லவ்கம், ஏலக்காய், அன்னாசி மொக்கு சேர்த்து பொரிந்த பின் சோம்பு, இஞ்சி, பூண்டு விழுது, பிரியாணி இலை சேர்த்து கிளறி, தக்காளி, வெங்காயத்தை மிளகாயை நீளவாக்கில் நறுக்கி சேர்த்து வதக்கவும்.

நன்கு வதங்கிய பின் சாத்தை உடன் உப்புச் சேர்த்து கிளறி ஸிம்மில் வைக்கவும். சாதம் நன்கு சூடேறிய பின், புதினா, கொத்தமல்லித் தழை சிறிது சேர்த்து இறக்கவும். திடீர் விருந்தினர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்ற சுவையான உணவு.

நம்நாட்டில் விளம்பரம் செய்யுங்கள்...

# இவ்வாரம் ஒலிம்பைக் கலக்கிய ஸ்கேற்றிங் தீர்ப்பு

ஒலிம்பிக்கை கலக்கிய ஸ்கேட்டிங் தீர்ப்பு!

அமெரிக்காவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியொன்றில் அளிக்கப்பட்ட தீர்ப்பொன்று பெரும் சர்ச்சைக்கு வழிவகுத்தது.

ஃபிகர் ஸ்கேட்டிங் போட்டியொன்றில் ரஷ்யாவின் யெலினா பேரேஸ்னயா, அன்டன் சிகாருலிட்ஸ் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.

ஆனால் கனடாவைச் சேர்ந்த ஜெமிசேல், டேவிட் பெலேட்டியா ஆகியோரே அதிக திறமைகாட்டினர். எனவே அவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே என்பது பார்வையாளர்கள் ஊடகவியலாளர்களின் அபிப்பிராயம்.

இப் போட்டியில் தங்கப் பதக்கத்திற்காக நடுவர்களிடையே வாக்கெடுப்பு நடந்தது. 5-4 விகிதத்தில் ரஷ்ய ஜோடிக்கு ஆதரவாக வாக்களித்தனர் நடுவர்கள். இத் தீர்ப்பு பார்வையாளர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது. கனடாவின் தங்கப் பதக்கம் திருடப்பட்டுள்ளது என்று கனேடியப் பத்திரிகைகள் கூறின.

இந் நிலையில் இவ்விவகாரம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு சர்வதேச ஸ்கேட்டிங் யூனியனை சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் ஜக் ரோஜ் பணித்தார்.

விசாரணைகளின் போது பிரேஞ் நடுவரான மேரி ரெனி லீ குங்னே பாரபட்சமாக தீர்ப்பளித்ததாக கண்டறியப்பட்டது.

ஆனால் ரஷ்ய ஜோடியின் தங்கப் பதக்கம் மீளப்பெறப்படவில்லை. மாறாக கனேடிய ஜோடியின் வெள்ளிப் பதக்கம் மீளப்பெறப்பட்டு அவர்களுக்கு விசேட தங்கப் பதக்கங்கள் வழங்கப்படுமென சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஜக் ரோஜ் அறிவித்தார்.

ரஷ்ய போட்டியாளர்கள் இத் தீர்ப்பை முழுமனதாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் இரண்டாவது பதக்க அணிவிப்பு வைபவத்திலும் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

போட்டி நடைபெற்று 6 நாட்களின் பின் இவ்வைபவம் நடைபெற்றது. இவ் வைபவத்தின் போது முதலில் ரஷ்யாவின் தேசிய கீதமே இசைக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# பல்சுவைப் பக்கம்

## ராகுல் காந்தியோடு அதிகாரிகள் சண்டை

சோனியாவுக்கு மகனாகப் பிறந்ததால் ராஜீவ் காந்தியின் மகன் ராகுல் தாயின் சாடையைக் கொண்டுள்ளார். போன வாரம் ராகுல் காந்தி அஜந்தா குகைக்கோயிலுக்குப் போனார். அவருடன் அவரது ஐந்து வெளிநாட்டு நண்பர்கள் சென்றனர்.

அஜந்தா குகைக்கோயிலை வெளிநாட்டினர் பார்வையிட வேண்டுமென்றால் நுழைவுக் கட்டணம் 500ரூபாய் கட்டவேண்டும். ராகுல் தவிர மற்றவர்கள் நுழைவுச் சீட்டு வாங்கினர். ராகுல் வாங்கவில்லை. அஜந்தா குகைக் கோயில் இந்திய அகழ்வாராய்ச்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தத்துறை அதிகாரிகள் ராகுலிடம் நுழைவுச் சீட்டைக் கேட்டனர். ராகுல் வாங்கவில்லை என்று கூறியதும் அவரிடம் காரசாரமாக விவாதிக்க ஆரம்பித்துவிட்டனர் அதிகாரிகள். ராகுலோ தான் ஒரு இந்தியப் பிரஜைதான் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார் அவர்கள் கேட்கவே இல்லை.

கடைசியாகத் தன் பூர்வீகத்தைச் சொன்னார் ராகுல். அவ்வளவுதான் விஷயத்தை கேள்விப்பட்ட அனைத்து அதிகாரிகளின் முகமும் வெளிறிப்போய்விட்டது. பிறகென்ன? ராஜமரியாதைதான்!

# கேரளத்தில் கோழி ஊழல்

## மிகச்சிறிய துப்பாக்கி

தமிழகத்திலிருந்து கொண்டு வரப்படும் கோழிகளுக்கு விதிக்கப்படும் வரியை கேரள அரசு ரத்துச் செய்துள்ளது. இதற்காக அமைச்சர் சங்கர நாராயணன் தமிழக கோழி வியாபாரிகளிடம் இருந்து பெருந் தொகையை இலஞ்சமாக பெற்றுள்ளதாக கேரள இடதுசாரிக் கட்சிகள் பிரசாரம் செய்துவருகின்றன.இந்த கோழி ஊழலை கோழி கொலா என்று சுருக்கமாக குறிப்பிடுகின்றனர். இந்த கோழி ஊழல் கேராளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### கோழி ஊழலைக் கண்டித்து நவீன ஆர்ப்பாட்டம்

கேரள மாநிலத்தில் அமைச்சரின் கோழி ஊழலைக் கண்டித்து தலைமைச் செயலகம் முன்பு நெஷனலிஸ்ட் காங்கிரஸ் கட்சியினர் கோழி துலாபாரம் நடத்தி நூதன போராட்டம் செய்தனர்.

திருவானந்தபுரம் தலைமைச் செயலகத்திற்கு முன்பு திடீர் என துலாபாரம் நடைபெற்றது. கோயில்களில் மட்டுமே துலாபாரத்தைக் கண்டு வந்த மக்கள் நடு ரோட்டில் வெட்ட வெளியில் துலாபாரம் நடப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.

துலாபாராத்தில் ஆளின் எடைக்குச் சமமாக எடையுள்ள வாழைப்பழம் அல்லது நகைகள் தானியங்கள்மட்டுமே காணிக்கையாகக் கொடுப்பர். ஆனால் இந்த நடு ரோட்டு துலாபாரத்தில் கோழிகளை கொடுத்தனர் கேரள மாநில நிதியமைச்சர் சங்கரநாராயணன் கோழி ஊழல் செய்ததான எதிர்க்கட்சிகள் புகார் கூறி வருகின்றனர்.

### கண் இழந்த சிங்கம்

காபூல் மிருகக் காட்சி சாலையில் உள்ள மரியன் என்ற சிங்கம் பார்வையாளர்களை அதிகம் கவர்ந்து வந்தது. 1990ஆம் ஆண்டு அந்த சிங்கத்தின் கூண்டில் குதித்த ஒரு ஆப்கானிஸ்தான் தீவிரவாதியை அது அடித்துக் கொன்றுவிட்டது.

இதனால் ஆத்திரமடைந்த தீவிரவாதியின் தம்பி மறுநாள் துப்பாக்கியால் சுட்டதில் சிங்கத்தின் ஒரு கண் போய்விட்டது.

### உலகின் மிகச் சிறிய துப்பாக்கி!

இங்கிலாந்தைச் சேர்ந்த கிளெக் பன்னல் பிரபு ஒரு துப்பாக்கியை வைத்திருந்தார். உலகிலேயே மிகச் சிறிய துப்பாக்கி இது தான். போல் பொயின்ட் பேனாவின் அளவே உள்ள இந்தத் துப்பாக்கியை அப்பிரபு தன் படுக்கை அறையில் வைத்திருந்தார். எதற்கு எதிரிகளைக் கொல்லவா? இல்லை எலி, பல்லி, போன்ற சிறு உயிரினங்களைக் கொல்ல இந்தத் துப்பாக்கியால் குறி தவறாமல் சடுவதில் அவர் தீரர், வீரர்.

### குதிரையின் தூக்கம்

குதிரை நின்று கொண்டே தூங்கும். குதிரை மட்டுமில்லை யானை போன்ற மிருகங்களெல்லாம் நின்று கொண்டே தான் தூங்குகின்றன. இவற்றிற்குப் படுத்து தூங்குவதை விட நின்று கொண்டே தூங்குகின்றனர். இவற்றிற்குப் படுத்துத்கொண்டு தூங்குவதைவிட நின்று கோண்டு தூங்குவது தான் சௌகரியம்.

### முதலைக் கண்ணீர்

முதலைக் கண்ணீர் என்கிறோம். உண்மையில் முதலை கண்ணீர் வடிப்பது அழுவதால் அல்ல நாம் கொட்டாவி விடும்போது கண்ணில் நீர் வருவது போல முதலை வாயைத்திறக்கும் போது அதன் கண்களில் நீர் வடிகிறது. இதையே முதலைக் கண்ணீர் என்கிறோம்.

### மறதியை மறைக்க மாத்திரை

மறதி என்ற சொல்லையே இன்னும் சில நாட்களில் மனிதர்கள் மறந்து போய்விடுவார்கள்.அதற்கேற்ப நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும் மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. அமெரிக்காவில் தற்போது 12 மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இத்தகைய மாத்திரையை தயாரித்து உள்ளன. மூளைக்கான வயாகிரா என்று குறிப்பிடப்படும் இந்த மாத்திரை நடுத்தர வயதினர் மற்றும் முதியவரின் மறதியை போக்கி அவர்களது நினைவாற்றலை அதிகரிக்கச் செல்லுமாம். மேலும் கேட்ட நினைவுகளை நமது மூளையை விட்டு அகற்றவும் ஒரு மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். அந்த மாத்திரை இன்னும் 10 ஆண்டுகளில் விற்பனைக்கு வரும் என்று கூறப்படுகின்றது.

## சிரிப்பு: சந்தோசம்

''என் பையன் கல்யாணமே வேண்டாம்கிறான்''

''அவனாவது வாழ்க்கையில் சந்தேசமாக இருந்து விட்டு போகட்டும் விடு''

### சின்னவீடு

''தலைவர் ஏன் கோபமாய் இருக்காரு''

''சின்ன வீட்டுக்கு வரும் சீறும் சிங்கமே வருக!ன்னு யாரோ பேனர் எழுதியிருக்காங்காளாம்''

## இப்படியும் நடந்தது: இவ்வாரத் திகில்: ஏண்டி கவரிங் நகை அணிந்து வந்தாய்? என்று கேட்டு பெண்ணை வெட்டியது கும்பல்

கவரிங் நகை (கிலுட்டு நகை) அணிந்திருந்த பெண்ணின் கை துண்டிக்கப்பட்டது. கழுத்து வெட்டப்பட்டது. ஐந்து பேர் கொண்ட கொள்கைக் கும்பல் இந்த வெறிச்செயலில் ஈடுபட்டது.

தூத்துக்குடி மடத்தார் சாலை அருகே வசித்து வருபவர் அழகு ராஜா ஆசாரி. இவரது மனைவி லட்சுமி அம்மாள் (வயது 40) கடந்த ஞாயிறு இரவு சுமார் 9 மணியளவில் குடிநீர் குழாயில் குடத்தில் தண்ணீர் பிடித்துக்கொண்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அப்போது வழியிலுள்ள ரயில்வே பாதையையொட்டி நின்ற 5 பேர் கொண்ட கும்பல் லட்சுமி அம்மாறை வழி மறித்து அரிவாளை ஓங்கியபடி சத்தம் போட்டால் ஒரே போடு- நீ குளோஸ் என மிரட்டியபடி அவர் அணிந்திருந்த நகைகளை கழற்றித் தருமாறு கூறினர்.

லட்சுமி அம்மாள் பதறிப் போய் குடத்தை கீழே போட்டு கையில் கிடந்த வளையல்கள் கழுத்தில் கிடந்த சங்கிலி ஆகியவற்றை கழற்றி அந்த கொள்ளைக் கும்பலிடம் கொடுத்தார். அவற்றைப் பார்த்த அந்த கும்பல் இவை எல்லாம் கவரிங் நகைதானே? எனக் கேட்டுள்ளது ஆமாம் என லட்சுமி பதில் கூறினார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் தங்கநகை என நம்பினோம். ஏமாந்துவிட்டோம் ஏண்டி கவரிங் நகை அணிந்து வந்தாய்? என கேட்டபடி லட்சுமி அம்மாளின் இடது கை மணிக்கட்டில் இது தானே கவரிங் வளையல் போட்ட கை என்று கேட்டவாறே ஒருவன் அரிவாளால் வெட்டினானாம். இதனால் கை மணிக்கட்டுக்கு கீழே தண்டிக்கப்பட்ட நிலையில் தொங்கியது.

இன்னோருவன் கவரிங் நகை போட்ட கழுத்து இதுதானே? என கோபமாக கேட்டவாறே லட்சுமி அம்மாளின் கழுத்தில் வெட்டியுள்ளான். இதனால் கழுத்தில் படுகாயம் ஏற்பட்டது. வலி தாங்க முடியாமல் அய்யோ அம்மா என அலறிய ரத்தம் சொட்ட சொட்ட லட்சுமி அம்மாள் ஓடியதை அந்த கும்பல் வேடிக்கையாக பார்த்து வாய்விட்டுச் சிரித்ததாம். ஓடிய லட்சுமி அம்மாள் வழியிலுள்ள சுந்தரம் என்பவர் வீட்டுக்குள் ஓடிச் சென்று மயங்கி விழுந்தாராம் இதுபற்றிய தகவல் அறிந்ததும் சுந்தரம் தட்டார்மடம் போலிஸுக்கு தகவல் தெரிவித்தார். பொலிசார் விரைந்து வந்து லட்சுமி அம்மாளை தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

இது குறித்து வழக்கு பதிவு செய்த பொலிசார் கொள்ளைக் கும்பலை தேடி வருகிறார்கள்.

## நடுவானில் பெண்ணுக்கு நடந்த அனுபவம்

அமெரிக்கப் பெண்மணி ஒருவர் நோர்வே தலைநகரம் ஒஸ்லோவில் இருந்து அமெரிக்க நகரமான நியூயோர்க் செல்லும் விமானத்தில் ஏறினார். அது ஸகாண்டிநேவியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமானம்.

நடுவானில் கழிப்பறை சென்றார். இருக்கையில் அமர்ந்து தண்ணீர் பொழிவதற்கான விசையை அழுத்தினார். கழிப்பறையை தூய்மைப்படுத்தும் உயர் அழுத்த காற்று திடீரென வேலை செய்யத் தொடங்கியது. அந்த அதிக காற்றழுத்தம் பெண்மணியை டாய்லெட் இருக்கையுடன் சேர்த்து பிடித்துக் கொண்டது. எழுந்திருக்க முடியவில்லை.

பெண்மணி அபாய மணியை அடித்து விமான ஊழியர்களை வரவழைத்தார். அவர்கள் அரும்பாடுபட்டும் பெண்மணியை விடுவிக்க முடியவில்லை. விமானம் தரையிறங்கிய பிறகு தான் அவரை விடுவிக்க முடியும் என்று கூறிவிட்டனர்.

அதன் பின் சுமார் 2 மணி நேரம் கழிப்பறை இருக்கையில் அமர்ந்தபடியே அந்தப் பெண் பயணம் செய்ய வேண்டியதாயிற்று.

நியூயோர்க் வந்தபிறகுதான் அவருக்கு விடுதலை கிடைத்தது.

## விளையாட்டுலகில்......

இது விளையாட்டுத்துறை சம்பந்தமான செய்திகளின் தொகுப்பு.

ராகுல்-ரவீணா திருமணம்

இந்திய கிரிக்கட் அணியின் முன்னணி வீரர் ராகுல் ராவிட்-நடிகை ரவீணா திருமணம் விரைவில் நடைபெறவுள்ளது. இந்திய கிரிக்கட் வீரர்களுக்கும் சினிமா முன்னணி நடிகைகளுக்கும் காதல் செய்வது தற்போது வழமையாகி விட்டது. இந்த வரிசையில் புதிதாக சேர்ந்திருப்பவர் ராகுல் ராவிட். இந்திய அணியின் நம்பிக்கை வீரர் ராகுல் ராவிட் கடந்த சில ஆண்டுகளாக இந்திய முன்னணி நடிகை ரவீணாவை ரகசியமாக காதலித்து வந்தார்.

இந்த காதல் பற்றி கேட்ட ராகுல் ராவிட் ஆரம்ப முதல் மறுத்து வந்தார். ரவீணாவும் சொல்லி வைத்தாள் போல் ராகுல் ராவிட்டுடன் காதல் இல்லை என்று சொல்லி வந்தார். ஆனால் இவர்கள் இவரும் கூடிய விரைவில் ரகசிய திருமணம் செய்யப் போவதாக மும்பை வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. ரவீணாவிடம் தற்போது சில மாற்றங்கள் தென்படுகின்றன.

இது பற்றி தற்போது ரவீணாவிடம் கேட்ட போது ராகுல் ராவிட்டுடனான காதலை மறுக்கவில்லை. ஆனால் எங்கள் திருமணம் இப்போதைக்கு இல்லை என்றார். ரவீணாவின் பேச்சில் உள்ள இந்த மாற்றம் விரைவில் இவர்கள் திருமணம் நடக்க உள்ளது என்பதை உறுதி செய்து விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# The Island of Blood: இரத்தத் தீவு

அனிதா பிரதாப்பின் இரத்தத்தீவு-16

பிரபாகரனின் இடத்தில்

பெரிய இராஜநாகம்

பிரபாகரன் பேசியபோது அவரின் முகபாவத்தை அவதானித்தேன். அவர் இந்தியர்களுடன் போரிடப் போகிறார் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

**அவர் ஒரு போதும் வெற்று அச்சுறுத்தலை விடுபவரல்ல. நான் அலுவலகத்துக்குத் திரும்பிச் சென்று பேட்டியைத் தயாரித்தேன். 'உடன்படிக்கை' உறுதியான சமாதானத்தைக் கொண்டு வரப்போவதில்லை என்ற பிரபாகரனின் நம்பிக்கையீனத்தை பேட்டியின் இறுதியில் குறிப்பிட்டு அதனைப் பூர்த்தி செய்தேன்.**

தோற்றத்துடன் காணப்பட்ட அவரைப் பார்த்தால் இரை தேடும் புலியைப் போன்று காணப்பட்டார். ஏதோவொன்று நடத்திருக்க வேண்டும். பிரபாகரனின் காதுக்குள் தமிழில் குசுகுசுத்தார். காதுகொடுத்துக் கேட்க முயற்சித்தேன். ஆனால், அவர் என்ன கூறினார் என்பதை என்னால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், அவர் ஒரு கவலையான செய்தியைத்தான் கூறினார் என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

ஒருவருடைய முகம் சடுதியாக மாறுதலடைவதை நான் ஒருபோதும் கண்டதில்லை. புலேந்திரன் கூறுவதைப் பிரபாகரன் செவிமடுக்க ஆரம்பித்த போதும் அவருடைய முகம் மாற்றமடையாமல் இருந்தது. தான் கொண்டுவந்த செய்தியை விபரமாக புலேந்திரன் தொடர்ந்து கூறியபோது, பிரபாகரனின் முகம் மாறுதலடைய



The Island of Blood
த ஐலண்ட் ஓப் பிளட் என்ற அனிதா பிரதாப் எழுதிய- உண்மை வரலாற்றை உள்ளடக்கிய- போர்ப்பிராந்திய களநிலையும் அரசியலையும் பார்வையாகக் கொண்ட புத்தகத்தில் இருந்து........

பெரியதொரு இராஜநாகத்தைக் கண்டேன். கொத்துவதற்கு ஆயத்தமாக அது காணப்பட்டது. எனக்கு திகிலூட்டும் விடயங்களில் ஒன்று பாம்பைப் பார்ப்பதாகும். இதுவொரு நினைத்துப் பார்க்கமுடியாத பயம்.. ஸ்தம்பிதமடைய வைக்கும் பீதி. பாம்புகள் தீங்கற்றவையெனவும் அவற்றைத் தாக்காவிடின் அவை தாக்கமாட்டாது எனவும் சூபினும்,

மறைவான இடத்தில் வாழ வேண்டி ஏற்பட்டது. அவருக்குரிய தூர நோக்கம் தந்திரோபாய திட்டம் தீட்டுதல் என்பவற்றால் பிரமாண்டமானதும். இரகசியமானதுமான யுத்த அமைப்பொன்றைக் கட்டியெழுப்ப முடிந்தது. நிலத்தின் கீழ் பல தளங்களைக் கொண்ட பதுங்கு குழிகளை அமைத்தார். பாரிய தாங்கிகளை அமைத்து எரிபொருளை சேமித்தார். மெதுவாகவும், திடமானதாக வும் பாரிய போர் முயற்சிக்கான திட்டங் களை வகுத்தார். சகல தேவைகளையும் இறக்குமதி செய்யப்படும் புலிகளின் சீருடை உட்பட மிகக் கவனமாக ஆயத்தப்படுத்த முடிந்தது.

இலங்கையை விட்டு இந்தியத் துருப்புகள் வெளியேறிய பின்பே திரும்பவும் பிரபாகரனை சந்திக்கும் முயற்சியில் நான் வெற்றி காண

## வெற்று அச்சுறுத்தல் விடாத தலைவன் பிரபாகரன்

மூன்று மாதத்திற்குள்ளேயே அந்த உடன்படிக்கை முடிவுக்கு வந்தது. உடன்படிக்கை முறிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு யாழ்ப்பாணத்தில் பிரபாகரனை நான் சந்தித்தேன். அந்தப் பேட்டி நேரம் முழுவதும் தனது சிறுத்தைக் குட்டியான சீதாவை வருடியவாறு பிரபாகரன் இருந்தார்.

ஆரம்பித்தது. அவர் கூறிமுடிக்க சுமார் ஐந்து நிமிடங்கள் எடுத்தன. பிரபாகரனின் முகத்தில் இருண்ட சோக ரேகைகள் படிந்தன.

அவரின் கண்ணிமைகள் சிலிர்த்து கரிப்படைந்தன. அறுபது பாகை கோணத்தில் புருவங்கள் உயர்ந்தன.

எனது நண்பர்களும் அடிக்கடி கூறுவார்கள். ஆனால், பாம்பைக் கண்டால் அலமலத்துப் போவது என் வழக்கம். அவை தீங்கு விளைவிப்பவை என்ற ஆழமாக வேரூன்றி நம்பிக்கையில் நான் ஊறியிருந்தேன். எனது சிறிய கண் இமைகளும், சற்றுக் கூர்மையாகப்

நேர்ந்தது. 1987-1990 காலப்பகுதியில் இந்திய சமாதானப் படையினருடன் அவர் போரிட்டுக் கொண்டிருந்த தருணத்தில் அவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தேன். ஒரு தடவை அவரைச் சந்திக்க முடியாமல் போனது. கடைசி இந்தியப்

## பிரபாவின் இடத்தில் வந்த ராஜநாகம்

அது மேசையின் மீது படுத்துக் கிடந்தது. அதுவொரு கவர்ச்சியான சிறுத்தைக்குட்டி. சில மாதங்களுக்குப் பின்னர் அது இறந்து விட்டது. அதை இந்தியப் படையினர் கொன்று விட்டனர்.

பிரபாகரனை பிடிக்கக்கூடிய நிலையில் இந்தியப் படையினர் இருந்தனர். பிரபாகரனின் மறைவிடத்தை அவர்கள் சூழ்ந்து கொண்டனர். ஆனால், அதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் பிரபாகரன் தப்பிச் சென்றுவிட்டார். அவர் துரிதமாகச் சென்றதால் அவர் சீத்தாவை விட்டுச் செல்ல நேரிட்டது. அதைப் படமெடுத்த இந்தியர்கள் தாங்கள்

பிரபாகரனைச் சூழ்நநது உண்மை என்று காட்டுவதற்கு அதைப் பயன்படுத்தினர்..

புலேந்திரன் சொன்ன தனவல்

1987 இல் பிரபாகரனை நான் பேட்டி கண்டபோது குறிப்பிடத்தக்க முக்கியமான மாற்றம் அந்தக் கெரில்லாத் தலைவர் உடல் ரீதியாக அடைந்திருந்த மாற்றமாகும். ஆஜானுபாகுவான தோற்றம், அடர்த்தியான கத்தரித்த தலை மயிர் என்பவற்றுடன் அவர் காணப்பட்டார். பேட்டியின் போது மிக சாவகாசமாக காணப்பட்டார். பேட்டி மணிக்கணக்கில் நீடித்தது. நான் ஆங்கில மொழியில் கேள்வி கேட்டேன். அக்கேள்விகள் தமிழில் மொழி பெயர்க்கப்படும். அவர் அதற்குத் தமிழில் பதிலளிப்பார். எனக்கு தமிழ்மொழி விளங்கும். ஆயினும், அவர் கூறுவதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சொல்லுமாறு கேட்டுக் கொண்டேன். ஏனெனில், நான் புரிந்து கொண்டவை மிகச்சரியானதாக இருக்கவேண்டும் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காகவே அவ்வாறு கேட்டுக் கொண்டேன். இது நேரமெடுக்கும் விவகாரமாகும். ஆனாலும், எப்போதுமே பிரபாகரன் பொறுமையைக் கடைப்பிடித்தார்.

பேட்டி அரைவாசியில் சென்று கொண்டிருந்த சமயம் பிரபாகரனின் திருகோணமலைப் பகுதி தளபதி அங்கு வந்தார். சிறிய கண்களுடன் வேறுபட்ட

கண்கள் இகழ்ச்சியாகச் சரிந்தன. வாய் இறுகமூடியது. குழம்பிப் போன தன்மை தெரிந்தது. அவர் சற்றுக் கருமையான நிறமுடையவர். ஆனால், பச்சோந்தி போன்று மாறுபட்ட தோற்றத்தில் என் கண்பார்வைக்குத் தென்பட்டார். முகம் இறுகிக் கருமையாகியது. கிட்டத்தட்ட அவரின் தலைமயிரையொத்த நிறமாகத் தென்பட்டார்எனக்கு மயிரக்கூச்சு ஏற்பட்டதை உணர்ந்தேன்.

இந்தியாவுக்கு அச்சுறுத்தல்

முழுமையான மாற்றத்தை அவரில் அவதானித்தேன். இடி இடிப்பதற்கு முன்னராக காணப்படும் மேக மூட்டம் போன்று அவர் காணப்பட்டார். ஆனால், அவர் எதனையும் வெளிப்படுத்தவில்லை. உணர்ச்சியை வெளிக்காட்டாதவராக அமர்ந்தார். மென்மையாகப் பேசினார். அவரின் உதடுகளிலிருந்து தப்பியோடிய வார்த்தைகள் சீறொலியாக எழுந்தன.

"எனதுஒரு பையன் காயமடைந்தால் அவர்களில் பத்துப் பேரைக் கொல்வேன் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். எனது ஆட்கள்மீண்டும் தாக்கப்பட்டால் நாம் ஆயுதங்களை மீண்டும் எடுக்க நேரிடும்," என்று அவர் கூறினார்.

கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் சிலதமிழ்ப் பொதுமக்களும், புலி உறுப்பினர்களும் காயமடைந்திருந்த னர். இந்தியப் படையினருக்கே இந்த அச்சுறுத்தலை பிரபாகரன்விடுத்திருந்தார். அவர் விடுத்த செய்தி தெளிவானது. அதாவது, தமிழர்களின் பாதுகாப்பை இந்தியர்கள் உறுதிப்படுத்தாவிடின் புலிகள் மோதலுக்கு திரும்பி வந்துவிடுவார்கள் என்பதே அந்தச் செய்தியாகும். விடுதலைப்புலி உறுப்பினர் ஒவ்வொருவரினதும் மரணத்திற்கும், காயத்திற்கும் அவர் பழிவாங்குவார் என்பதே அவரின் செய்தியாகும்.

நாங்கள் இருந்த பெரிய அறையில் நிசப்தம் நிலவியது. பிரபாகரனின் சீற்றவொலியைத் தவிர வேறொரு சத்தமும் கேட்கவில்லை. நான் கூச்சலிடவேண்டிய அவசர நிலைக்குத் தள்ளப்பட்டேன். பிரபாகரனின் இடத்தில்

பார்க்கும் பார்வையும் நான் முற்பிறப்பில் பாம்பாக இருந்திருக்கவேண்டுமென என் சிறிய வயதில் சிலர் என்னிடம் கூறியிருந் தார்கள். எனக்குச் சிறிய கண் இமைகள் இருந்தால் பிரபாகரனுக்கு அது இல்லையெனக் கூறலாம். அப்படிப் பார்த்தால் அவர் முற்பிறப்பில் பாம்பாக இருந்திருக்கலாம். இந்த வாழ்விலும் பாம்பு போன்றே பார்ப்பதற்குத் தோன்றினார். உப்பிய தலை, அசைவற்ற தன்மை, கூர்மையான கண்கள் பாம்பைப் போன்று இருந்தன. அவரின் கருமையான முகத்தில் கண்கள் கோபமாக விழித்தன. மிகவும் கீழ் ஸ்தாயில் அபாயகரமான ஒலியை எழுப்பினார். பாயவிருந்த பாம்புபோய்விட் டது. என்னைக் கட்டுப்படுத்துவதற்கு முழுச்சக்தியையும் பயன்படுத்த வேண்டியிருந்தது. நான் வாய்விட்டு வார்த்தைகளை வெளிவிட்டபோது பிரபாகரன் ஆறுதலாகமிக சாவகாசமாகக் காணப்பட்டார். அவரின் கண்கள், மூக்கு, வாய் யாவுமே சாதாரணமான நிலைக்கு வந்தன. நாற்காலியில் சாய்ந்திருந்த அவர் வழமை போன்று மென்மையாகப் பேச ஆரம்பித்தார்.

முறிவடையும் என்ற உணர்வு

உடன்படிக்கை முறிவடையும் என்பதை அத்தருணத்தில் நான் உணர்ந்து கொண்டேன். ஒரு மாதத்திற்குப் பின்னர் புலிகளின் சினைப்பர் தாக்குதலையடுத்து இந்தியத் துருப்புகள்மேலதிகமாக யாழ்ப்பாணத்தில் இறக்கப்பட்ட சமயம் நான்பிரபாகரனைச் சந்தித்தேன். துயரந்தோய்ந்த அந்தத் தேசத்தின் வரலாற்றில் அதுவொரு குருதி தோய்ந்த அத்தியாயமாகும். அந்த யுத்தம் ஆயிரக்கணக்கானோரை பலி கொண்டது. பலரைஅங்கவீனமாக்கியது. மண்ணை அழித்தது. இந்தியாவின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தியது. புலிகளை நிலை குலையச் செய்தது. பீதி, வன்செயல் நெருக்கடிக்குள் தமிழரை மேலும் தள்ளியது.

ஆனால், உயிர தப்பினார். முன்னரை விட மிகவும் வலிமை பெற்றவராக மாற்றம் பெற்றார். ஆயினும், மிகவும்

படைவீரனும் சென்ற பின் அவர் தனது முதல் பேட்டியை எனக்குத் தந்தார். இலங்கை அமைச்சரவை உறுப்பினரான ரஞ்சன் விஜயரட்ண மற்றும் சில இந்தி யர்களுடன் திருகோணமலை கடற்கரை யில் நானும் ஒருத்தியாக நின்று இரண்டாயிரம் வீரர்களைக் கொண்ட கடைசி இந்தியப் படையணி புறப்பட்டுச் சென்றதைக் கண்டேன். அதுவொரு துக்ககரமானதும், சங்கடத்துக்குரியதுமாகும். அவர்கள் புறப்பட்டு இலங்கைக்கு வந்து சேர்ந்ததற்கு முற்றிலும் முரண்பட்ட நிகழ்வு அது. அவர்கள் இலங்கைக்கு வந்தபோது ஆயிரக்கணக்கான தமிழர்கள் வரிசையாக நின்று அவர்களை வாழ்த்தி மாலை சூட்டினர். 1500 இந்தியப் படையினர் இறந்தும் பலர் முடமாக்கப்பட்டும் தெரிவிக்கப்ப ட்ட எந்தவொரு நோக்கமும் நிறைவேற் றப்படாமலும் தீவில் அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக குருதி தோய்ந்த அத்தியாயத்தை உருவாக்கியும் இலங்கையில் இந்தியா மேற்கொண்ட தலையீடு பாரியதொரு தவறான நடவடிக்கையாகும்.

இந்திய சமாதானப் படை இலங்கை யை விட்டுவெளியேறுவதற்கு முதல்நாள் இந்திய மேஜர் ஜெனரல் ஒருவர் வரலாற் றியலாளர் 'பார்பரா துச்மானின்' நூலொன்றைப் பற்றிக் குறிப்பிட்டார். 'த மார்ச் ஓவ்:போலி: ட்ரம்ட்ரோய் ருவியட் நாம்' என்ற நூல் அது. அதில் நாம் இலங்கையையும் சேர்த்துக் கொள்ளமுடி யும் என்று அவர் குறிப்பிட்டார்.

துறைமுகத்தில் நான் அமர்ந்திருந்து, பார்வையிலிருந்து இந்தியப் படையினர் சென்ற படகு மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தேன். கடந்த காலம் நான் அக்கறை கொள்ளும் கால எல்லையை விட்டு விலகியது.

எதிர்காலத்தை நோக்கி நடந்தேன். பிரபாகரனைச்சந்திக்க வேண்டியிருந்தது. மூன்று நாட்களுக்குப் பின் அதாவது 26 மார்ச் 1990 இல் அவரைச் சந்திக்க முடிந்தது. (இன்னும் வரும்)

படிப்பகம்

www.padippakam.com



THE HOMELAND

# Change foreign policy stance about LTTE

*(Text of a recent letter sent to Hon.Bill Graham, Foreign Minister of Canada by the President, WTCWA)*

*We welcome the declaration by the Hon. Minister "hailing the deal as an absolutely wonderful breakthrough and Canada could give plenty of advice on future constitutional arrangements and how to foster better understanding between peoples." However, the Foreign Ministry has in the past followed a sterile, unprincipled and unproductive policy in regard to the ethnic conflict in Sri Lanka. Its oft repeated assertions that it is willing to mediate between the government and the LTTE if both sides made a joint request sounded hypocritical and illogical.*

*Canada was the first Western country to brand the Liberation Tigers of Tamil Eelam as " an organization engaged in terrorism" without taking into account the causes that led to the armed struggle. Such myopic character assassination only helped to embolden the racist Sri Lankan government to spurn all efforts to find a peaceful solution to the conflict till now. It sought a military solution through its infamous "War for Peace" subterfuge spending billions of rupees that resulted in destroying the country's economy.*

***The Hon. Minister will agree that war is not the first choice of the oppressed people, but it is the last resort after exhausting peaceful methods of struggle. Again it is the oppressor and not the oppressed who decides the mode of resistance. The struggle of the Tamil people against military oppression has similarities with the struggle of the South African black people against the now extinct apartheid white regime.***

*In 1994 Canada was invited to serve as a member of the monitoring committee supervising the cease-fire agreement between the LTTE and Sri Lanka. But this time around Canada has been left in the cold because of the hostile attitude of the Canadian government towards the LTTE.*

*As Canadian Tamils we like the Canadian government to play an active role in resolving the conflict on an equitable basis. But this cannot be done as long as Canada treats the LTTE as a "terrorist organization." Even a seemingly innocent Non-profit organization like the Tamil Rehabilitation Organization (TRO) Canada has been denied tax-exempt status simply because the Minister of Revenue considers it as a front organization of another organization that is in turn a front organization of the LTTE! But the same Minister has no qualms in collecting taxes from Tamil Canadians who are supporters (90%) of the LTTE.*

*We are hopeful the new Minister of Foreign Affairs will take steps to usher in a more dynamic, pragmatic and principled foreign policy that will respect the dignity and self-respect of the Tamil people. Canadian government should address the causes of the armed struggle rather than the symptoms of it. The wrongs of the past in branding an entire community as "terrorists supporters" should be righted if the Canadian government wish to play a role in "the future constitutional arrangements and foster better understanding between the people." The government can make a beginning by abandoning its obsession to deport Manickavasagam Suresh to Sri Lanka at all costs, a country he fled fearing persecution on grounds of ethnicity and religion.*

# DREAMED A DREAM

I dreamed a dream of Eelam fair
She stood in tears with those who share
The anguish she was forced to bear,
Only because from shore to shore
Her Tamil children dared to raise
Their hands against tyrannies more.

Mass graves and rape, with tortures too,
Imprisonment of innocent before they grew.
For years they languished in dark dreadful places,
While parents begged to see their faces.
Young boys and girls were dying there,
But to ask a question who would dare?
Bombs, hunger, fear and sickness too
On Her dear children grew and grew.

And then my dream it changed and changed!
From rapture to great peace it ranged,
For an Angel stood on our blood soaked sand
And raised his hand and blessed our land.
He spoke and said "Go forth in faith
And in God's strength and wisdom rest
Your Eelam will be greatly blessed.
She'll throw off the wicked yoke of years,
No more, no more your ceaseless tears.
In your great strength from God above
Send to all the island the Peaceful Dove,
For it will be God's messenger of love"

And then I saw the rubble gone
To marshes and waste land forlorn,
And on it spread a vast green lawn
A huge tower stood on it --firm and strong
In memory of martyrs who died
For the freedom the Elavar sought and tried.

Before the tower Olympus spread,
With children, playing laughing free from dread!
"Our martyrs died not in vein!" they said.
Oh! Hear again their joyous refrain
"Our martyrs have not died in vein!!"

Then from afar came thousands of men
From distant lands our kith we ken.
They came to give of their fine minds
Free innovations of many kinds
Architects to plan new lovely towns
Upon green downs, upon our downs!
Doctors, energy wise and research men in every field,
Came to our Eelam their ideas, all free, to yield!
Work done they left, with joy untold
The joy on Elavar faces to behold!

Yes great Thamil Eelam stood in splendor-
A nation which would show the world
How She would truth and toil in honor hold.
An Eelam where justice and joy prevails,
No crime, no fear, but only love,
With all Her gifts from God above.
To Prabhakaran \we will all raise
Our grateful thanks and songs of praise.

-Anonymous-

# President Chandrika threatens to torpedo ceasefire

*Sri Lanka's President Chandrika Kumaratunga Monday threatened to derail the permanent ceasefire between the United National Front government and the Liberation Tigers with a single letter to the Army commander, **a press report said Tuesday.** President Kumaratunga also stepped up the war of words with the UNF government of Premier Ranil Wickremesinghe, dealing a heavy blow to the latter s efforts to sustain governance by cohabitation between Parliament and the office of the President, **the Daily Mirror reported.** Kumaratunga's People s Alliance (PA), along with the Janatha Vimukthi Peramuna (JVP) and the paramilitary Eelam Peoples Democratic Party (EPDP) intend to mount a legal challenge to the permanent ceasefire, press reports said Monday.*

***"I can stop Ranil Wickremesinghe's agreement with one letter to the army commander" President Kumaratunga, who is commander in chief of Sri Lanka s armed forces told a local government meeting in Ja Ela, according to the Daily Mirror.***

*"There are several suspicious clauses in the agreement with the LTTE. I have appointed a committee to study the agreement and the report would be out in a day or two. Then I will take necessary action," she said.*

***The President has deputed the former Foreign Minister Lakshman Kadirgamar to consult legal experts on the fault-lines of the agreement, and the PA statement is likely to point them out, the Hindu reported Monday. "In the agreement of the UNP I believe our security camps are facing a great danger", the Daily Mirror quoted her as saying.***

*Sri Lanka state radio reported Monday that Kumaratunga's main opposition People s Alliance would, along with the JVP and the EPDP are planning to mount a legal challenge to the permanent ceasefire.*

*Kumaratunga, who on Friday accused the Wickremesinghe government of going through an improper and undemocratic procedure for the ceasefire accord, insisted she was still very much the Head of State. She claims that the UNF government had violated the Constitution by not consulting the President, Parliament and Cabinet of Ministers before signing the agreement.*

*The government denies the accusations. Government spokesman Prof. G.L. Peiris was quoted as saying the cabinet had discussed the proposed ceasefire agreement on February 20 and February 21 and had endorsed its provisions in unequivocal terms. The President had not attended the cabinet meeting, the government said. The government has brought forward the Parliamentary debate on the agreement to next Monday.*

*Prof. Peiris pointed out Monday that in 1995 the terms of the cessation of hostilities agreement drawn up between Kumaratunga's government and the LTTE were not presented to or endorsed by the Cabinet. Observers say the present ceasefire negotiated painstakingly in the past two months by the Norwegian government incorporates several features of the 1995 truce, and includes additional safeguards.*

*Furthermore, denying Kumaratunga' s claims that she had been kept in the dark as to the details of the ceasefire and presented with a fait accompli, Prof. Peiris said the Prime Minister had exhaustively discussed the terms of the agreement with the President for three hours on February 21. The Norwegian delegation is also reported to have discussed truce with the President during its formation.*

*Criticising Kumaratunga's complaints, Prof. Peiris said it was remarkable that these were the issues which seemed to have agitated the President's mind at a time when a major event of national importance was unfolding, in reference to the landmark truce agreement between the government and the LTTE.*

*The ceasefire has been enthusiastically welcomed by the international community. India, the United States, Britain and Japan hailed the agreement hours after it was unveiled by the Norwegian government Friday. Since then, Australia, Canada and Pakistan have welcomed it with United Nations Secretary-General Kofi Annan extending his support on Monday.*

## TRO(Canada) funds Computer Training Centre in Vanni

*TRO (Canada) is funding a computer training centre in Vanni that will provide training for 40 students in computer programming. The project needs 22 computers at a cost of Cdn, $45,000. The appeal for funding came from TRO (Vanni).*


***Foreign Newspaper correspondents like the BBC Lester Harrison reported that students in Vanni have never seen a computer in their life.** Education- wise they are 20 years behind those in the south of the country. Teachers, buildings, equipment, furniture, teaching materials etc. are woefully inadequate in the Northeast.*

*There are more than 10,000 vacancies for teachers in the Northeast. The appointment of several thousand teachers by the previous government has been cancelled by the present government.*

## Sihala Urumaya urges President to nullify MoU

The Sihala Urumaya (SU), the hard-line Sinhala nationalist party, declared Tuesday that it would launch a campaign among the Sinhalese to urge President Chandrika Kumaratunga to use her executive powers to invalidate the cease-fire agreement between the United National Front government and the LTTE. Mr. Tilak Karunaratne, leader of the Sihala Urumaya (SU), addressing a press conference in Colombo Tuesday said that his party has decided to file a case on Thursday in the Court of Appeal seeking the nullification of the MoU and the cease-fire agreement as these, according to him have contravened the Constitution of Sri Lanka

படிப்பகம்




நியாய விலைக்கு லண்டனில் முன்னணி
வகிக்கும் தங்க நகை மாளிகை

இப்போது புதுப் பொலிவுடன்
எண்ணற்ற தெரிவுகளுடன்
காட்சியளிக்கிறது

# றோயல் ஜூவலரி

உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்

✡ மனம் கவரும் தங்க நகைகள்

✡ 22 கரட் உத்தரவாதம்

✡ தாலி - பொன்னுருக்கல் வசதிகள்

✡ உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ண நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்

✡ சாத்திர விதிகளுக்கேற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்

புன்னகையோடு சேர்ந்த பொன்னகைபெற

## ROYAL JEWELERY

**287 High Street North, East Ham,**
**London E12 6SL**
**Tel: 020 8 472 55 00**
**Fax: 020 8 472 56 87**

# S.SATHA & CO

We are specialist firm to conduct Immigration and Crime work under the Community Legal Service

We also specialist in Commercial and Residential Conveyancing including Licensing and Planning

Additional areas covered:
Family & Children matters

LEGAL AID FRANCHISE
A QUALITY SERVICE
Approved by The Legal Aid Board

Community Legal Service
Specialist Help Point
Immigration
Crime

*REPRESENTATION*
*AT*
*POLICE STATION, HOME OFFICE, AIRPORT ETC*

**PRINCIPAL PARTNER S.SATHANANTHAN**
MANAGING PARTNER DR. S. BHASKAR - PARTNER RAHMAN

378, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6PH
TEL: 020 8471 9484 FAX: 020 8471 9485
***WE ARE ALWAYS AT YOUR SERVICE***

www.padippakam.com



# சோதிடர்: பொன்.எஸ்.சேகர்

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம்கால்.

மேடம்: நோய் நீக்கம் ஏற்படல். செய்தொழில்வகையில் முன்னேற்ற வாய்ப்புக்கள் போன்றன ஏற்படல். நண்பர்கள் உதவி ஒத்தாசை, திருமண காரியங்களில் அனுகூலம். வாகன சுகம். பிறர் மரியாதை ஏற்படல். பெண்களினால் முன்னேற்ற வாய்ப்புக்கள், புதிய தொழில் முயற்சிகளில் முன்னேற்ற வாய்ப்புக்கள் ஏற்படல். எனினும் தான் பார்க்கும் காரியங்களில் தாமதம் ஏற்படலாம். எல்லோரையும் திருப்திகரமாய் நடத்தல். எதிர்பாராத லாபம் ஏற்படல். அதுபோல் எதிர்பாராத செலவுகள் ஏற்படல். வீண் விரோதம் ஏற்படவும் ஏதுவாகல். களத்திர சுகம். பிள்ளைகள் மூலம் சிலநன்மைகள் ஏற்படல். வஸ்திர சேர்க்கை ஏற்படலாம். சுபச் செலவு ஏற்படல். கடன் வகையில் கொடுக்கல் வாங்கல்களில் சிரமம் ஏற்பட ஏதுவாகல். தனித் தொழில் புரிபவர்களுக்கு தொழில் வகையில் முன்னேற்ற வாய்ப்பு குறையும் தன்மை ஏற்படல்.

## இடபம்

கார்த்திகை 2, 3,4ம் பாதங்கள்.
ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள்.

இடபம்: தமது குடும்பத்தில் உறவினர்களுக்கிடையில் எதிர்பார்த்த சுப நிகழ்ச்சிகள் நடக்க ஏதுவாகும். செய்தொழில் வகையில் முன்னேற்ற வாய்ப்பு ஏற்படவும் ஏதுவாகும். பிற இடசஞ்சாரம் சிலருக்கு ஏற்பட ஏதுவாகல். பணப்பிளக்கம் ஏற்படல். திருமண காரியங்களில் அனுகூலம் ஏற்படல். எதிர்பாராத செலவுகள் ஏற்படல். நோய் நீக்கம், சத்ருஜெயம் ஏற்படல். சிலருக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் கஷ்டம் ஏற்படல். தொழில் வகையில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் முன்னேற்ற வாய்ப்புக்கள் ஏற்படவும் ஏதுவாகும். மேல் அதிகாரிகளின் ஆதரவு ஏற்படல். பிறஜாதி மதத்தினர் உதவி ஒத்தாசை ஏற்படல். சிலருக்கு புதிய நட்பு ஏற்படவும் ஏதுவாகும். ஒருசிலருக்கு காதல் கைகூடிவரும். தாய், தந்தையருக்கு தேகநலக்குறைவு ஏற்படவும் ஏதுவாகலாம். தெய்வ தரிசனம் ஏற்படல். கணவன் மனைவி உறவு சீராக அமையும். எதிர்பாராத முன்னேற்றம் ஏற்படும்.

## மிதுனம்

மிருகசீரிடம் 3, 4-ம் பாதங்கள்.
திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்கள்.

மிதுனம்: தேவையில்லாத நட்பு, பணவிரையம், மனைவி மக்களால் மனக்கவலை, வீண் அலைச்சல், காரிய தாமதம், போன்றன ஏற்படல். எதிர்பாராத செலவுகள் உடல் நலக்குறை, பிரயாணம், இறைவழிபாடு, போன்றனவும் ஏற்படலாம். எனினும் நண்பர்கள் உறவினர்கள் மூலம் உதவி ஒத்தாசை, மன நிம்மதி ஏற்படவும் ஏதுவாகல். அதிர்ஷ்டலாபச்சீட்டு மூலம் சிலருக்கு பணச்சேர்க்கை ஏற்படலாம். செய்தொழில் வகையில் கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவற்றில் முன்னேற்றம் ஏற்படவும் ஏதுவாகும். திருமண காரியங்களில் அனுகூலம் ஏற்படும். சத்ரு ஜெயம் எற்படும். எது காரியங்களையும் செய்து முடிக்கும் மனத்தைரியம் ஏற்படும். மனதில் ஒருவித வஞ்சனை ஏற்படும். வாகன வீடு போன்றனவற்றினால் ஆதாயம் சிலருக்கு ஏற்படும். வீண் தொல்லைகள் வரவும் ஏதுவாகும். பணப் பிளக்கம் ஏற்படும்.

## கடகம்

புனர்பூசம் 4-ம்கால், பூசம், ஆயிலியம்.

கடகம்: மனதில் ஒருவித கவலை ஏற்படும் அல்லது பயம் ஏற்படவும் ஏதுவாகும். எனினும் பொருள் வரவு, செய்தொழில் வகையில் முன்னேற்றம் பிறர் மரியாதை போன்ற ஏற்படவும் ஏதுவாகும். ஏதும் பொருட்கள் காணாமல் போகவும் ஏதுவாகலாம். வீண் வாக்குவாதம் ஏற்படல். வஸ்திர ஆபரணச் சேர்க்கை ஏற்பட ஏதுவாகல். நண்பர்கள், உறவினர்களுடன் விருந்துபசாரங்களில் கலந்து கொள்ளும் வகையும் ஏற்பட ஏதுவாகும்.வாகன சுகம் ஏற்படல். தமது குடும்பத்தில் சுபகாரியங்கள் கைகூடிவரும். செலவுகள் அதிகரிக்கும். புதிய நட்பு ஏற்படும். சத்ருஜெயம் ஏற்படும். தடைப்பட்ட காரியங்களில் அனுகூலம் ஏற்படலாம். மேல் அதிகாரிகள் நல்ல முறையாக நடந்துகொள்ளாத நிலையும் ஏற்படலாம். குடும்பத்தில் மனச்சந்தோஷம் அதிகரிக்கும். சுபச் செலவுகள் ஏற்படலாம். தெய்வபக்தி ஏற்படல். புதிய தொழில் முயற்சிகளில் மனநாட்டம் ஏற்படல். செய்தொழில் வகைக்கு பிறர் ஒத்துழைப்பு ஏற்படல்.

## சிம்மம்

மகம், பூரம் உத்திரம் 1-ம் பாதம்.

சிம்மம்: நோய் நீக்கம் ஏற்படல். பணப்பிளக்கம் ஏற்படல். சிலருக்கு வசூலாக வேண்டிய பாக்கிகள் வசூலாகும் தன்மை ஏற்படல். பிரயாணத்தினால் அனுகூலம் ஏற்படல். செல்வாக்கு, வாய் சாதுரியம் ஏற்படல். தடைப்பட்ட காரியங்களில் அனுகூலம் ஏற்படல். கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகரித்தல். எதிர்பாராத நட்பு ஏற்பட்டு அதனால் நன்மைகளும் ஏற்பட ஏதுவாகல். செய்தொழில் வகையில் தொந்தரவுகள் ஏற்பட்டாலும் லாபம் ஏற்பட ஏதுவாகும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படலாம். பெரியோர் ஆதரவு ஏற்படவும்ஏதுவாகல். சிலருக்கு பயணத்தினால் ஏமாற்றங்கள் ஏற்படவும் ஏதுவாகும். புத்திக்கேடு ஏற்படவும் ஏதுவாகும். மனதில் ஒருவித வஞ்சனை மேல் ஓங்கும். வீண் காரியங்களில் ஈடுபாடு ஏற்படவும் ஏதுவாகும். அரச காரியங்களில் அனுகூலம் ஏற்படல்.

## கன்னி

உத்திரம் 2, 3-ம் பாதங்கள். அத்தம்
சித்திரை 1, 2-ம் பாதங்கள்.

கன்னி: நோய் நீக்கம் ஏற்படல். துக்கங்களும் தொல்லைகளும் குறையும் வகை ஏற்படல். நண்பர்கள் விரோதிகள் ஆகியவர்களினால் சில நன்மைகள் ஏற்படலாம். காரிய அனுகூலம் ஏற்படல். பிரயாணத்தினால் நன்மைகள் ஏற்படலாம். எதிர்பார்த்த செலவுகள் அதிகரிக்கும் தன்மையும் ஏற்படல். செய்தொழில் வகையில் கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவற்றில் முன்னேற்றம் ஏற்படும். வஸ்திர சேர்க்கை, புத்திக்கூர்மையினால் சில காரியங்கள் பார்க்கும் தன்மை போன்றன ஏற்படல். கண், காது இவைகளில் நோய் ஏற்படலாம். வீண் சச்சரவுகள் ஏற்படவும் ஏதுவாகும். பணச்செலவு ஏதும் வகையில் ஏற்படல். நண்பர்கள், உறவினர்கள் உதவி ஒத்தாசை ஏற்படல். புதிய உறவினால் சிலருக்கு தொல்லைகள் ஏற்படவும் ஏதுவாகும். புதிய தொழில் முயற்சிகளில் தாமதம் ஏற்படல்.

## துலாம்

சித்திரை 3,4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2,3-ம் பாதங்கள்.

துலாம்: உடல் நலக்குறைவு ஏற்படும். புத்திர புத்திரர்களின் உடல் நலக்குறைவும் எற்பட ஏதுவாகலாம். பண விரையம். சலத்துடன் சம்பந்த ரோகம் போன்றனவும் ஏற்பட ஏதுவாகலாம். செய்தொழில் வகையில் சில கஷ்டங்கள் ஏற்படவும் ஏதுவாகும். அரச காரிய அனுகூலக்குறைவு போன்றனவும் ஏற்படலாம். பிரயாணங்கள் ஏற்படவும் ஏதுவாகலாம். சகோதரர்களுக்கு நன்மைகள் ஏற்படல். புத்திரர்களினால் நன்மை ஏற்படல். புண்ணிய காரியங்களில் ஈடுபடலும், அவற்றினை அனுபவிக்கும் தன்மையும் ஏற்படலாம். பிறர்மரியாதை ஏற்படல். பெரியோர்களின் சேர்க்கையும் ஏற்பட ஏதுவாகல். குடும்பத்தில் உள்ளவர்களுக்கு தமக்கு வேண்படியவர்களுக்கு நோய் நொடி ஏற்படவும் ஏதுவாகலாம். எதிர்பாராத செலவுகள் ஏற்படல். மனதில் விரக்தி மனப்பான்மை ஏற்படல்.

## விருச்சிகம்

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை.

விருட்சிகம்: உடல் நலக்குறைவு, குடும்பத்தில் சிறுசிறு பூசல்களால் மனக்கவலை ஏற்படல். நிலையில்லாத மனத்தால் எதையும் பொறுப்புடன் செயற்படுத்த இயலாதநிலை, தொழில் புரியும் இடங்களில் சச்சரவுகள் போன்றன ஏற்படல். பொதுக்காரியங்களில் நன்மை ஏற்படாமை, தாம் இருக்கும் இடம்விட்டு வெளியேறும் மனநிலை அல்லது சூழ்நிலை ஏற்படலாம். பண முடக்கம் ஏற்படல். வழக்கு வகையில் பாதகமான நிலை ஏற்படலாம். மனஅமைதி கெடும். எதிர்பாராத பயணம் ஏற்படவும் ஏதுவாகும். வீட்டு உபயோகப் பொருட்கள் சேரும். வாகன வகைசெலவுகள் உண்டாகும். சிலருக்குப் புதிய கடன்படும் தன்மை ஏற்படும். தெய்வ நம்பிக்கை ஏற்படும். தகாத தொடர்புகள் ஏற்படவும் ஏதுவாகும்.

## தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்.

தனுசு: அரச காரியங்களில் நன்மைகள் ஏற்படலாம். தடைப்பட்ட பதவி உயர்வு ஊதிய உயர்வு போன்றன ஏற்படல். பெரியோர்ககளின் நட்பு உண்டாகல். நற்பணிகளில் மனநாட்டம் ஏற்படல். தடைப்பட்ட திருமண காரியங்களில் அனுகூலமான பலன் ஏற்படல். பிரிந்தவர்கள் ஒன்றுசேரும் தன்மையும் எற்படலாம். சில தம்பதிகளுக்கு குழந்தைச் செல்வம் ஏற்படவும் ஏதுவாகல். சகோதரர்களுக்கு நன்மை ஏற்படல். ஒருசிலருக்கு காதல் திருமணம் நடைபெறும் வகையும் ஏற்படும். சத்ரு ஜெயம் உண்டாகும். பிறர் மரியாதை ஏற்படும் நோய் நீக்கம் ஏற்படும். நண்பர்கள் உதவி ஒத்தாசை ஏற்படும். சுறுசுறுப்பு ஏற்படல். மனதில் ஒருவித அமைதி ஏற்படல். சத்ரு ஜெயம் ஏற்படல்.

## மகரம்

உத்தராடம் 2, 3ம் பாதங்கள், திருவோணம்,அவிட்டம்1,2ம்பாதங்கள்.

மகரம்: மனதில் காரணமின்றி பயம் ஏற்படல். சூட்டு ரோகம், குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் சண்டைகள் உருவாகி மகிழ்ச்சியில்லாத சூழ்நிலையும் எற்படல். எதிர்பாரா நிலையில் செலவும் ஏற்படவும் ஏதுவாகலாம். கல்வியில் ஆர்வக்குறைவு ஏற்படல். செய்தொழில் வகையில் சில கஷ்டங்கள் ஏற்படவும் ஏதுவாகல். புத்திரர்களினால் லாபம் ஏற்பட மாட்டாது. மனைவியின் உடல் நிலை பாதிக்கலாம். நண்பர்களினால் செலவுகள் ஏற்படவும் ஏதுவாகும். மறைமுக எதிரிகளினால் சில தொல்லைகள் ஏற்படல். நீண்டதூர பிரயாணம் ஏற்படல். பிறர் மரியாதை ஏற்படல். ஸ்தல தரிசனம். வாகன யோகம் போன்றனவும் ஏற்படலாம். வீண் செலவுகள் ஏற்படல். புதிய பழைய நட்புகள் உருவாகும். சிலருக்குப் புத்திர பாக்கியம் ஏற்படும். புதியபழைய நட்புகள் உருவாகும். சிலருக்கு புத்திர பாக்கியம் எற்படும். புதிய தொழில் முயற்சிகளில் பலிதம் ஏற்படும். தனது பந்துக்குள் சுபகாரியங்கள் கைகூடும்.

| | செவ் | சனி ராகு | வியா |
|---|---|---|---|
| சூரி வெள் | இவ்வாரப் பலன் | | |
| புத | | | |
| | கேது | | |

## கும்பம்

அவிட்டம் 3, 4ம் பாதங்கள். சதையம், பூரட்டாதி 1, 2,3ம்பாதங்கள்.

கும்பம்: மன அமைதி ஏற்படல். ஸ்தல தரிசனம் ஏற்படல். சிலருக்கு திருப்பணி செய்யும் நிலையும் உருவாகும். தானதர்மச் செய்கை ஏற்படும். நண்பர்களின்உதவி ஒத்தாசை ஏற்படல். சமூகத்தில் நன்மதிப்பு ஏற்படல். திருமண காரியங்களில் ஈடுபாடு எற்பட்டுள்ளவர்களுக்கு அதனால் எதிர்பார்த்த நல்ல முடிவுகள் உண்டாகும். சிலருக்கு தனிமையில் இருக்கும் நிலை ஏற்படும் பகை ஏற்படும். செய்தொழில் வகையில் உத்தியோகத்தில் விரும்பாத வேண்டாத நிலையில் ஏதும் மாற்றம் ஏற்படவும் ஏதுவாகவும் செய்யலாம். குடும்பத்தில் இனபந்துக்குள் வேண்டாத மனக்கஷ்டம் ஏற்படவும் ஏதுவாகலாம். உடல் நலக்குறைவு ஏற்படும். கண்ணுடன் சம்பந்த வயிற்றுடன் சம்பந்த நோய் ஏற்படலாம். வரவேண்டிய பணமும் தாமதமாகலாம். பிரயாணத்தினால் எண்ணங்கள் நிறைவேறாமல் திரும்பும் வகையும் சிலருக்கு ஏற்படலாம்.

## மீனம்

பூரட்டாதி 4ம் பாதம். உத்தரட்டாதி ரேவதி.

மீனம்: எது காரியங்களிலும் எதிர்ப்பும், தடைகளும் ஏற்படஏதுவாகலாம். வீண் செலவுகள் ஏற்படல். நண்பர்கள் ஆதரவு குறையலாம். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் பெற இயலாது. எனினும் தன் நம்பிக்கையினால் உறுதி வாய்ப்புக்களை அதிகரித்துக்கொள்ளும் தன்மை எற்படும். செய்தொழில் உத்தியோகத்தில் நல்லவிதமாய் அமையும்.எதிர்பாராத உதவி ஒத்தாசை ஏற்படும். பிறஜாதிமதத்தினர் உதவிகள் ஏற்படும். இல்லற சுகம் ஏற்படும். தாயாரின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். களத்திர சுகக்குறைவு நீங்கும். பிரிந்தவர்கள் ஒன்றுசேரும் தன்மை ஏற்படும்.திருமண காரியங்களில் தாமதம் எற்படும். குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும்.தூரஇடச்செய்தி மன அமைதியைக் ஏற்படுத்தும். ஸ்தல தரிசனம் உண்டாகும். பிரயாணம் சிலருக்கு ஏற்படும்.

உங்கள் சோதிடத் தேவைகளுக்கு:

பொன்.சேகர்

படிப்பகம்

www.padippakam.com



எமது குறுநாவல் தொடர் -7



திருமகள்

# நான்தாண்டா ஆத்தா.....

''மச்சான்''

''என்ன?''

''நிலத்தில் கிடக்கிற சேவலைப் பார்த்தியா?''

''ம்... அதற்கு இப்போ என்ன?''

''இது பெரிய அநியாயமடா!''

''அதை வெட்டிப் பலி கொடுத்ததா?''

''இல்லை! இல்லை!''

''பின்னை என்ன?''

''மனிசர் சாப்பிட வேண்டிய இந்தச் சேவலை வீணாக நாய், பூனை சாப்பிடப் போகுது!''

''உது பேய் உறிஞ்சிய கோழி. மனிசர்கள் சாப்பிட்டால் பேய் அவர்களில் தொத்திக் கொள்ளும்!''

''பேயாவது பூதமாவது!எல்லாம் எங்கடை மனப் பயந்தான்!'' மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்று ஒரு பழமொழிகூட இருக்குது தெரியுமா?''

''நீ பேய் இல்லை, பூதமில்லை, சாமி இல்லை என்று சொல்லித் திரிகிற நாலு இங்கிலீசு படித்த பெடியன்களுடைய பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போனாய்! உனக்குப் பேய்ப் பயம் இல்லாமல் இருக்கலாம். எனக்கு இருக்கிறது!''

''உனக்குக் கோழி தின்னப் பொசுப்பில்லை என்று சொல்''

''எனக்கு இந்தப் பேய்க்குக் கழித்த கோழி ஒன்றும் வேண்டாம். நான் பிள்ளை குட்டிக்காரன். என்னை விட்டுடு''

''சரி சரி மந்திரவாதி தனது வேலையை முடித்துப் போட்டார். இனித் திரும்புவம்''

வள்ளம் பத்திரமாக துறையூரை வந்து சேர்ந்தது. வள்ளத்தை எதிர்பார்த்திருந்த சிவராசா வீட்டுக்காரர் மந்திரவாதியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்கள். புயல் அடித்து ஓய்ந்த வீடுபோல் அந்த வீடு காட்சி அளித்தது. அன்றிரவு சிவராசா வீட்டில் மந்திரவாதி உட்பட எல்லோரும் நிம்மதியாகத் தூங்கினார்கள். ஆனால் ஒருவர் மட்டும் அதற்கு விதி விலக்கு.

எவ்வளவுதான் கண்ணை மூடிக் கொண்டு நித்திரை கொள்ள நினைத்தாலும் அது முடியாமல் கந்தசாமி பாயில் புரண்டான். ஒவ்வொரு முறையும் கண்ணை மூடும்போது கல்முனையில் விட்டுவந்த அந்தச் சேவல் கோழிதான் கண்ணுக்குள் சிறகடித்துப் பறந்தது. சும்மா சொல்லக் கூடாதுஅதை நிறுத்தால் ஏழெட்டு இறாத்தல் நிற்கும். கள்ளன் காடன் கையிலே கொடுத்தாலும் பத்து ரூபா தேறும். சிவராசா யாரெட்டை வாங்கினாரோ தெரியாது. கந்தசாமி மனதுக்குள் ஒரு முடிவோடு இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டான்.

அடுத்த நாள் காலை விடியல் கோழி கூவுமுன் ஒருவருக்கும் தெரியாமல் மீண்டும் கல்முனைக்குப் போய் அந்தக் கோழியை எடுத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதுதான் அவன் எடுத்த முடிவு!

கந்தசாமியின் வள்ளம் கல்முனை நோக்கி இரண்டாவது பயணத்தை மேற்கொண்டது. இன்னும் நிலம் நல்லா வெளுக்கவில்லை. அவன் பயந்ததுபோல நாய் பூனை எதுவும் அந்தக் கோழியைத் தின்னவில்லை. அந்தக் கோழி போட்ட இடத்திலேயே கிடந்தது. கொஞ்சம் விறைத்துப் போனதுபோல மட்டும் அவனது கண்ணுக்குத் தெரிந்தது. மெல்ல அதனை எடுத்து கையோடு கொண்டுபோன ஒரு கோணிப் பைக்குள் போட்டான். திரும்பிப் பாராமல் ஓட்டமும் நடையுமாய் வந்து வள்ளத்தில் ஏறிக் கொண்டான். எவ்வளவுதான் பேய் இல்லை பூதம் இல்லை என்று வீறாப்புப் பேசினாலும் அந்தச் சூழலில் அவனது நெஞ்சு பயத்தால் படபடத்தது.

வீடு திரும்பிய கந்தசாமி கோழியை கோடிப் பக்கமாய் வைத்து உரித்து, சின்னச் சின்னத் துண்டுகளாக வெட்டிப் பக்குவமாய் இரண்டு சட்டி நிறையக் கழுவிக் கொடுத்தான். ''எங்காலே இந்தக் கோழி?'' என்று மனைவி கேட்டபோது ''நேற்றிரவு



உரும்பிராய் காட்டு வயிரவர் கோயிலில் வேள்வி. அங்கை போனவர்கள் வாங்கி வந்து விற்றவியள்'' என்று ஒரு பெரிய பொய்யைச் சொல்லி கந்தசாமி அவளின் வாயை அடைத்தான்.

பனம்பால் பருகாமல் கோழிக்கறியோடு சாப்பாடா? ஊரின் ஒரு ஒதுக்குப் புறத்தில் இருந்த பனம்பால் கொட்டிலுக்கு கந்தசாமி புறப்பட்டான். கொட்டிலுக்கு வெளியில் போடப்பட்டிருந்த தென்னங் குத்தி ஒன்றில் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டான். அதுதான் அவனது வழக்கமான சிம்மாசனம்.

ஒன்று, இரண்டு, மூன்று..... என்று போத்தல் கணக்கில் பனம்பால் உள்ளே போய்க் கொண்டிருந்தது. சும்மாவா சொன்னார்கள் ''முள்ளுக் கொள்ளாத வேலியும் இல்லை கள்ளுக் கொள்ளாத வயிறும் இல்லை'' என்று.

குடிப்பது இப்போது கொலை, களவு, கள், காமம், பொய் என்ற பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. முற்காலத்தில் அப்படியான கோட்பாடு இருக்கவில்லை. சமணம், பவுத்தம் போன்ற சமயங்களின் செல்வாக்கு தமிழர்களிடையே பெருகியபோதுதான் கள் குடிப்பது இழிவாகக் கருதப்பட்டது.

சங்க கால மன்னர்கள் புலவர்கள் அரண்மனையில் ஒன்றாக இருந்து கள் குடித்தார்கள். போர்க்களத்தில் மன்னர்கள் தங்கள் படை வீரர்களோடு அருகிருந்து கள் குடித்து மகிழ்ந்தார்கள்.

அவ்வையார் பெரும் புலவர். புறநானூற்றில் அவர் பாடிய பாடல்கள் 28 இடம்பெற்றுள்ளன. இதில் இருபது பாடல்கள் குதிரைமலையை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி என்ற குறுநில மன்னனது வீரம், கொடை, வள்ளன்மை, அன்பு பற்றிய பாடல்கள் ஆகும். அதியமான் இறந்தபோது அவ்வையார் அவனது வள்ளன்மையை நினைவு கூர்ந்து அழுது பாடியிருக்கிறார்.

''சிறியளவே கள் இருப்பின் அதனை எங்களுக்கே தருவான். அது இன்று அவனது இறப்போடு போயிற்று. பெரிய அளவில் கள் இருப்பின் அதனை நாம் உண்டு பாட எஞ்சிய கள்ளை அவன் உண்டு மகிழ்வான். அதுவும் இன்று போயிற்று'' என அவர் பாடிய பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

வேதகால ஆரியர்கள் சோமபானம் என்ற மதுவைப் பருகியதோடு அவற்றைக் கடவுளர்களுக்கும் படைத்தார்கள். இருக்கு வேதத்தில் சோமபானம் சோமன் என்ற ஒரு தெய்வமாகவே உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது.

''இந்திரனே! இந்தக் காலை உணவில் சோமரசமும், பொரித்த புரோடாசமும் (மாடு அல்லது ஆட்டின் விதை)வைத்துள்ளோம் ஏற்றுக் கொள்''

என இருக்கு வேதம் (2913) நவில்கிறது.

இதைப்போல் இன்னும் பல பாடல்கள் வெறிக்கும் சோமச் செடியில் இருந்து பிழிந்து பருகும் பானத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. இருக்கு வேதத்தின் ஒன்பதாவது மண்டலத்தில் காணப்படும் பாடல்கள் முழுதும் சோமச் செடியை கசக்கிப் பிழிந்து அதிலிருந்து சாறை எடுக்கும் வழிமுறைகளையும் அதனை அருந்தினால் வரும் ஒருவித தெய்வீக மயக்கத்தைப் பற்றியும் பேசுகின்றன.

தங்கள் எதிரிகளான தஸ்யூக்களையும், அவர்களது இரும்புக் கோட்டைகளையும் அழித்து அவர்களது செல்வங்களை கொள்ளையடிக்க உதவிய இந்திரனுக்கு சோமபானம் உட்பட படையல்கள் படைக்கப்பட்டன. இந்திரன் மட்டுமல்லாது வருணன், அக்னி, சூரியன் போன்ற இயற்கை சக்திகளையும் ஆரியர் கடவுளர்களாக வழிபட்டனர்.

குதிரைகள் பூட்டிய தேர்களில் இருந்து கொண்டு வில், அம்பு, வேல், ஈட்டி முதலிய இரும்பு ஆயுதங்களை வைத்திருந்த ஆரியர்கள் வேளாண்மை செய்து வாழ்ந்த பழங்குடி மக்களை எளிதில் வென்றார்கள். பழங்குடி மக்கள் நிறத்தில் கருப்பாக இருந்ததும், ஆரியர் நிறத்தில் வெண்மையாக இருந்ததும் பழங்குடி மக்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தையும் விளைவித்தது.

பொதுவாக கடவுளரிடம் தங்களுக்குப் பொருள், உடல் நலம், நீண்ட ஆயுள், பாதுகாப்பு, தாஸ்யூக்களுக்கு எதிரான போரில் வெற்றி வேண்டிப் பாடிய பாடல்களே இருக்கு வேதத்தில் காணக் கூடியதாக இருக்கிறது. மிக அருமையாகத் தங்கள் பாவங்களை மன்னிக்குமாறு கேட்கும் பாடல்கள் காணப்படுகின்றன.

சோமபானம் வைக்கப்பட்டிருந்த கலத்தைச் சுற்றி இருந்து பாடல்கள் பாடுவது மழை காலத்தில் குளம் நிரம்பியவுடன் அவற்றின் கரையருகில் இருந்து கத்தும் தவளைகளோடு ஒப்புவமை சொல்லப்பட்டுள்ளது! (இருக்கு, 7.83)

வேள்வி செய்து ஆடு மாடு குதிரைகளைப் பலி கொடுத்தல் கடவுளரின் அனுக்கிரகம் கிடைக்கும், தங்களது உள்ளத்து ஆசைகள் நிறைவேறும், தங்கள் எதிரிகளைப் போரில் எளிதில் வெல்லலாம் என்று ஆரியர்கள் நம்பினார்கள்.

''தெய்வங்களை வணங்காதவர்களை தெய்வங்களுக்கு வேள்வி செய்தும் பலி இட்டும் வழிபாடு செய்யும் ஆரியர்கள் வெற்றி கொள்வார்கள்.'' (இருக்கு 8.31.15)

கள்ளுக் கொட்டிலில் மத்தியானம் மட்டும் அலம்பி விட்டு அரை வெறியில் தள்ளாடிக் கொண்டு வீடு திரும்பிய கந்தசாமியை வீட்டு அடுக்களையில் இருந்து வெளிவந்த கோழிக்கறியின் கம கம வாசம் படலை மட்டும் வந்து வரவேற்றது! அது அவனது பசியை அதிகரித்தது. நேரே கிணற்றடிக்குப் போய் கைகால் அலம்பி திருநூற்றுக் கூட்டில் கையைவிட்டு அள்ளி நெற்றியில் விபூதியைப் பலமாகப் பூசிக் கொண்டு வந்து சம்மாலி கோலிக் கொண்டு கந்தசாமி பெட்டிக்கு மேலே வைத்திருந்த சோற்றுக் கோப்பைக்கு முன்னாலே ஆவலோடு உட்கார்ந்தான்.

பலமாத இடைவெளிக்குப் பின்னர் மத்தியானம், பொழுதுபட இரண்டு நேரமும் கோழிக் கறியோடு கந்தசாமியும், பெண்சாதி பிள்ளைகளும் சிவராசா வீட்டுச் செலவில் மாலோகமாகச் சாப்பிட்டார்கள்!

நாட்கள் கிழமைகளாகி, கிழமைகள் திங்கள்களாக மாறி ஓடிக் கொண்டிருந்தன. புவனத்துக்கு இப்போது பூரண சுகம். வீட்டில் கலகலப்பாக ஓடியாடி பம்பரம் போல் வேலை செய்தார். குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார். மாமன், மாமியாருக்கு அன்போடு பணிவிடை செய்தார். கோயில் குளம் என்று போய்க் கும்பிட்டு வந்தார். செவ்வாய் வெள்ளி இரண்டு நாளும் விரதம் இருந்தார்.

இந்த வாட்டி கல்முனைக்குக் கொண்டு போய் விட்ட பேய் திரும்பி வரவே இல்லை!கணேசு வாத்தியாருக்கு ஊரில் நல்ல கியாதி. அவர் புகழ் அக்கம் பக்கத்து ஊருக்கும் பரவியது. அவர்தான் ''ஆத்தாளை'' ஆலமரத்தோடு வைத்து அறைந்து கட்டிப்போட்ட மலையாள மந்திரவாதியாயிற்றே!

ஆனால் சேவல் கோழி கல்முனையில் இருந்து திரும்பி வந்ததையும் அது சட்டிக்குள் சங்கமமான இரகசியத்தையும் எத்தனை நாட்கள்தான் கந்தசாமி தன் நெஞ்சில் வைத்துப் பூட்டிக் காக்க முடியும்?

அவனது பானை வயிற்றுக்குள் கொஞ்சம் அளவுக்கு அதிகமாக கள் இறங்கியபோதெல்லாம் மெல்ல மெல்ல அவனையும் அறியாமல் 'உனக்கு மட்டும் சொல்றேன் அண்ணே வேறு யாருக்கும் சொல்லிப் போடாதே' என்று சத்தியம் வாங்கிக் கொண்டு எல்லோரிடத்திலும் கோழி திரும்பி வந்த கதையை அவிட்டுவிட ஆரம்பித்தான். அந்தக் கதை ஊரெல்லாம் கசியத் தொடங்கியது. ஒரு நாள் புவனத்தின் காதுக்கும் அது எட்டியது.

பேய்க்குக் கழித்து கல்முனையில் கொண்டுபோய் போட்ட கோழி திரும்பி வந்துவிட்டது என்ற செய்தி புவனத்தின் ஆழ் மனதில் பட்டுத் தெறித்த அடுத்த வினாடியே அவள் தலைவிரி கோலமாய் மீண்டும் ஆடத்தொடங்கினாள்!

(முற்றும்)

படிப்பகம்

www.padippakam.com



நம்நாடு
Europe Edition

JR PRINT
சகல அச்சு வேலைகளையும் உரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஜே ஆர் அச்சகம்
57, Boundary Road, Walthamstow
London E17 8NQ
Tel: 020 85036643
Web: www.jrprint.com email: contact@jrprint.com

## உடன் படிக்கை பாதிக்கப்படக்கூடாது:
# முப்படைத் தளபதிகளுக்கும் பிரதமர் ரணில் பணிப்பு

உடன்படிக்கையை பாதிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என முப்படைத் தளபதிகளுக்கு பிரதமர் பணிப்புரை வழங்கினார்.

நிரந்தரப் போர் நிறுத்தந்தை உரிய முறையில் நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு முப்படையினரும் பொலிஸாரும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இங்கு வந்ததும் அவர்களுக்கு படைத்தரப்பினர் முழு அளவில் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படைத்தளபதிகளிடமும் பதில் பொலிஸ்மா அதிபரிடமும் வலியுறுத்தியுள்ளார்.

உடன்படிக்கையைப் பாதிக்கும் எந்தவிதமான செயற்பாடுகளையும் இடம்பெறாதவாறு படையினரும் பொலிசாரும் இயங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் பிரதமர் படைத்தளபதிகளிடம் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முப்படைகளினதும் தளபதிகளையும் பதில் பொலிஸ்மா அதிபரையும் அழைத்துக் கலந்துரையாடியுள்ளார்.

நிரந்தரப் போர் நிறுத்தம் எந்த வகையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை ஆராயும் பொருட்டே இந்தச் சந்திப்பு அலரிமாளிகையில் இடம் பெற்றுள்ளது.

இராணுவத் தளபதி மேஜர் ஜெரனல் லயனல் பலகல்ல. கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் லால் சந்தகிரி. விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி. பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பி.ஆனந்தராஜா ஆகியோரும் அமைச்சரவைப் பேச்சாளரும் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் விஞ்ஞான தொழில்நுட்பவள பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொடவும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

போர் நிறுத்தம் தொடர்பான விதப்புரைகள் செயற்படக் கூடிய விதம் பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இங்கு விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் சனிக்கிழமை இங்கு வந்து சேர்ந்ததும் அவர்களுக்கு முழு அளவிலான ஒத்துழைப்பை படைத்தரப்பினர் பெற்றுக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் எடுத்துக் கூறியுள்ளார்.

போர் நிறுத்த காலத்தில் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் குறைபாடுகள் தாக்குதல்கள் ஏற்படுமானால் அவற்றுக்கு எந்தவகையில் முகம் கொடுப்பது என்பது பற்றியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படைத்தளபதிகளுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

**புலவர் சிவானாதனின் "கையெழுத்திட்டான் கரிகாலன் சோழன் மையாலல்ல, மாண்டவர் உயிரால்" என்ற கவிதை அடுத்த வாரம் பிரசுரமாகும்**

## கண்காணிப்புக் குழுவில் பொதுமக்கள்:
### ஊடகவியலாளர் சந்திப்பில் கரிகாலன் தெரிவிப்பு

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவில் புலிகள் சார்பில் பொதுமக்கள் தெரிவாவர்.

-கரிகாலன் தகவல்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவில் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் பொதுமக்கள் தரப்பிலிருந்தே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பகுதியிலிருந்து ஒருவரும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து ஒருவரும் பகுதிலிருந்து ஒருவரும் நியமிக்கப்படவுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் சட்டத்தரணி ஒருவர் உட்பட இரு தமிழ் பிரதிநிதிகளை நியமிக்க இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மட்டக்கள்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறை தலைவர் கரிகாலன் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையிலுள்ள மாவட்ட செயலகத்தில் புதன் மாலை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

போர் நிறுத்த கண்காணிப்பு குழுவில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் நேரடியாக அங்கம் வகிக்க மாட்டார்கள். போர் நிறுத்தத்தை கண்காணிக்க வேண்டிய பொருப்பு பொதுமக்களுக்கு உண்டு.

இன்னும் ஓரிரு தினங்களில் கண்காணிப்பு குழுவில் இடம் பெறும் நான்கு உறுப்பினர்களின் பெயர்களை அறிவிப்போம். பொது மக்கள் தரப்பிலிருந்து சில பெயர்கள் எமக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர். அதில் பொருத்தமானவர்கள் யாரென்பது குறித்து தீர்க்கமாக ஆராய்ந்து வருகிறோம்.

<u>அதை முன்னிட்டு வவுனியா நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது.</u>

<u>சிவப்பு. மஞ்சள் கொடிகளினால் நகரம் அலங்கரிக்கப்பட்டுள்ளது.</u>

தூங்கிய தமிழினமே துடித்து எழு அடிமைத்தனம் நீங்கி அகிலம் போற்றிட பொங்கி எழு என்ற வாசகங்கள் கொண்ட பதாகைகள் வவுனியா நகரின் பல இடங்களிலும் காட்சி தருகின்றன. வர்த்தக நிலையங்கள் தனியார் கட்டிடங்கள் வாகனங்கள் வீடுகளில் சிவப்பு மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. பொங்கு தமிழ் காலப்பகுதியில் சகல களியாட்ட நிகழ்வுகளையும் நிறுத்துமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டள்ளனர்.

மக்களுடைய உள்ளக் குமுறல்களை ஓட்டு மொத்தமாக அரசுக்கு வெளிப்படுத்தவும் உலகிற்கு தெரியப்படுத்தவுமே இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

BRINDEEN
VIDEO VISION
வோல்தம்ஸ்ரோவில்
பெயர்பெற்ற ஒரேயொரு
வீடியோ ஸ்தாபனம்

ஒரிஜினல் வீடியோ பிரதிகள் விற்பனைக்கும் வாடகைக்கும்
Best Quality DVD, VCD and Video Cassettes, for sale and Rental
Audio CDs & Cassettes on sale, Electrical Appliances Repaired
Video Filming
76 Hoe Street, Walthamstow, London E17
Tel: 020 8520 5403 Mobile: 07733 353 218, 07957 110 093

படிப்பகம்